# பாரதியார் பல்கலைக்கழகம்

**கோயம்புத்தூர் – 641 046**

***இளங்கலை - அறிவியல் பட்டப்படிப்பில் முதலாண்டு, தமிழ் பயில்வோர்க்குரியது***

*(அனைத்து இளநிலைப் (UG) பட்டவகுப்பு மாணவர்க்குரியது)*

(B.A., B.Sc., B.Com., B.B.M., B.C.S., etc.)

# செய்யுள் – உரைநடைத் திரட்டு

*(மானுடச் சிறப்பியல் சார்ந்தது)*

*2007 -2008 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது*

*இரண்டாம் பருவம்*

*பகுதி I தமிழ்*

# அறிமுகவுரை

பள்ளிக் கல்வி நிறைவடைந்து பல்கலைக்கழகக் கல்விக்கு வரும் பட்டவகுப்பு மாணவர்தம் கருத்துப் பரிமாற்றத்திறன் (Communicative skill) சிந்தனைத்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை வளர்த்து, வாழ்வியல் விழுமியங்களை உணரச் செய்து, தேசிய உலக ஒருமைப் பாட்டுணர்வை மனத்தில் இருத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நேர்முக எண்ணம் (Positive thinking) வலுப்பெறும் வகையில் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

முதற் பருவத்தில், நாட்டுப்பற்று, சமூகம் , பெண்ணியம் குறித்த விழுமியங்கள் சார்ந்த கவிதைகளும், கருத்துப் பரிமாற்றத்திறனுக்கு அடிப்படையாக உள்ள இலக்கணப் பகுதியும், பயிற்சிப் பகுதியும், தன் சுய சிந்தனையுடன் படைப்பாக்கச் சிந்தனைத் திறனை வளர்த்தெடுக்கும் வகையில் சிறுகதைப் பகுதியும், காலவோட்டத்துடன் இணைந்து சிந்திக்கும் ஆற்றலைப் பெறும் வகையில் இலக்கிய வரலாற்றுப் பகுதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் பருவத்தில், மானுடச் சிறப்பியலை (Human Excellence) மையப்படுத்தி, அதன் புரிதிறனை மேம்படுத்தும் வகையில் செய்யுட் பகுதிகளும் உரைநடைக் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை மாணவர்கள் கருத்தூன்றிக் கற்றுப் பயன்பெறுவார்களாக.

தற்கால மாணவர் நிலையைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்; கருத்துப் பரிமாற்றத் திறனுக்கும் மானுடச் சிறப்பிற்கும் முதன்மையிடம் அளிக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் ஊக்கப்படுத்தியும், அதற்கான செயற்பாட்டுப் பொறுப்பை ஏற்றும் பல்லாற்றானும் உதவிய மேன்மைமிகு துணைவேந்தர் அவர்களுக்கும், பாடத்திட்டக்குழுக் கூட்டத்திற்கும் மற்ற பணிகளுக்கும் அன்புடன் துணை நின்ற மதிப்பிற்குரிய பதிவாளர் அவர்களுக்கும், நூலாக்கப் பணிக்குத் துணைநின்ற பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கும் பாடத்திட்டக் குழுவினரின் நன்றி உரியது.

**பாடத்திட்டக் குழுவினர்**

# இரண்டாம் பருவம்

## தமிழ் : தாள் 2 - பாடத்திட்டம்

*செய்யுள்- உரைநடைத்திரட்டு ( மானுடச்சிறப்பியல் சார்ந்தது )*

*பல்கலைக்கழக வெளியீடு.ஜூன் 2007*

*அலகு 1.*

*திருக்குறள்*

*நாலடியார்*

*அலகு 2.*

*பாரதிதாசன்*

*முருகு சுந்தரம்*

*அலகு 3.*

*உரைநடை முதல் 4 கட்டுரைகள்*

*அலகு 4.*

*உரைநடை 5 முதல் 7 வரை உள்ள கட்டுரைகள்*

*அலகு 5. இலக்கிய வரலாறு ( பாடத்திட்டத்தைத் தழுவியது )*

*1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்*

*2. தமிழ் உரைநடையின் தோற்றமும் வளர்ச்சியும்*

*பயிற்சிக்குரியன*

*1. இலக்கிய வரலாறு - கட்டுரைகள் எழுதச் செய்தல்*

*2. விண்ணப்பங்கள், மடல்கள் எழுதச் செய்தல்*

# இரண்டாம் பருவம்

## பொருளடக்கம்

### செய்யுட் பகுதி


1. பெரியாரைத் துணைக்கோடல் - திருக்குறள்

2. ஆள்வினை உடைமை - திருக்குறள்

3. நட்பிற் பிழை பொறுத்தல் - நாலடியார்

4. அவை அறிதல் - நாலடியார்

5. சஞ்சீவி பர்வதத்தின் சாரல் - பாரதிதாசன்

6. எடுத்துயர்த்தும் குறிக்கோள் - முருகு சுந்தரம்


### உரைநடைப் பகுதி


1. ஆசைகளைச் சீரமைத்தல் - அறிஞர் குழு
உலக சமுதாய சேவா சங்கம்
ஆழியாறு

2. சமூக மதிப்பீடுகளை உயர்த்தும் கல்வி - டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்

3. தியாகமற்ற வழிபாடு - காந்திய அணுகல் - சு. பாண்டியன்

4. பெரியார் உணர்த்தும் சுயமரியாதையும் சமதர்மமும் - வே. ஆனைமுத்து

5. தமிழர் பண்பாடு - ஒரு விளக்கம் - டாக்டர் சோ.நா. கந்தசாமி

6. புதிர் எதிர் காலம் - டாக்டர் சிற்பி. பாலசுப்பிரமணியம்

7. இணைச்சிந்தனைகள் - கி.வீரமணி

# திருக்குறள்

## 1. பெரியாரைத் துணைக்கோடல்

அறன் அறிந்து மூத்த அறிவு உடையார் கேண்மை,
திறன் அறிந்து, தேர்ந்து, கொளல்

உற்ற நோய் நீக்கி, உறா அமை முன் காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்

அரியவற்றுள் எல்லாம் அரிதே - பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்,
வன்மையுள் எல்லாம் தலை.

சூழ்வார் கண் ஆக ஒழுகலான், மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

தக்கார் இனத்தனாய்த் தான் ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,
கெடுக்கும் தகைமை யவர்?

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்,
கெடுப்பார் இலானும், கெடும்.

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை மதலைஆம்
சார்பு இலார்க்கு இல்லை, நிலை.

பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

## 2. ஆள்வினை உடைமை

அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் - வினைக் குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடிகை
வாள் ஆண்மை போலக் கெடும்

இன்பம் விழையான், வினை விழைவான் தன் கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும் தூண்.

முயற்சி, திருவினை ஆக்கும்: முயற்று இன்மை
இன்மை புகுத்தி விடும்.

மடி உளாள், மா முகடி என்ப: மடி இலான்
தாள் உளாள், தாமரையினாள்

பொறி இன்மை யார்க்கும் பழி அன்று: அறிவு அறிந்து,
ஆள்வினை இன்மை பழி.

தெய்வத்தான் ஆகாது எனினும், முயற்சிதன்
மெய் வருத்தக்கூலி தரும்

ஊழையும் உப்பக்கம் காண்பர் - உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்

## நாலடியார்

### 3. நட்பிற் பிழை பொறுத்தல்

நல்லார் எனத் தாம் நனி விரும்பிக் கொண்டாரை,
அல்லார் எனினும், அடக்கிக் கொளல் வேண்டும்
நெல்லுக்கு உமி உண்டு நீர்க்கு நுரை உண்டு
புல் இதழ் பூவிற்கும் உண்டு.

செறுத்தோறு உடைப்பினும், செம் புனலோடு ஊடார்,
மறுத்தும் சிறைசெய்வர், நீர் நசைஇ வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும், பொறுப்பரே,
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு.

இறப்பவே தீய செயினும், தன் நட்டார்
பொறுத்தல் தகுவது ஒன்று அன்றோ? நிறக் கோங்கு
உருவ வண்டு ஆர்க்கும் உயர் வரை நாட!
ஒருவர் பொறை இருவர் நட்பு.

மடி திரை தந்திட்ட வான் கதிர் முத்தம்
கடு விசை நாவாய் கரை அலைக்கும் சேர்ப்ப!
விடுதற்கு அரியார் இயல்பு இலரேல், நெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

இன்னா செயினும், விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல் வேண்டும் - பொன்னோடு
நல்இல் சிதைத்த தீ நாள்தொறும் நாடித் தம்
இல்லத்தில் ஆக்குதலால்.

இன்னா செயினும், விடுதற்கு அரியாரைத்
துன்னாத் துறத்தல் தகுவதோ? - துன்ன அருஞ் சீர்
விண் குத்தும் நீள் வரை வெற்ப! - களைபவோ,
கண் குத்திற்று என்று தம் கை?

இலங்கு நீர்த் தண் சேர்ப்ப! இன்னா செயினும்,
கலந்து பழி காணார், சான்றோர் கலந்தபின்,
தீமை எடுத்து உரைக்கும் திண் அறிவு இல்லாதார்
தாமும், அவரின் கடை.

ஏதிலார் செய்தது இறப்பவே தீது எனினும்,
நோதக்கது என் உண்டாம், நோக்குங்கால்? காதல்
கழுமியார் செய்த, - கறங்கு அருவி நாட!
விழுமிதாம், நெஞ்சத்துள் நின்று.

தமர் என்று தாம் கொள்ளப்பட்டவர் தம்மைத்
தமர் அன்மை தாம் அறிந்தார் ஆயின், அவரைத்
தமரினும் நன்கு மதித்து, தமர் அன்மை
தம்முள் அடக்கிக்கொளல்!

குற்றமும், ஏனைக் குணமும், ஒருவனை
நட்டபின் நாடித் திரிவேனேல், நட்டான்
மறை காவா விட்டவன் செல்வுழிச் செல்க,
அறை கடல் சூழ் வையம் நக!

### 4. அவை அறிதல்

மெய்ஞ் ஞானக் கோட்டி உறழ்வழி விட்டு, ஆங்கு ஓர்
அஞ்ஞானம் தந்திட்டு, அது ஆங்கு அறத் துழாய்
கைஞ் ஞானம் கொண்டு ஒழுகும் காரறிவாளர் முன்
சொல் ஞானம் சோர விடல்!

நாப் பாடம் சொல்லி நயம் உணர்வார்போல் செறிக்கும்
தீப் புலவற் சேரார், செறிவுடையார் தீப் புலவன்
கோட்டியுள், குன்றக் குடி பழிக்கும், அல்லாக்கால்
தோள் புடைக்கொள்ளா எழும்.

சொல்-தாற்றுக் கொண்டு சுனைத்து எழுதல் காமுறுவர்
கற்ற ஆற்றல் வன்மையும் தாம் தேறார், கற்ற
செல உரைக்கும் ஆறு அறியார், தோற்பது அறியார்,
பல உரைக்கும் மாந்தர் பலர்

கற்றதூஉம் இன்றி, கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதை ஓர் சூத்திரம்: மற்று அதனை
நல்லாரிடைப் புக்கு, நாணாது சொல்லி, தன்
புல்லறிவு காட்டிவிடும்

வென்றிப் பொருட்டால் விலங்கு ஒத்து, மெய் கொள்ளார்,
கன்றிக் கறுத்து எழுந்து, காய்வாரோடு ஒன்றி,
உரை வித்தகம் எழுவார் காண்பவே, கையுள்
சுரை வித்துப் போலும் தம் பல்.

பாடமே ஓதிப் பயன் தெரிதல் தேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால், கேடு அருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே, மற்று அவரை
ஈன்றாட்கு இறப்பப் பரிந்து.

பெறுவது கொள்பவர் தோள்போல், நெறிபட்டுக்
கற்பவர்க்கு எல்லாம் எளிய, நூல்: மற்று அம்
முறிபுரை மேனியர் உள்ளம் போன்று, யார்க்கும்
அறிதற்கு அரிய, பொருள்.

புத்தகமே சாலத் தொகுத்தும், பொருள் தெரியார்,
உய்த்து, அகம் எல்லாம் நிறைப்பினும், மற்று அவற்றைப்
போற்றும் புலவரும் வேறே: பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், இந் நான்கின்
கொழித்து, அகலம் காட்டாதார் சொற்கள், - பழிப்புஇல்
நிரை ஆமா சேக்கும் நெடுங் குன்ற நாட!-
உரை ஆமோ, நூலிற்கு நன்கு?

இற் பிறப்பு இல்லார் எனைத்துநூல் கற்பினும்,
சொல் பிறரைக் காக்கும் கருவியரோ? இற் பிறந்த
நல் அறிவாளர், நவின்ற நூல் தேற்றாதார்
புல்லறிவு தாம் அறிவது இல்.

## 5. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

**-பாரதிதாசன்**

*குயில்கூவிக் கொண்டிருக்கும்: கோலம் மிகுந்த*
*மயிலாடிக் கொண்டிருக்கும்: வாசம் உடையநற்*
*காற்றுக் குளிர்ந்தடிக்கும்: கண்ணாடி போன்றநீர்*
*ஊற்றுக்கள் உண்டு: கனிமரங்கள் மிக்கஉண்டு:*
*பூக்கள் மணங்கமழும் பூக்கள்தோறும் சென்றுதே*
*னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்:*
*வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு:*
*காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு.*
*நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த இடத்தைத்தான்*
*சஞ்சீவி பர்வதத்தின் சாரலென்று சொல்லிடுவார்.*

*சஞ்சிவி பர்வதத்தின் சாரலிலே ஓர்நாளில்*
*கொஞ்சம் குறையமணி நான்காகும் மாலையிலே*
*குப்பன்எனும் வேடக் குமரன் தனியிருந்து*
*செப்புச் சிலைபோலே தென்திசையைப் பார்த்தபடி*
*ஆடா தசையாமல் வாடிநின்றான் சற்றுப்பின்,*
*வாடாத பூமுடித்த வஞ்சிவரக் கண்டான்.*
*வரக்கண்ட தும்குப்பன் வாரி அணைக்கச்*
*சுரக்கின்ற காதலொடு சென்றான் தொடாதீர்கள்!*
*என்றுசொன் னாள்வஞ்சி இளையான் திடுக்கிட்டான்.*
*குன்றுபோல் நின்றபடி குப்பன் உரைக்கின்றான்:*

*“கண்ணுக்குள் பாவையே! கட்டமுதை நான்பசியோ*
*டுண்ணப்போம் போதுநீ ஓர்தட்டுத் தட்டிவிட்டாய்!*
*தாழச் சுடுவெய்யில் தாளாமல் நான்குளிர்ந்த*
*நீழலைத்தா வும்போது நில்என்று நீ தடுத்தாய்!*
*தொட்டறிந்த கையைத் தொடாதேஎன் றாய்நேற்றுப்*
*பட்டறிந்த தேகசுகம் விட்டிருக்கக் கூடுவதோ?*
*உன்னோடு பேச ஒருவாரம் காத்திருந்தேன்*
*என்னோடு முந்தாநாள் பேச இணங்கினாய்*
*நேற்றுத்தான் இன்பக் கரைகாட்டி னாயின்று*
*சேற்றிலே தள்ளிவிட்டாய்! காரணமும் செப்பவில்லை*

என் றுரைக்கக் கேட்ட இளவஞ்சி, காதலரே!
அன் றுநீர் சொன்னபடி அவ்விரண்டு மூலிகையைச்
சஞ்சீவி பர்வதத்தில் தையலெனைக் கூட்டிப்போய்க்
கொஞ்சம் பறித்துக் கொடுத்தால் உயிர்வாழ்வேன்.
இல்லையென்றால் ஆவி யிராதென்றாள். வேட்டுவன்
கல்லில் நடந்தால்தஉன் கால்கடுக்கும் என் றுரைத்தான்.
காலிரண்டும் நோவதற்குக் காரணமில் லைநெஞ்சம்,
மூலிகையி ரண்டின்மேல் மொய்த்திருப்ப தால்என்றாள்
பாழ்விலங்கால் அந்தோ படுமோசம் நேருமென்றான்
வாழ்விலெங்கும் உள்ள துதான் வாருங்கள் என் றுரைத்தாள்

அவ்விரண்டு மூலிகையின் அந்தரங்கம் அத்தனையும்
இவ்விடத்திற் கேட்டுக்கொள் என் றுரைப் பான் குப்பன்
ஒன்றைத்தின் றாலிவ் வுலகமக்கள் பேசுவ து
நன்றாகக் கேட்கும்மற் றொன்றைவா யில்போட்டால்
மண்ணுலகக் காட்சியெலாம் மற்றிங் கிருந்தபடி
கண்ணுக் கெதிரிலே காணலாம் சொல்லிவிட்டேன்
ஆதலால் மூலிகையின் ஆசை தணிஎன்றான்.
மோதிடுதே கேட்டபின்பு மூலிகையில் ஆசையென்றாள்,
என்னடி பெண்ணேநான் எவ்வளவு சொன்னாலும்
சொன்னபடி கேட்காமல் தோஷம் விளைக்கின்றாய்

பெண்ணுக் கிதுதகுமோ? வண்ணமலர்ச் சோலையிலே,
எண்ணம்வே றாகி யிருக்கின்றேன் நானென் று
கண்ணையவள் கண்ணிலிட்டுக் கையேந்தி நின்றிட்டான்.
பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென் கின்றீரோ?
மண்ணுக்குங் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.
ஊமையென் று பெண்ணை யுரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு.
புலனற்ற பேதையாய்ப் பெண்ணைச் செய் தால்அந்

நிலம்விளைந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே
சித்திரம்போற் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரதநற்
புத்திரரைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது?
சற் றுந் தயங்கேன் தனியாய்ச்சஞ் சீவிமலை
உற்றேறி மூலிகையின்உண்மை அறிந்திடுவேன்

மூலிகையைத் தேட முடியாவிட் டால்மலையின்
மேலிருந்து கீழே விழுந்திறக்க நானறிவேன்
ஊரிலுள்ள பெண்களெல்லாம் உள்ளத்தைப் பூர்த்திசெயும்
சீரியர்க்கு மாலையிட்டுச் சீரடைந்து வாழ்கின்றார்
தோகை மயிலே! இதைநீகேள் சொல்லுகின்றேன்

நாகம்போல் சீறுகின்ற நாதரிடம் சொல்லிவிடு
பச்சிலைக்குச் சஞ்சீவி பர்வதம்செல் வேனென்றாள்.
அச்சுப் பதுமையே! ஆரணங்கே! நில்லேடி!
நானும் வருகின்றேன் நாயகியே! நாயகியே!
ஏனிந்தக் கோபம்? எழிலான காதலியே!
என்றுகுப்பன் ஓடி இளவஞ்சி யைத்தழுவி
நின்றான். இளவஞ்சி நின்று மகிழ்வுற்றாள்
அவ்விரண்டு மூலிகையில் ஆரணங்கே நீஆசை
இவ்வளவு கொண்டிருத்தல் இப்போது தானறிந்தேன்.
கூட்டிப்போய்ப் பச்சிலையைக் கொய்து தருகின்றேன்;

நீட்டாண்மைக் காரி! எனக்கென்ன நீதருவாய்?
என்று மொழிந்தான் எழுங்காத லால்குப்பன்.
முன்னே இலைகொடுத்தால் முத்தம் பிறகென்றாள்.
என்கிளியே நீமுத்தம் எத்தனைஈ வாயென்றான்?
என்றன் கரத்தால் இறுக உமைத்தழுவி
நோகாமல் முத்தங்கள் நூறுகொடுப் பேனென்றாள்.
ஆகையால் ஓர்முத்தம் அச்சாரம் போடென்றான்
கேலிக்கு நேரம் இதுவல்ல கேளுங்கள்
மூலிகைக்குப் பக்கத்தில் முத்தம் கிடைக்குமென்றாள்.
குப்பன் தவித்திட்டான் காதற் கொடுமையினால்

எப்போது நாம்உச்சிக் கேறித் தொலைப்பதென
அண்ணாந்து பார்த்திட்டான் அம்மலையின் உச்சிதனை!
கண்ணாட்டி தன்னையும்ஓர் கண்ணாற் கவனித்தான்.
வஞ்சிஅப் போது மணாளன் மலைப்பதனைக்
கொஞ்சம் அவமதித்துக் கோவை உதடு
திறந்தாள், திறந்து சிரிக்குமுன், குப்பன்
பறந்தான் பருவதமேல் பாங்கியையும் தூக்கியே,
கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ!
கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்

மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர்கடுகாம்.
மாமலைதான் சென்னி வளைந்து கொடுத்ததுவோ
நாம் மலைக்கக் குப்பன் விரைவாய் நடந்தானோ
மங்கையினைக் கீழிறக்கி, மாதே! இவைகளே
அங்குரைத்த மூலிகைகள், அட்டியின்றிக் கிள்ளிக்கொள்
என்றுரைத்தான் குப்பன். இளவஞ்சி தான்மகிழ்ந்து
சென்று பறித்தாள். திரும்பிச் சிறிதுவழி
வந்தார்கள். அங்கோர்மரத்து நிழலிலே
சிந்தை மகிழ்ந்து சிறக்க அமர்ந்தார்கள்.
மூலிகையில் ஓர்இனத்தை முன்னே இருவருமாய்

ஞாலத்துப் பேச்சறிய நாக்கிலிட்டுத் தின்றார்கள்.
வஞ்சிக்கும் குப்பனுக்கும் வையத்து மாந்தர்களின்
நெஞ்சம் வசமாக நேரிலவர் பேசுதல்போல்
செந்தமிழில் தங்கள் செவியிற்கேட் கப்பெற்றார்.
அந்த மொழிகள் அடியில் வருமாறு:
இத்தாலி தேசம் இருந்துநீ யிங்கு வந்தாய்
பத்துத் தினமாகப் பாங்காய் உணவுண்ண
இவ்விடுதி தன்னில் இருந்து வருகின்றாய்!
எவ்வாறு நான்சகிப்பேன் இந்தக் கறுப்பன்
எனக்கெதிரே உட்கார்ந் திருப்பதனை என்றாய்:

தனக்கெனவே நல்லுணவுச் சாலைஒன் றுண்டாக்கி
அங்கவன் சென்றால் அடுக்கும் எனஉரைத்தாய்?
இத்தாலிச் சோதரனே! என்ன மதியுனக்கே?
செத்து மடிவதிலும் சேர்ந்து பிறப்பதிலும்
இவ்வுலக மக்களிலே என்னபே தங்கண்டாய்?
செவ்வைபெறும் அன்பில்லார் தீயபே தம்கொள்வார்.
எங்கள் பிராஞ்சியர்கள் இப்பேதம் பாராட்டித்
தங்கள் பழங்கீர்த்தி தாழ்வடைய ஒப்பார்கள்:
பேதபுத்தி சற்றும் பிடிக்காது போ! போ! போ!
பேதம்கொண் டோர்க்குப் பிராஞ்சில் இடமில்லை.

என்ற மொழிக ளிவர்காதில் கேட்டவுடன்
நன்று பிராஞ்சியர்க்கு நாக்குளிர வாழ்த்துரைத்தார்.
பின்னர் அமெரிக்கன் பேசுவதைக் கேட்டார்கள்
அன்னவன் பேச்சும் அடியில் வருமாறு:
நல்ல அமெரிக்கன் நானிலத்தில் வாழ்கின்ற
எல்லாரும் நன்றாய் இருக்க நினைத்திடுவான்

பொல்லா அமெரிக்கன் பொன்னடைந்து தான்மட்டும்
செல்வனாய் வாழத் தினமும் நினைத்திடுவான்
நல்லவனாய் நானிருக்க நாளும் விரும்புகிறேன்
சொல்லும் இதுகேட்ட தோகையும் குப்பனும்

கொத்தடிமை யாகிக் குறைவுபடும் நாட்டுக்கு
மெத்ததுணை யாகியிவன் மேன்மை அடைகவென்றார்
இங்கிலாந்து தேசம் இருந்தொருவன் பேசினான்
இங்கிருந்து கேட்டார் இருவரும் என்னவென்றால்
ஓ! என் சகோ தரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது
வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்:
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்
ஏகமன தாகி அவர்நம்மை எதிர்ப்பதெங்கே?

பேதம் வளர்க்கப் பெரும்பெரும்பு ராணங்கள்!
சாதிச் சண்டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!
கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்
தேன்சுரக்கப் பேசிஇந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்
இந்த உளைச்சேற்றை ஏறாத ஆழத்தை
எவ்விதம் நீங்கி நம்மையெதிப்பார்? இன்னமும்
சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி

ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படுமங்கே
இந்த நிலையிற் சுதந்திரப் போரெங்கே?
கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே?
தேகம் அழிந்துவிடும்: சுற்றத்தார் செத்திடுவார்:
போகங்கள் வேண்டாம் பொருள்வேண்டாம் மற்றவிதம்
பாமுலகம் பொய்யே பரமபதம் போ என்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.

சாதிப்பிரிவு சமயப் பிரிவுகளும்
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச்செய் தால்நமையும் ஓடச்செய் வார்என்பேன்.
இந்தப் பிரசங்கம் இவ்விருவர் கேட்டார்கள்:
சொந்த நிலைக்குத் துயருற்றார், வஞ்சி
சிலைபோல் இருந்தாள்: திகைத்தாள்: பின் நாட்டின்
நிலையறிய நேர்ந்தது பற்றி மகிழ்ந்திட்டாள்!
பச்சிலையில் நல்ல பலன்விளையும் என்று சொன்னாள்!
பச்சிலையைத் தந்த பருவதத்தைக் கும்பிட்டாள்
இந்த இலையால் இனிநன்மை கொள்க என்று

சொந்தத்தாய் நாட்டுக்குச் சொன்னாள் பெருவாழ்த்து
வல்லமைகொள் பச்சிலையின் மர்மத்தைக் கண்டபடி
சொல்லி எனைத் தூக்கிவந்து சூட்சுமத்தைக் காட்டியகண்
ணாளர்தாம் வாழ்வடைக என்றாள்: அவனுடைய
தோளை ஒருதரம் கண்ணாற் சுவைபார்த்தாள்
அச்சமயம் குப்பன், அழகியதன் தாய்நாட்டார்
பச்சைப் பசுந்தமிழில் பேசுவதைக் கேட்டிருந்தான்
குப்பனது தோளில் குளிர்ந்தமலர் ஒன்றுவிழ
இப்பக்கம் பார்த்தான் வஞ்சி இளங்கையால்
தட்டிய தட்டென்று சந்தேகம் தீர்ந்தவனாய்க்

கட்டிக் கரும்பே! கவனம் எனக்கு
நமது தேசத்தில் நடக்கின்ற பேச்சில்
அமைந்து கிடக்குதென்றான் வஞ்சி அதுகேட்டே
அன்னியர்கள் பேசுவதில் அன்பைச் செலுத்துங்கள்.
கன்னத்தை மாத்திரம்என் கையிற் கொடுங்களென்றாள்
அன்பும் உனக்குத்தான் ஆருயிரும் உன்னதுதான்
இன்பக் கிளியே! எனக்களிப்பாய் முத்தமென்றான்
கையோடு கை கலந்தார்: முத்தமிடப் போகையிலே
ஐயையோ! ஐயையோ! என்ற அவலமொழி
காதிலே வீழ்ந்தது முத்தம் கலைந்ததே

ஈதென்ன விந்தை! எழில்வஞ்சி! கேள்என்றான்
வஞ்சி கவனித்தாள் சத்தம் வரும்வழியாய்!
நெஞ்சைச் செலுத்தினார் நேரிழையும் காதலனும்
ஓர்நொடியிற் சஞ்சீவி பர்வதத்தை ஓடிப்போய்

வேரோடு பேர்த்துவர வேண்டுமே ஐயாவே?
இப்பாழும் வாக்கை இருவரும் கேட்டார்கள்
குப்பன் மிகப்பயந்து கோதைமுகம்பார்த்திட்டான்
வஞ்சி யவள்நகைத்தே இன்ப மணாளரே!
சஞ்சீவி பர்வதத்தைத் தாவிப் பெயர்க்கும்
மனிதரும் இல்லை! மலையும் அசையா

தினிஅந்தச் சத்தத்தில் எண்ணம் செலுத்தாதீர்
என்றுரைத்தாள் வஞ்சி. இதுசொல்லித் தீருமுன்
நன்றாக உங்களுக்கு ராமன் அருளுண்டு
வானம் வரைக்கும் வளரும் உடலுண்டே
ஏனிங்கு நின்றீர்? எடுத்துவரு வீர்மலையை
என்றஇச் சத்தம் இவர்செவியில் வீழ்ந்தவுடன்
குன்று பெயர்வது கொஞ்சமும் பொய் யல்லவென்று
குப்பன் நடுநடுங்கிக் கொஞ்சுமிள வஞ்சியிடம்
மங்கையே ராமனருள் வாய்ந்தவனாம் வானமட்டும்
அங்கம் வளர்வானாம் அப்படிப் பட்டவனை

இந்தச் சஞ்சீவிமலை தன்னை யெடுத்துவர
அந்த மனிதனங்கே ஆணை யிடுகின்றான்
நாலடியில் இங்கு நடந்துவந்து நாம்மலையின்
மேலிருக்கும் போதே வெடுக்கென்று தூக்கிடுவான்
இங்கு வருமுன் இருவரும் கீழிறங்கி
அங்குள்ள சாரல் அடைந்திடுவோம் வாவென்றான்.
ராமனெங்கே! ராமன் அருளெங்கே! சஞ்சீவி
மாமலையைத் தூக்குமொரு வல்லமைஎங் கேஇவற்றில்
கொஞ்சமும் உண்மை இருந்தால்நாம் கொத்தவரைப்
பிஞ்சுகள்போல் வாடிப் பிழைப்பதரி தாகி

அடிமையாய் வாழோமே? ஆண்மையும் இன்றி
மிடிமையில் ஆழ்ந்து விழியோமே? என்றந்த
வஞ்சி யுரைத்தாள் பின் மற்றோர் பெருஞ்சத்தம்
அஞ்சுகின்ற குப்பன் அதிரச்செய் திட்டதே.
அம்மலையை ஓர்நொடியில் தூக்கிவந் தையாவே
உம்எதிரில் வைக்கின்றேன் ஊஹூஹூ ஊஹூஹூ

குப்பன் பதைத்தான் குடல்அறுந்து போனதுபோல்
எப்படித்தாம் நாம்பிழைப்போம்? ஏதும் அறிகிலேன்
சஞ்சீவி பர்வதத்தைத் தாவித் தரையோடு
பஞ்சிருக்கும் மூட்டைபோல் பாவி அவன்எவனோ
தூக்குகின்றான்! வஞ்சி! சுகித்திருக்க எண்ணினையே!

சாக்காடு வந்ததடி! தக்கவிதம் முன்னமே
நம்பென்று நான்சொன்ன வார்த்தையெலாம் நம்பாமல்
வம்பு புரிந்தாய்! மலையும் அதிர்ந்திடுதே!
முத்தம் கொடுத்து முழுநேர மும்தொலைத்தாய்
செத்துமடி யும்போது முத்தம் ஒருகேடா?
என்றனுயி ருக்கே எமனாக வாய்த்தாயே!
உன்றன் உயிரைத்தான் காப்பற்றிக் கொண்டாயா?
தூக்கிவிட்டான்! தூக்கிவிட்டான்! தூக்கிப்போய்த் தூளாக
ஆக்கிச் சமுத்திரத்தில் அப்படியே போட்டிடுவான்!
எவ்வாறு நாம்பிழைப்போம்? ஏடி, இதைநீதான்

செவ்வையாய் யோசித்துச் செப்பாயோ ஓர்மார்க்கம்?
என்று துடிதுடிக்கும் போதில் இளவஞ்சி
நின்று நகைத்துத்தன் நேசனைக் கையால் அணைத்தே
இப்புவிதான் உண்டாகி எவ்வளவு நாளிருக்கும்
அப்போது தொட்டிந்தஅந்திநே ரம்வரைக்கும்
மாமலையைத் தூக்கும் மனிதன் இருந்ததிலை
ஓமண வாளரே! இன்னம் உரைக்கின்றேன்
மன்னும் உலகம் மறைந்தொழியும் காலமட்டும்
பின்னும் மலைதூக்கும் மனிதன் பிறப்பதில்லை
அவ்வாறே ஓர்மனிதன் ஆகாயம் பூமிமட்டும்

எவ்வாறு நீண்டு வளருவான்? இல்லைஇல்லை
காதல் நிசம்இக் கனிமுத்தம் மிக்கஉண்மை
மாதுதோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்
நம்புங்கள் மெய்யாய் நடக்கும்விஷ யங்களிவை
சம்பவித்த உண்மை அசம்பாவத்தால் தாக்குறுமோ?
வாழ்க்கை நதிக்கு, வீண் வார்த்தைமலை யும்தடையோ?
வாழ்த்தாமல் தூற்றுகின்றீர் வந்துநிற்கும் இன்பத்தைப்
பொய்யுரைப்பார் இந்தப் புவியைஓர் சிற்றெறும்பு

கையால் எடுத்ததென்பார் ஐயோஎன் றஞ்சுவதோ?
முத்தத்தைக் கொள்க முழுப்பயத்தில் ஒப்படைத்த

சித்தத்தை வாங்கிச் செலுத்துங்கள் இன்பத்தில்
என்றுரைத்தாள் வஞ்சி, இதனாற் பயனில்லை:
குன்று பெயர்ந்ததென்று குப்பன் மனம்அழிந்தான்:
இந்நேரம் போயிருப்பார்! இந்நேரம்பேர்த்தெடுப்பார்!
இந்நேரம் மேகத்தில ஏறிப் பறந்திடுவார்:
உஸ்என்று கேட்குதுபார் ஓர்சத்தம் வானத்தில்!
விஸ்வரூ பங்கொண்டு மேலேறிப் பாய்கின்றார்
இம்மொழிகேட் டான்குப்பன் ஐயோ எனஉரைத்தான்
அம்மட்டும் சொல்லத்தான் ஆயிற்றுக் குப்பனுக்கே
உண்மை யறிந்தும் உரைக்கா திருக்கின்ற

பெண்ணான வஞ்சிதான் பின்னும் சிரித்து
மனதை விடாதீர் மணாளரே காதில்
இனிவிழப் போவதையும் கேளுங்கள் என்றுரைத்தாள்
வஞ்சியும் குப்பனும் சத்தம் வரும்வழியில்
நெஞ்சையும் காதையும் நேராக வைத்திருந்தார்:
இப்படி யாக அனுமார் எழும்பிப்போய்
அப்போது ஜாம்பவந்தன் ஆராய்ந்து சொன்னதுபோல்
சஞ்சீவி பர்வதத்தைத் தாவிப் பறந்துமே
கொஞ்சநே ரத்தில் இலங்கையில் கொண்டுவந்து
வைத்தார் உடனே மலைமருந்தின் சக்தியால்

செத்த இராமனும் லஷ்மணனும் சேர்ந்தெழுந்தார்.
உற்றிதனைக் கேட்ட குப்பன் ஓஹோ மலையதுதான்
சற்றும் அசையாமல் தான்தூக்கிப் போனானே!
லங்கையிலே வைத்தானே! லங்கையில்நாம் தப்போமே!
என்றான், நடுக்கம் இதயத்தில் நீங்கவில்லை
இன்னும் பொறுங்கள் என உரைத்தாள் வஞ்சி.
பெரும்பாரச் சஞ்சீவி பர்வதத்தைப் பின்னர்
இருந்த இடத்தில் அநுமார் எடுத்தேகி
வைத்துவிட்டு வந்தார் மறுநிமிடம் ஆகாமுன்
செத்தார்க்குயிர்கொடுத்தார் தெண்டமும் போட்டு நின்றார்!

குப்பனிது கேட்டுக் குலுக்கென்று தான்நகைத்தான்
அப்போதே நானினைத்தேன் ஆபத்திரா தென்று

நான்நினைத்த வண்ணம் நடந்ததுதான் ஆச்சரியம்
ஏனடி! வஞ்சி! இனியச்சம் இல்லை யென்றான்
ஆனாலும் இன்னும் அரைநிமிடம் காத்திருங்கள்:
நானும் அதற்குள்ளே நாதரே உம்மையொரு
சந்தேகம் கேட்கின்றேன். தக்க விடையளிப்பீர்!
இந்த மலையில்நாம் ஏறிய பின்நடந்த
ஆச்சிரிய சம்பவந்தான் என்ன? அதையுரைப்பீர்!
பேச்சை வளர்த்தப் பிரியப் படவில்லை:

என்றாள் இளவஞ்சி, குப்பன் இசைக்கிறான்.!
என்னடி வஞ்சி! இதுவும் தெரியாதா?
நாமிங்கு வந்தோம், நமக்கோர் நலிவின்றி
மாமலையை அவ்வநுமார் தூக்கி வழிநடந்து
லங்கையிலே வைத்தது! ராமன் எழுந்ததும்,
இங்கெடுத்து வந்தே இருப்பிடத்தில் வைத்தது!
கண்ணே! மலையைக் கடுகளவும் ஆடாமல்
கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பதுபோல்
தந்திரமாய் மண்ணில் தலைகுனிந்து வைத்திட்ட
அந்தப் பகுதிதான் ஆச்சரியம் ஆகுமடி!

ஆச்சரிய சம்பவத்தைக் குப்பன் அறிவித்தான்.
பேச்செடுத்தாள்வஞ்சி: பிறகும் ஒருசத்தம்:
இம்மட்டும் இன்று கதையை நிறுத்துகின்றேன்:
செம்மையாய் நாளைக்குச் செப்புகின்றேன் மற்றவற்றைச்
சத்தியரா மாயணத்திற் சத்தான இப்பகுதி
உத்தியாய்க் கேட்டோர் உரைத்தோர்எல் லோருமே
இங்குள்ள போகங்கள் எல்லாம் அனுபவிப்பார்:
அங்குள்ள வைகுந்தம் அட்டியின்றிச் சேர்வார்கள்:
ஜானகீ காந்தஸ் மரணே! ஜயஜயராம்!
மானேசு தென்னஎன்றான் வையம்அறி யாக்குப்பன்

முன்புநான் உங்களுக்கு முத்தம் கொடுக்கையிலே
சொன்ன ஐயையோ தொடங்கி இதுவரைக்கும்
ராமாயணம்சொல்லி நாளைக் கழிக்கின்ற
ஏமாந்தார் காசுக் கெசமானன் என்றுரைக்கும்
பாகவதன் சொன்னான் பலபேரைக் கூட்டியே
ஆகியதும் இந்தஅரிய உழைப்புக்குப்
பத்தோ பதினைந் தோ பாகவதன் பெற்றிடுவான்

சித்த மலைக்கச் சிறிதுமிதில் இல்லையென்று
கையிலிருந்தஒரு காட்சிதரும் மூலிகையை
ஐயா இதைவிழுங்கி அவ்விடத்திற் பாருங்கள்

என்றந்தக் குப்பனிடம் ஈந்துதா னும்தின்றாள்
தின்றதும் தங்கள் விழியால் தெருவொன்றில்
மாளிகையி னுள்ளே மனிதக் கூட் டத்தையும்,
ஆளிவாய்ப் பாகவதன் அங்கு நடுவிலே
உட்கார்ந் திருப்பதையும் ஊர்மக்கள் செல்வதையும்
பட்டைநா மக்காரப் பாகவதன் ரூபாயைத்
தட்டிப் பார்க்கின்றதையும் சந்தோஷம் கொள்வதையும்
கண்டார்கள்: கண்டு கடகடவென் றேசிரித்தார்
வண்டு விழியுடைய வஞ்சி யுரைக்கின்றாள்:
வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்

ஆனது செய்யும் அநுமார்கள் சாம்பவந்தர்
ஒன்றல்ல: ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்
விஸ்வரூ பப்பெருமை மேலேறும் வன்மைகள்
உஸ்என்ற சத்தங்கள் அஸ்என்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்
செவ்வைக் கிருபை செழுங்கருணை அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?
உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
என்னை அசைக்க இயலாது: மானிடர்கள்

ஆக்குவதை ஆகா தழிக்குமோ? போக்குவதைத்
தேக்குமோ? சித்தம் சலியாத் திறன்வேண்டும்
மக்கள் உழைப்பில் மலையாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில் ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலைதே டல்வேண்டும்
மக்கள் உழைக்காமுன் மேலிருந்து வந்திடுமோ?
எக்கா ரணத்தாலும் இன்மையிலே உண்மையுண்டோ?
மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும் உமை
நாடா திருப்பதற்கு நானுங் களையின்று

சஞ்சீவி பர்வதத்தில் கூப்பிட்டேன் தற்செயலாய்
அஞ்சும் நிலைமையே அங்கே நிகழ்ந்ததுண்டாம்
உங்கள் மனத்தில் உறைந்து கிடந்திட்ட
பங்கஞ்செய் மூடப் பழக்க வழக்கங்கள்
இங்கினிமேல் நில்லா எனநான் நினைக்கின்றேன்
தங்கள்கை நீட்டித் தமியாளை முன்னரே
சாரலிலே முத்தம் தரக்கேட்டீர் சாயவில்லை
ஈர மலையிலே யான்தந்தேன். ஏற்கவில்லை
சத்தத்தை எண்ணிச் சலித்தீர்அச் சத்தத்தால்
முத்தத்தை மாற்ற முடியாமற் போனாலும்

உம்மைப் பயங்காட்டி ஊளையிட்ட சத்தத்தால்
செம்மைமுத்தம் கொள்ளவில்லை சேர்ந்துமுத்தம் கொள்வீரே
ஏஏஏ நான்இன்றைக் கேளனத்துக் காளானேன்
நீயேன் இதையெல்லாம் நிச்சயமாய்ச் சொல்லவில்லை?
ராமா யணமென்ற நலிவு தருங்கதை
பூமியி லிருப்பதைஇப் போதே அறிகின்றேன்
நம்பத் தகாதவெலாம் நம்பவைத்துத் தாங்கள்நலம்
சம்பாதிக் கின்ற சரித்திரக் காரர்களால்
நாடு நலிகுவதை நான்இன் று கண்டுணர்ந்தேன்
தோடு புனைந்த சுடர்க்கொடியே நன் றுசொன்னாய்

நல்ல இமயம், நலங்கொழிக்கும் கங்கைநதி
வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை
செந்நெல் வயல்கள் செங்கரும்புத் தோட்டங்கள்
தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்
பாரடி மேற்றிசையில் சூரியன் பாய்கின்றான்

சார்ந்த ஒளிதான் தகத்தகா யக்காட்சி
மாலைப் பொழுதும் வடிவழகு காட்டுதுபார்
சாலையிலோர் அன்னத்தைத் தன்பேடு தேடுதுபார்
என்னடி சொல்கின்றாய் ஏடி இளவஞ்சி?
என்நெஞ்சை உன்நெஞ்சம் ஆக்கிப்பார் என் றுரைத்தான்
தென்றலிலே மெல்லச் சிலிர்க்கும் மலர்போலே

கன்னி யுடல்சிலிர்க்கக் காதலரே நாம்விரைவாய்ச்
சாரல் அடைவோமே காதலுக்குத் தக்க இடம்
சாரலும் தன்மாலை நாயகியைச் சாரக்
குயில்கூவிக் கொண்டிருக்கும்: கோல மிகுந்த

மயிலாடிக் கொண்டிருக்கும் வாச முடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும் கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு கனிமரங்கள் மிக்கஉண்டு
பூக்கள் மணங்கமழும் பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்
அன்பு மிகுந்தே அழகிருக்கும் நாயகரே
இன்பமும் நாமும் இனி.

## 6. எடுத்துயர்த்தும் குறிக்கோள்

**- கவிஞர் முருகுசுந்தரம்**

வெடிக்கின்ற மலருக்கு மணத்தை யெங்கும்
வீசுகின்ற கொள்கையுண்டு: விரும்பி நாளும்
படிக்கின்ற நூலுக்கு மக்கள் நெஞ்சைப்
பண்படுத்தும் கொள்கையுண்டு: கொடிபோல் பெண்டிர்
இடுப்புக்கு மேலுடலைத் தாங்கித் தாங்கித்
இளைக்கின்ற கொள்கையுண்டு: நமக்கும் வாழ்வை
எடுத்துயர்த்தும் குறிக்கோள்கள் இருக்க வேண்டும்,
இசைத்தமிழுக் கேழிசைகள் இருத்தல் போலே.

சித்திரையில் இளவேனில் தொடங்கு தல்போல்
சிறுவயதில் சிந்தையிலே நல்ல கொள்கை
வித்துக்கள் விழவேண்டும்: வேட்கை யால்வாய்
விரிந்திருக்கும் சிப்பிக்குள் வீழும் மழைநீர்
முத்துக்கள் ஆவதுபோல் நமது வாழ்க்கை
முழுமைபெறும்: செழுமையுறும்: பதித்த வைரக்
கத்தியைப்போல் கூர்மையுடன் ஒளியும் வீசும்:
கார்காலக் காவிரிபோல் பொங்கிப் பாயும்.

கரும்புடைந்து சிதைந்துவிட்டால் கசப்ப தில்லை
    கற்கண்டு பொடியானால் புளிப்ப தில்லை:
அரும்புடைந்து சிதைந்தாலும் தேனே யன்றி
    அதிலிருந்து வேறொன் று வருவ தில்லை:
பெருங்கொள்கை தனைநோக்கிப் போகும் போது
    பெருந்தோல்வி கண்டாலும், புகழே யன்றி
வருந்துன்பம் வேறில்லை: ஆத லாலே
    வாழ்விலுயர் கொள்கைகளைக் கடைப்பி டிப்போம்.

பூத்திருக்கும் மலரெல்லாம் பிணத்திற் கென்றால்
    பூக்காடு வருந்தாதா? மனைவி யென்பாள்
காத்திருக்கக் கால்பிடிக்க மட்டு மென்றால்
    கண்ணீரில் பெண்ணினமே நனைந்தி டாதா?
மோத்தலுக்கென் றெண்ணாமல் பொடிபோ டத்தான்
    மூக்கென்றால் முட்டாளென் றிகழ்ந்தி டாரா?
மாத்தமிழைக் கற்பதெல்லாம் சோற் றுக் கென்றால்
    மதிப்பான திருக்குறளும் பிறத்தல் உண்டோ?

பொன்னுக்கும் பொருளுக்கும் அற்பர் கூறும்
    புகழுக்கும் ஆடைக்கும், வளத்தில் மிக்க
மண்ணுக்கும் மாடிவைத்த மாளி கைக்கும்
    மனமயக்கம் கொள்ளுவதா இலட்சி யங்கள்?
எண்ணத்தின் நேர்க்கோடே குறிக்கோள்: தட்டும்
    இழிவென்னும் படிக்கட்டைக் கடந்து நின்றால்
கண்ணுக்குத் தெரிவதுதான் வெற்றிப் பாதை:
    கலங்காமல் அவ்வழியில் காலை வைப்போம்

பொன்னுக்குப் புலமையினை விற்றி ருந்தால்
    புலிப்புலவன் பாரதியை இன்றி ரண்டு
கண்ணுக்குள் கொள்வோமா? சிலையெ டுத்துக்
    கைகுவித்து நிற்போமா? அவனி சைத்த
பண்ணுக்கு மெய்மறந்து பாம்பைப் போலப்
    படமெடுத்து நிற்போமா? உணர்ச்சி பெற்று
விண்ணுக்குப் பாய்வோமா? அடிமை யென்னும்
    விலங்கொடித்து வெற்றிபல கொள்ளு வோமா?

கிள்ளிவரும் கீரையைப்போல் குப்பை மேட்டில்
கிடைப்பதன்று நற்குறிக்கோள்: குமணன் போன்ற
வள்ளலிடம் ஓடிப்போய்ப் பாட்டுப் பாடி
வாங்கிவர முடியாது: தள்ளி னாலும்
துள்ளிவரும் குழந்தையைப்போல் மடியில் வந்து
தொப்பென்று வீழாது: காத லேதும்
கொள்ளாத கொம்பொன்றை வலியச் சென்று
கொடிதழுவல் போல்நம்மைத் தழுவி டாது.

குண்டுக்குத் தம்முடலைத் தந்தும், நச்சுக்
கோப்பைக்குத் தம்முதட்டைத் தந்தும், அல்லிச்
செண்டைப்போல் சிவந்திருந்த நமது மார்பைச்
சிலுவையிருப் பாணியினால் சிதைத்துக் கொண்டும்,
கொண்டவளைப் பிரிந்திருந்தும், குருத்து வாழைக்
குழந்தைகளைப் பறிகொடுத்தும், இரக்கமில்லாத்
தண்டணைக்குத் தலைகுனிந்தும் இலட்சியத்தைத்
தாரணியில் பெரியோர்கள் நிறுத்திச் சென்றார்

தண்ணீரின் மேல்மட்டம் உயரும் போது
தாமரையின் பூவுயரும்: இலட்சி யத்தைக்
கண்ணைப்போல் தனிமனிதன் காக்கும் போது
கட்டாயம் சமுதாயம் உயரும்: பாட்டால்
பண்ணுயரும்: புதியதொரு உவமை யாலே
பாட்டுக்கு மதிப்புயரும்: பரந்த இந்த
மண்ணுயரும் உயர்ந்தபெரும் இலட்சி யத்தால்
மக்களுயர்வார்: எங்கும் பொங்கு மின்பம்.

# உரைநடைப் பகுதி

## *1. ஆசைகளைச் சீரமைத்தல்*

**வேதாத்ரி மகரிஷி**

*ஆசை என்ற எண்ணத்தை விருப்பம், அவா, பற்று, இச்சை, வேட்கை, காமம், காமியம், வேண்டுதல் எனப் பலவாறாக அழைக்கிறார்கள். ஆசையைப் பொதுவாக மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று அமைப்பாகப் பார்த்தார்கள். துன்பங்கள் தோன்றுவதற்கு இம்மூவகை ஆசைகளே காரணம். ஆகவே, அவற்றை ஒழிக்க வேண்டும் என்ற கருத்து நெடுங்காலமாக நிலவி வருகிறது.*

*பிறவிப் பெருங்கடல் நீந்துதல் என்ற இலட்சியத்தை நாம் அடைய வேண்டும் என்பதே ஓர் ஆசை தானே. இந்த ஆசையை எப்படி ஒழிப்பது? வாழ்ந்து கொண்டு தானே அந்த லட்சியத்தை அடைய வேண்டும். உண்ணாமல் உடுத்தாமல் மற்ற பொருள்கள் பலவற்றை அனுபவிக்காமல் எப்படி வாழ்வது? அப்போதைக்கப்போது உணவின் மீதும், உடை முதலியவற்றின் மீதும் ஆசை செல்லத்தானே செய்யும்?*

*மண்ணாசையை எடுத்துக் கொள்வோம். நாம் வாழ ஓரளவாயினும் நிலமும் வீடும் வேண்டும் தானே? மண்ணின் மேல் தானே நின்றும், அமர்ந்தும், நடந்தும், படுத்தும் வாழ்க்கை நடத்துகிறோம்? பொன்னினது பிரதிநிதியாக விளங்கும் பலவிதமான பொருள்களை உபயோகித்தவாறுதானே வாழ்கிறோம். மனைவியாக இல்லாவிட்டாலும் தாயாக, சகோதரியாகப் பெண் துணை இல்லாமல் யார் வாழ்கிறார்கள்?*

*ஆசையை ஒழிக்க முடியாது; ஒழிக்கவும் கூடாது. எனவே, நம்மில் எழும் ஆசைகளை ஆராய்ந்து, துன்பம் தரக்கூடிய முறையற்ற ஆசைகளைத் தவிர்த்து, தனக்கு நன்மையாகவும் சமுதாயத்திற்கு நலமாகவும் அமைகிற ஆசைகளை நிறைவேற்றி வளமான வாழ்வைப் பெறலாம். இவ்வாறு நம் ஆசைகளை ஒழுங்குபடுத்துவதே 'ஆசைகளைச் சீரமைத்தல்' எனப்படும்.*

### ஆசை எழக் காரணம்

*மனிதன் உயிர் வாழ்வதால் பசி, தாகம், உடல் தட்ப வெப்ப ஏற்றத்தாழ்வு, உடற் கழிவுப்*

பொருட்களின் உந்துவேகம்போன்ற இயற்கைத் துன்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றின் காரணமாகத் தேவையும் ஆசையும் ஏற்படுகின்றன.

## ஆசை அறிவை மயக்கக் காரணம்

தேவையைக் காரணமாகக் கொண்டு எழுந்த ஆசை, தேவை நிறைவோடு நின்றுவிட வேண்டும். பசி, தாகம் முதலிய இயற்கைத் துன்பத்தைப் போக்கிக் கொள்ள எழுந்த ஆசை துன்பத்தைப் போக்குவதோடு நின்றாக வேண்டும். உயிராற்றல் செலவைச் சரி செய்ய எழுந்த ஆசை அப்படிச் சரிசெய்வதோடு நின்றாக வேண்டும். ஆனால், பொதுவாக அப்படி நிற்பதில்லை.

தேவை நிறைவு செய்யப்படும்போது ஏற்பட்ட திருப்தியின் மீது அல்லது இன்பத்தின் மீது மனம் மயங்கி விடுகிறது. எந்தச் செயல் இன்பத்தைத் தந்ததோ அச்செயலை மனம் தேவையில்லாமல் மீண்டும் செய்ய விரும்புகிறது. அதாவது, உண்மையான தேவை இல்லாமலேயே ஆசை எழுகிறது. துன்பத்தைத் தீர்க்கும் வகையில் தோன்றிய ஆசை இப்பொழுது அறிவு மயங்கிச் செயற்கையாக இன்பத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபடுகிறது.

வாழ்க்கையில் உயர, திட்டமிடுதல் ஒவ்வொருவருக்கும் அவசியம். ஆனால், தகுதியையும் அதற்கான ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளாமல் வெறுமனே ஒன்றை அடைய விரும்புவது பேராசையாகும். இது துன்பத்தை உண்டு பண்ணும். இந்தப் பேராசையே அறிவை மயக்குகிறது. இந்த ஆசையைத்தான் கட்டுப்படுத்த வேண்டும்: எழாமலேயே காக்கவும் வேண்டும்.

உயிராற்றல் குறைவை நிறைவு செய்வதற்காக அல்லாமல், இயற்கைத் துன்பத்தைத் தீர்ப்பதற்காக அல்லாமல், உண்மையான உயர்வான தேவையின் காரணமாக அல்லாமல் ஏற்படும் ஆசைகளெல்லாம் அறிவின் மயக்கத்தால் தோன்றுவன அவை துன்பத்தைத்தான் தரும்.

இன்னொன்று, தகுந்த காரணத்தாலேயே ஏற்பட்ட இச்சைகளானாலும், அவ்வாசைகளை நிறைவு செய்யும் முயற்சியில் தனக்கோ, பிறருக்கோ துன்பம் தோன்றுமானால், அவ்வாசைகளும் தடுக்கப்பட வேண்டியவையே. மேலும், நிறைவேறிய பின்னர் தீய விளைவுகளைத் தரக்கூடிய இச்சைகளையும் கட்டுப்படுத்தித்தான் ஆக வேண்டும்.

எனவே, எழும் இச்சையின் காரணத்தை ஆராய வேண்டும். தக்க காரணம் இருந்தாலும் யாருக்கும் பாதகம் இல்லாமல் அந்த ஆசையைச் செயல்படுத்தச் சூழ்நிலை, வாய்ப்பு, வசதி இருக்கின்றனவா எனப் பார்க்க வேண்டும். இருந்தால்தான் செயலாக்க முனைய வேண்டும். அப்போதும் கூட எதிர்கால விளைவாக இன்பம் தோன்றுமா? துன்பந்தோன்றுமா?

என்பதையும் கணித்துத் தனக்கும், பிறருக்கும் இன்பம் தோன்றும் என்றால் மட்டுமே செயலாக்க வேண்டும்.

“இச்சை எழும்போதே காரணம் கண்டிடு
இச்சை முடிந்திடச் சூழ்நிலை பார்த்திடு
இச்சை முடித்தால் எழும் விளைவை யூகி
இச்சை முறையாய் இயங்கும் அமைதியில்"

-வேதாத்திரி மகரிஷி

ஆனால், நாம் என்ன செய்கிறோம்? தேவைகளை நாமாகப் பெருக்கிக் கொள்கிறோம். அப்படி நாமாகவே செயற்கையாக உற்பத்தி செய்து கொண்ட தேவை வழியாகவும், ஆசைகள் தோன்றுகின்றன. விளைவு என்ன வரும்? நாம் வாழ்க்கையில் நிறையத் துன்பத்தைச் சந்திக்கிறோம் என்றால் அதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

## மதிக்கப்பட வேண்டிய ஆசை

நம்மில் எழுகின்ற ஆசைகள் நம் அறிவின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை என்றால் அவற்றை நிறைவு செய்யலாம். நம் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்றால் அவற்றை நிறைவு செய்யலாம். சமுதாயத்திற்கு நலம் சேர்ப்பதாக இருந்தாலும் நிறைவு செய்யலாம். அதை விடுத்து அது வேண்டும் இது வேண்டும் என்று இச்சையை விரித்துக் கொண்டே போகலாகாது.

வேண்டுவதெல்லாம் என்ன? முறையான தேவைகள் நிறைவு பெற வேண்டும். இயற்கைத் துன்பங்கள் சமன் செய்யப் பெறவேண்டும். நாளுக்குநாள் அறிவில் மேம்பாடு வேண்டும்.

முறையான தேவையான ஆசையேயானாலும் அதை நிறைவு செய்யும் போதும், நிறைவு செய்து விளைவை அனுபவிக்கும்போதும் அதன்மீது தீவிரமான பற்றினை வைக்காமல் அதனை ஒரு கடமையாகவே கொள்ள வேண்டும். தேவயைான ஆசையானாலும், நன்மையே பயப்பதானாலும் தன்வயம் இழந்து அதன்மேல் ஒன்றுதல் முழுமையான நன்மையைத் தராது; மனமும் மாசுறும்.

பொருட்கள் துன்பத்தைக் குறைக்கின்றன: தீர்க்கின்றன என்பதால் அப்பொருட்கள்மேல் மனம் நாட்டம் கொள்ளுதல் இயற்கையே என்றாலும், பொருட்கள் மீது எண்ணத்தால் பிடிப்புக் கொள்ளல், ஆசையில் தீவிரம் காட்டல் தவறு. அப்பொருட்களுக்கும் நமக்கும்

கடமையில் உள்ள தொடர்பையும், அப்பொருட்களோடு நாம் கொள்ள வேண்டிய உறவின் அளவையும், முறையையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கொள்ள வேண்டும். அப்படியின்றி அப்பொருளை எண்ணமானது பிடித்து வைத்திருத்தலைத்தான் பற்று என்று கூறினார்கள். இந்தப் பற்று நீங்கத்தான் வேண்டும். பொருட்களை விட்டுவிட வேண்டியதில்லை. அந்தப் பொருட்களில்தான் எல்லாம் இருக்கிறது என்ற எண்ணத்தின் இறுக்கத்தை, பற்றை விட வேண்டும். இப்பற்றை விடாத வரை உயிருக்கு விமோசனமில்லை.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்" (குறள்-349)

காரண காரிய விளைவுக் கணக்கு, தப்பாத விழிப்பு நிலையில் பொருட்களோடு கொள்ள வேண்டிய தொடர்பின் இன்றியமையாமையையும், வைத்துக் கொள்ள வேண்டிய உறவின் தன்மை மற்றும் அளவினையும் சரியாக எடைபோட்டு ஆசையினை ஏற்றுச் செய்யும் கொள்கையில் ஆசை தேவைதான். அப்படி இல்லாத ஆசைகள் நல் விளைவையே மற்றவர்களுக்குத் தந்தாலும் மனம்அதில் சிக்கிக் கொண்ட காரணத்தால் நமக்குத் தீங்காகவே அமையும்.

## பிறவியின் நோக்கத்திற்கு உதவாத ஆசை

ஆசையின் பேரிலும் அனுபோகத்தின் பேரிலும் மனதைச் சிக்க விடுதல்தான் பற்றாகும். இந்தப் பற்றுக்கூடாது. பிறவியின் நோக்கத்தையே பற்றானது பாழாக்கிவிடும். பிறவியின் நோக்கத்திற்கு இசைவாக வாழ்வை அமைத்துக் கொள்ளவிடாமல் இந்தப் பற்று தடுத்துவிடும். வாழ்வதே பொருட்களை நுகரவும், பிறர் கவர ஒட்டாமல் தடுக்கவும்தான் என்ற கருத்து மனதின் இயல்பாகவே ஆகிவிடும். பற்றானது லோபம் என்னும் கடும்பற்றாகவும் மாறும். தடைவரும் போது அதுவே சினமாகவும் உருவெடுக்கும். ஐம்பெரும் பழிச்செயல்களைச் செய்யத் தூண்டும். கடைத் தேறவொண்ணாப் படுகுழியில் விழ வைக்கும்.

"இச்சை குறுகிடில் அறுகுண மாகிடும்
இச்சையின் பூரணம் நிர்க்குண மாகிடும்"

தேவையைப் பெருக்கிக் கொண்டே செல்லக் கூடாது. பெருக்கினோமானால் அனுபோகத்திலேயே மனம் சென்று கொண்டிருக்கும். பழிச்செயல் புரிந்து மேலும் மேலும் பிறவித் தொடர் நீளும். தேவைகளை முடிந்தவரை (to the minimum) சுருக்க வேண்டும். அப்போது தான் வந்த வேலையை முடிக்க முடியும். வந்த வேலை எது? முறையோடு வாழ்ந்து

பாவப் பதிவுகளை எல்லாம் அழித்து, இனிப்பழி புரியாத தகைமை பெற்று, தன்னை அறிந்து, அறிவில் முழுமை அடைந்து, ஆசைகள் எல்லாம் ஒழிந்த நிறை மனம் என்னும் நிர்க்குணம் வந்து, முக்தி பெற வேண்டியதன்றோ வந்த வேலை? அந்த வேலைக்கு இடையூறான இந்த ஆசையை முதலில் ஒழுங்கு செய்தாக வேண்டும். நல்ல விருப்பங்களில் உணர்ச்சி வேகப் பிடிப்பை மாற்றியாக வேண்டும்.

## உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவு

பொருட்களோடும், மக்களோடும் தேவைப்படும் தொடர்பிற்கு ஏற்ப அளவோடு விழிப்புடன் வைத்துக் கொள்ளும் உறவே துறவாகும். துறவு என்பது மனதிற்குத் தான். எனவே, இன்ப நுகர்ச்சியில் சிக்கிக் கொள்ளாத மனநிலை தான் உறவில்துறவு (Detached attachment) என்பதாகும். இதைத்தான் 'நிஷ்காமியம்' என்று சொன்னார்கள். இந்த நிலையை உணர்ந்து செய்யும் செயல்களே 'நிஷ்காமிய கர்மம்' எனப்படும்.

தூங்கும்போது தலையணை வேண்டும். அதற்காக அதனை எந்நேரமும் தலையில் கட்டிக் கொண்டிருப்பதில்லை. அதுபோல், கொதிக்கும் பாலை இறக்கத் துடிக்கும் போது பிடி துணியை மறவாதது போல, விழிப்பு நிலையில் பொருட்களோடு அளவோடும், முறையோடும் உறவு கொள்ள வேண்டும்.

உயிர்களோடு, பொருட்களோடு தொடர்பு கொள்ளும் போது பிணக்கின்றி இணக்கத்தோடு இருப்பதுதான் விளைவறிந்த விழிப்பு நிலை எனப்படும்.

## பயிற்சி

ஒவ்வொருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்கலாம். அவ்வப்போது வந்துபோகும் சின்னஞ்சிறிய ஆசைகள் பலவும் இருக்கலாம். அவற்றையெல்லாம் ஆராய வேண்டும். முதலில் (1) அவை தேவை தானா என்று பார்க்க வேண்டும். அடுத்து (2) நிறைவு செய்து கொள்ள வசதி இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும. இரண்டும் சரியாக அமையுமானால் (3) பின்விளைவு என்னவாகும் என்று கவனித்து எல்லாம் சரியானால் அந்த ஆசையைச் செயலாக்கத் தீவிரம் காட்டலாம். இப்படித்திட்டமிட்டு வெற்றி பெற வேண்டும்.

(i) தேவையில்லாத ஆசை என்றால் அமைதியாகச் சிந்திப்பது நல்லது. இந்த ஆசை எழுந்ததே தவறு. இதை நிறைவு செய்தால் துன்பங்கள் வருமே. எனவே, இந்த ஆசையை நான் விட்டுவிடுவேன் என்று தெளிவாக எண்ணி, தவம் இயற்றிச் சங்கல்பம் மேற்கொள்ள வேண்டும். பின்னொரு கால் இந்த ஆசை மனதில் தோன்றினாலும், முன்பே எடுத்து

வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து,அந்த ஆசையானது காலப்போக்கில் மறையும்.

(ii) அதே போல் தேவை என்று கண்டவிடத்தும், நிறைவு செய்ய வசதி இல்லை என்றாலும் முன் சொன்னது போலவே ஆராய்ச்சியும் சங்கல்பமும் செய்து கொள்ள வேண்டும்.

(iii) தேவையும், வசதியும் ஒருங்கே கூடி இருந்தாலும் பின்விளைவு தீங்கு தருவதென்றால், அந்த ஆசையையும் முன்சொன்ன அதே முறையில் சமன் செய்து கொள்ள வேண்டும்.

நிறைவும் செய்யாமல் மாற்றவும் செய்யாமல் ஆசைகளை மனதில் சுமந்து கொண்டிருந்தால் மன அமைதி கெடும். உடலில் வயிற்றுப்புண் முதலிய நோய்கள் உண்டாகும். ஒரு ஆசையை இம்மாதிரி மனதில் வைத்திருக்கும் காலத்தில் எடுத்த காரியங்களிலெல்லாம் செயல் வேகம் குன்றி, திறமை மழுங்கி, தோல்வி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஆசை, திட்டமிடல், செயல் மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி மேல் வெற்றி வந்து கொண்டேயிருக்கும்

“இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்" (குறள்.369)

என்பது வள்ளுவம்.

தற்சோதனைக்குப் பிறகு மிச்சப்படும் ஆசை ஒன்றுக்கு மேல் இருந்தால் இன்றியமையாமைக்கேற்ப, ஒவ்வொன்றாக எடுத்துச் செயல்படுத்தினால் வெற்றி நிச்சயம்.

(1) ஒரு நாள் ஓய்வாக இருக்கும்போது ஒரு கால் மணி நேரம் தவம் இயற்றித் தற்சோதனையைத் தொடங்குவோம். ஆசைகளை ஒழுங்குபடுத்துவது தான் தற்சோதனை. ஓர் எழுதுகோலும் தாளும் எடுத்துக் கொண்டு மனத்தில் இருக்கிற ஆசைகளை எல்லாம் தொகுத்துப் பட்டியல் போடுவோம். மிகவும் உட்கிடக்கையான ஆசைகளையும் சின்னஞ்சிறிய ஆசைகளையும் சேர்த்தால் கூட யாருக்கும் ஒரு இருபதுக்கு மேல் இருக்காது.

(2) மிகவும்இன்றியமையாதது எனக்கருதி முதலில் எழுதியிருக்கும் ஆசையை எடுத்துக் கொள்வோம். முதல் வினா என்னவாக இருக்க வேண்டும் என்றால், வாழ்வின் குறிக்கோளை அடைய இது தேவையா? என்று நன்றாக, நிதானமாக, தெளிவாக ஆராய்வோம். இந்த ஆசையை நிறைவு செய்யாமலும் வாழ முடியும் என்றால் பட்டியலிலிருந்து அதை நீக்கி விடலாம்.

'இந்த ஆசையும் இதுபோன்ற தேவையற்ற ஆசைகளும் இனி என் மனதில் எழ இடம் கொடுத்து மீண்டும் ஒரு தற்சோதனை வரை கொண்டு வரமாட்டேன்' என்று சங்கல்பம் ஏற்க வேண்டும்.

இப்போது நமது மனம் எவ்வளவு இலேசாக இருக்கிறது. ஓர் ஆசையை வென்றாயிற்று. இந்த வெற்றியால் மனதிற்குப் புதிய வலிமை கிடைத்திருக்கிறது. அந்த வலிமையோடு அடுத்த ஆசையை எதிர்கொள்வோம்.

(3) இந்த ஆசை தேவை தான். இதனை நிறைவு செய்தால் உயர்வு தரும் என்று கண்டால் இந்த இடத்தில் மற்றொரு வினாவைப் போட வேண்டும். இதை நிறைவு செய்ய என்னால் முடியுமா? வசதி வாய்ப்புகள் உள்ளனவா?

ஒரு மோட்டர் சைக்கிள் வாங்க வேண்டும்: அவசியம்தான்: அலுவலகம் தூரத்தில் இருக்கிறது: கடை வீதியும் தூரம்தான்: அன்றாடம் நடப்பது கடினம்: பேருந்துக்கு நிற்பது கடினம்: கட்டணம் வேறு அதிகம் செலவாகிறது.: மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டியது தான். சேமிப்பில் இருபதாயிரம் ரூபாய் இருக்கிறது. அதைக் கொண்டும் வாங்கலாம். நகைகளை விற்றும் வாங்கலாம் அல்லது தவணை முறையிலும் வாங்கலாம்.

இதையே வேறுவிதமாகப் பார்க்கலாம். மோட்டார் சைக்கிள் தேவையே என்றாலும், வாங்க வழியில்லை என்றால் அந்த ஆசையையும் துணிவுடன் பட்டியலிலிருந்தும் மனத்திலிருந்தும் அகற்றித்தான் ஆகவேண்டும். திரும்பத் தோன்றாமல் இருக்க சங்கல்பம் ஒன்று இயற்றித்தான் தீர்க்க வேண்டும். இதைவிடச் சிறந்த இன்னொரு வழியில்லை.

(4) சில விருப்பங்கள் இருககும். அவை தேவை எனவும் முடிவாகும். நிறைவு செய்துவிடவும் வசதி இருக்கும். ஆனால், பின் விளைவுகள் தனக்கோ பிறருக்கோ துன்பம் தருவதாக இருந்தால் அவற்றையும் நீக்கிவிட வேண்டியது தான்.

வாடகைக் கார் செலவு அதிகமாகிறது. ஒரு கார் வாங்க வேண்டும். ஆசை நியாயமானது தான்: வாங்க வசதியும் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். வாங்கிய பிறகு பெட்ரோலுக்கும் மற்ற பராமரிப்புச் செலவுக்கும் ஓட்டுநர் ஊதியத்திற்கும் ஆகும் தொகை வாடகைக் கார் செலவைவிட இரண்டு மடங்கு வரும் என்று கணக்கு வந்தால் என்ன செய்வது? அது மட்டுமன்று, இதுவரை சைக்கிளில் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த மகன் இனிக்காரில்தான் செல்வேன் என்பான்: பக்தி மிகுதியால்நடந்தே கேயிலுக்குச் சென்று வந்த மனைவியும் இனிக் கோயிலுக்குப் போகக் கார் கேட்பாள். ஆக என்னவாயிற்று? குடும்பப்

பொருளாதாரத்தில் நாளாவட்டத்தில் ஒரு பெரும் பள்ளம் விழுந்து நொடிந்து போகும் நிலையும் அல்லவா வந்துவிடும். எனவே, இந்த ஆசையும் நீக்கப்பட வேண்டியதே.

## (5) வெற்றிக்கு வழி

இப்போது பட்டியலில் தேவையானவையும், நிறைவு செய்ய வசதி உள்ளவையும், பின்விளைவுத் தீங்கு இல்லாதவையுமான ஆசைகள் ஒரு நான்கைந்துக்கு மேல் இரா.

அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு செயலாக்கத் திட்டமிட வேண்டும். முதலில் எதை எடுத்துக் கொள்ளலாம் என ஆராய்ந்து நிதானமாக அதற்காக மட்டும் திட்டம் வகுத்துச் செயல்படுத்த வேண்டும். ஒரு சமயத்தில் ஒன்றில் மட்டும் கவனம் செலுத்தினால் வெற்றி நிச்சயம்.

'கையளவு உள்ளம் வைத்துக் கடல்போல் ஆசை வைத்தான்" என்கிறார் கண்ணதாசன்: இது போல் நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைக் குப்பைகளை மனதில் சேர்த்து வைத்துக் கொண்டு திண றுவதில் யாருக்கு என்ன லாபம்? மன அமைதி முதலில் போயிற்று: உடல் நலம் போயிற்று: நற்குணங்கள் போயின: எரிச்சலும், கோபமும் அடிக்கடி வந்தன; முகத்தில் தெளிவு போய்ச் சோகம் படிந்தது. ஆனால், இந்தத் தற்சோதனையில் வெற்றி அடைந்தபின் பார்த்தால் மனம் கலகலப்பாக இருக்கும். மனதில் தைரியம் வந்துவிடும். எதையும் சாதித்து விடலாம் என்ற உற்சாகம் மிகுந்து நிற்கும். மனத்தின் குறுகிய நிலை ஒழிந்து விரிந்த நிலைவந்து விட்டதால் பொறுமை, அன்பு என்ற பல நற்குணங்கள் மிகுந்து காணப்படும்; எடுத்த காரியம் நிச்சயம் வெற்றி தரும்.

கடமை உணர்ந்து பொறுப்புணர்ந்து எண்ணத்தில் தூய்மையோடு செயல்களைச் செய்ய வேண்டும். செயற்பாட்டில் உறவாகத் தெரிந்தாலும் எண்ணத்தில் துறவாக இருக்க வேண்டும் 'உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு' என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

ஆசையை அடக்கினால் அது பிதுங்கிக் கொண்டு வேறுவேறு துன்பங்களாக உருவாகும். ஆராய்ந்தால் பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும். ஆசை நிறை மனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகச் சாத்தியமாகி, வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும்.

ஆசையின் மறுமலர்ச்சியே ஆறு குணங்கள். முறைப்படுத்தப்படாத ஆசையே பேராசை (காமம்). ஆசை தடைபடும்போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம் (குரோதம்).

ஆசையுள்ள பொருட்களைத் தனக்கு வேண்டுமெனப் பிறர் கவராமல் பாதுகாத்துக் கொள்ளும் செயலே கடும் பற்று (லோபம்). ஆசை பிற பாலை நாடி எழுந்தால் அதுவே முறையற்ற பால்கவர்ச்சி (மோகம்). ஆசையானது பொருள், செல்வாக்கு, புகழ் இவற்றின்மீது அழுந்தி அதைக் கொண்டு மக்களை உயர்வாக அல்லது தாழ்வாகக் கருதும்போது உயர்வு தாழ்வு மனப்பான்மை (மதம்). சினத்தை முடிக்க வலுவையும், வாய்ப்பையும் நாடி நிற்கும் ஆசைதான் வஞ்சம் (மாச்சரியம்).

ஆசையின் இயல்பறிந்து அதை நலமே விளைவிக்கத்தக்க வகையில் பயன்படுத்தி ஒழுங்குபடுத்தி விட்டால், அதுவே ஞானமாக வளரும்.

## *2. சமூக மதிப்பீடுகளை உயர்த்தும் கல்வி*

***- டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம்***

*சமூகம் என்ற சொல் தம்முள் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் மக்கள் அனைவரையும் குறிக்கும். ஆண்கள், பெண்கள், குடும்பங்கள், தொழிலாளர்கள், முதலாளிகள் இனங்கள், சங்கங்கள், குடிகள் ஆகிய மனிதச் சேர்க்கைகள் எல்லாம், தம்முள் ஒத்தாலும் அன்றி மாறுபட்டாலும் அவற்றைச் சமூகம் என்று சொல்லுகிறோம். சமூகத்தில் தம்முள் வேறுபடும் பழக்க வழக்கப் பண்பாட்டுப் பொதுவியல்புகளுடைய பல சமுதாயங்களைப் பார்க்கலாம். சமுதாயமும் சங்கமும் சமூகத்தில் எழுகின்ற இருவகைத்தான உறவுகளுடைய மக்கள் தொகுதிகளாகும். எனவே சமூகம் என்பதில் சமுதாயமும் சங்கமும் உட்பட்டுக் கிடக்கின்றன. ஆகவே சமூகம் என்பது உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் மக்களைச் சேர்த்துக் குறிப்பதற்கு வழங்கும் சொல்லாகும். பழக்க வழக்கங்கள், விதிவிலக்குகள், கட்டுப்பாடுகள், அதிகார ஆதிக்கமுறைகள், தொழில் துறைகள் ஆகியன காலப்போக்கில் மாறிக்கொண்டே போகும் மனித சமூகம் என்றே மொத்தமாகச் சொல்கிறோம். ஏனெனில் மாறிக் கொண்டே போதல் உயிரினங்களின் இயல்பாகும். இவ்வியல்பு உலக இயல்பாம்.*

*‘வேல்யு’* (value) *என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ‘மதிப்பீடு’ என்பது பொருளாகும். இந்த வீட்டின் மதிப்பு என்ன என்று கேட்டால் ஐந்து லட்சம் ரூபாய் எனக் கூறக்காண்கிறோம். இக்காலத்தில் பொதுவாகப் பொருள்களின் மதிப்பை ரூபாயை - பணத்தை - அளவுகோலாகக் கொண்டே கூறி வருகிறோம். மனிதருடைய மதிப்பைக்கூட அந்த அளவுகோலை அடிப்படையாகக் கொண்டே இலட்சாதிபதி என்றும் கோடீஸ்வரன் என்றும் பேசுவதை அறிவோம். பதவிகளையும், தொழிலாளர் நிலைகளையும் கூட அவரவர் வருவாய் நிலையைக் கொண்டே, அதாவது அவர்கள் பெறும் ஊதியத் தொகையைக் கொண்டே மதிப்பிடுகிறோம். சுருங்கச் சொன்னால் இக்காலத்தில் எதனையும் பணத்தை அளவுகோலாகக் கொண்டே மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன. மதிப்பீடுகள் மாறும் தன்மை கொண்டவை. ஒவ்வொருவரும் சுவைக்கு ஏற்ப மதிப்பீடு செய்வார். பணம், பதவி, சமுதாய முறைகளை ஒட்டிச் சிலர் மதிப்பிடுவர். இது பொருள் அடிப்படையில் செய்யப்படுவதாகும். இன்னும் சிலர் அன்பு, கல்வியறிவில் தேட்டம், பேராசையின்மை போன்றவற்றின் அடிப்படையில் மதிப்பிடுதல்*

செய்வார்கள். இது குணங்கள், பண்புகள் ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டு கூறுவதாகும். இக்காலத்தில் சிறந்த பேரறிஞராகக் கருதப்படும் ஆல்பர்ட் சுவிட்சர் "உயர்ந்த பெருந்தகைமையான, தரமான தன்மான வாழ்க்கையே உயர்ந்த மனித மதிப்பீடு" எனக் கூறுகிறார். ["The highest human value must be attached to the dignity of life as an universal standard"] எனவே உலகளாவிய சமூகத்திற்குரிய உயர்ந்த மதிப்பீடாக இதனை அறிஞர் ஏற்பர். பெருந்தகைமை கொண்ட வாழ்வே அவருடைய அளவுகோலாகும். அதன் விரிவையும் விளக்கத்தையும் அதனைப் பெறுவதற்குரிய கல்வியையும் இறுதியில் கூறுவேன்.

மதிப்பீடுகளில் மாறாத் தன்மை கொண்டதையே ஆல்பர்ட் சுவிட்சர் கூறியுள்ளார் எனலாம். ஆனால் பொதுவாக மதிப்பீடுகள் காலத்திற்கேற்றவாறும் இடத்திற்கேற்றவாறும் மாறும் தன்மை கொண்டவை. மாறுதல்கள் முற்போக்கானதாகவோ பிற்போக்கானதாகவோ அன்றி அழிவாகவோ இருக்கலாம். வரலாறு, சுழற்சி போல மாறிமாறி வரும் என்பர். "History repeats itself" என்பது ஆங்கிலக் கூற்று. மக்கள் அறியாமையாலும் சூழ்நிலையினாலும் வலிவும் சுதந்திரமும் இழந்து கேடுறுதல் உண்டு.

சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு இந்தியப் பெண்கள் நாடகத்தில் நடிப்பதோ திரைப்படத்தில் பங்குபெறுவதோ மிக இழிவாகக் கருதப்பட்டதுண்டு. ஆண்களே பெண்வேடம் அணிந்து நடித்ததும் உண்டு. அதேபோல் நாட்டியம் ஆடும் பெண்களும் அதற்கு முன் சமூகத்தால் தக்கவாறு மதிக்கப்படவில்லை. ஆனால் இன்று நடிகர், நடிகைகட்கு இருக்கும் சமூக மதிப்பு மிக உயர்ந்துள்ளது. அதுமட்டுமின்றி அவர்களைக் காணத் துடிக்கும் சமூகக் கூட்டம் வெள்ளம்போல் திரண்டு வருகிறதைப் பார்க்கிறோம்.

ஒரு காலத்தில் சிறைப்படுவது சமூகத்தில் மிக இழிவாகக் கருதப்பட்டது. ஆனால் விடுதலைப் போராட்டத்திற்குப்பின் சமூகம் உயர்ந்த மதிப்பைச் சிறை சென்ற விடுதலை வீரர்கட்குத் தருகிறது. முன்பிருந்த சமூக அச்சம் இப்போதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் நிலமுதலாளிகளுக்கு இருந்த மதிப்பு இப்போது குறைந்து, தொழில் முதலாளிகளுக்கு அந்த மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீடுகள் மாறும் தன்மையுடையவை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

கல்வி என்பது அறிவை ஆழப்படுத்துவது, அகலப்படுத்துவது. மதி நுட்பம் உடையவன் நூல் நுட்பத்தை அறிவானானால் பேரறிஞனாய்விடுவான் என்கிறார் திருவள்ளுவர். கல்வி மக்களுக்குக் கருத்தேற்றம் செய்து சிந்திக்க வைத்து வளரச் செய்வது. எனவே கல்வி சமூக

மதிப்பீடுகளை மாற்றுவதற்கு நல்ல கருவியாகும். அதிலும் மதிப்பீடுகளை அளந்து காட்டுவதற்கேற்ற பகுத்தறிவை, ஆய்வுப் புலமையை, நினைந்து, சிந்தித்து, எண்ணி, துணிந்து செயல்புரியும் ஆற்றலைக் கல்வி தரவல்லது.

இன்றைய கல்விப் போக்கும் சமூக மதிப்பீடுகளும் எவ்வாறுள்ளன? அம்மதிப்பீடுகளை உயர்த்த, கல்வியமைய வேண்டிய பாங்கு என்ன? என்பனவற்றைப் பார்ப்போம்.

இன்றைய கல்வியை இருபெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) மனிதம் சார்ந்தவை. (2) அறிவியல் சார்ந்தவை என்பன. (1) வெறும் அறிவையும் கொள்கைகளையும் புகட்டுபவை, (2) மனிதனின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்குவதற்காகவும் உலக இயற்கையைப் புரிந்து கொள்ளவும் அறிவியல் வழி செயல் பூர்வமாகத் தொழிற்பட்டு நிற்பவை என அவற்றை முறையே விரித்துக் கூறலாம். இக்கல்விமுறை 1835ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதியன்று தாமஸ் பாபிங்டன் மெக்காலே என்பவரால் ஆங்கில மொழிவழித் திட்டமாக இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்திய மொழிகள் வளமற்றவை, கரடுமுரடானவை (Poor and rude) என அவரால் சுட்டப்பெற்று விலக்கப்பெற்றன. ஆயினும் 1854இல் பிரியன் அவ்டன் அக்சன் என்பவரும் ஜான் வில்சன் என்பவரும் தாய்மொழிகளில் தாம் கற்பிக்க வேண்டும் எனக்கூறியும் அது செயல்படாமலேயே இருந்துவருகிறது. இன்றும் உயர்கல்வி ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டு வருகிறது. இவ்வகைக் கல்வியைக் காந்தியடிகள் தாய்மொழி வழியே கற்பிக்க வேண்டும் எனக் கூறியும் முழுமையான செயல் உருவம் பெறவில்லை. பாரதியார் போன்ற புரட்சிக் கவிஞர்கள் ‘பேடிக்கல்வி’ ‘அல்லல் மிக்கதோர் மண்படுகல்வி’ கல்விப்படுகுழி ‘கொடும்பிலம்’ என்பன போன்ற தொடர்களால் இக்கல்விமுறையைக் கூறியும் இம்முறை மாற்றம் பெறாமல் பிடிப்புடன் உள்ளது. தாய்மொழியில் கற்பிக்காத கல்விக் கூடங்களைச் ‘சுடுகாடு’ என்றும் அங்கு வாழ்வோர் ‘பிணங்கள்’ என்றும் மிக வேகமாகப் பாரதியார் கட்டுரையிலும் எழுதினார். ஆயினும் தாய்மொழியில் கற்பதைச் சமூகம் மதிக்கத்தயாராயில்லை என்றும், அவ்வாறு கற்போருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைப்பது அருமை என்றும் தாய்மொழியில்இன்றைய அறிவியல் வளர்ச்சிகளை அப்போதைக்கப்போது சொல்ல இயலாதென்றும் இப்படிப் பல காரணங்களைக் கூறி ஆங்கில வழியிலேயே உயர்கல்வியை அமைத்துள்ளனர். சமூக மதிப்பீட்டை மாற்றி உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும், சமூக மதிப்பீட்டுப்படி தாய்மொழி வழி கற்றவர்களைச் சமூகம் ஆங்கில வழி கற்றவர்களைப்போல மதிப்பதில்லை என்றும் ஆட்சிப் பொறுப்பிலிருப்போர் கூறி வருகின்றனர். எனவே தாய்மொழி வழிக்கல்வியால் தான் நற்பயன் விரைவாக விளையும் என்பதனைக் கல்வியாளர் காட்டி நிறுவினால்தான் சமூக மதிப்பீடுகள் உயரவழி உண்டு. இருவழிகளிலும் உள்ள நிலைமைகள் தெளிவாகக் காட்டப்பட்டு மதிப்பீட்டைச் சமூகம்

ஏற்றால்தான் ஏழை எளிய நடுத்தர தாழ்ந்த மக்கள் எளிதில் கற்று உணர்ந்து சமுக மதிப்பீடுகளை உயர்த்த இயலும். சமூகம் என்பது நடுத்தர தாழ்ந்த மக்களைத் தாமே பெரும்பாலும் கொண்டுள்ளது!

அறிவுடைய மக்கள் என்றும், பாமர மக்கள் என்றும் சமூகம் பிரிந்து, பெரும்பாலான பாமர மக்களைக் கொண்டதாய் அமைந்து, ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபட்டு நிற்பது சமூகத்தை அழிக்கும் புற்று நோயாகும். நல்நோக்குடன் கூறப்படும் செய்திகளும் ஏற்க இயலும் நிலையில் இல்லாமல் பயனற்றுப்போய்விடும். மக்கள் நல்வாழ்வுக்காக எடுத்துச் சொல்லப்படும் செய்திகளைக் கல்வி அறிவில்லாததால் புரிந்து கொள்ளவும் மாட்டார்கள். ஆகவே அவர்களுக்குக் கல்வி அறிவைக் கொடுப்பது தாய் மொழியில்தான் எளிமையாகவும், விரைவாகவும் தெளிவாகவும் செய்ய இயலும். மேலும் அவர்களும் பிறர்க்குப் புகட்டவும் பரப்பவும் செய்யும்போது சமூகம் முழுவதும் புரியும் சக்தியை விரைவில் பெற்று சமூக மதிப்பீட்டை உயர்த்த உதவும். டால்ஸ்டாய் நாவலில், லெவின் என்ற நில உடைமையாளர் நிலத்தைப் பங்கிக் கொடுக்க அழைத்தும் மக்கள் ஐயப்பாட்டோடு புரிந்து கொள்ள இயலாதவர்களாய் இருந்ததால் வரமறுத்தனர் எனக்கூறுவது இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். மேலும் சமுகக் கேடுகள் என்பன கூட்டு முயற்சியாலேயே நீக்கக் கூடியவை. தனித்த ஒருவரோ சிறு குழுவோ மட்டும் செய்தால் சமூகம் முழுமையையும் மாற்றிவிட முடியுமா? தெருக்களில் மலம் கழிக்கக் கூடாது என அறிவுடையார் அறியினும் பாமர மக்கள் அறிந்து கடைப்பிடிக்கவில்லையானால் எவ்வாறு சமூகம் முழுமையும் தூய்மையாகவும் அதனால் விளையும் நோயைப் போக்குவதாகவும் அமைய முடியும்? எனவே சிலர் கல்வி கற்பதனால் மட்டும் சமூகக் கேடுகளைத் தகர்க்க முடியாது. **சமூகம் முழுவதும் கற்பதற்குரிய அடிப்படைச் சமூக நலங்களைப் புரிந்து செயல்படுதற்குரிய படிப்பினை முதலில் தருவது நம் கடமையாகும்.** அப்போதுதான் கல்வி சமூக மதிப்பீட்டை உயர்த்த இயலும். அதற்குக் கற்றோர் அனைவரும் பாமர மக்களுக்குக் கல்வி புகட்டுவதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். கோடைக்கால விடுமுறையை வீணாக்கும் கல்லூரி மாணவர்கள் இரண்டு இலட்சத்திற்கு மேலுள்ளவர்களை இச்சமுதாயப் பணியைச் செய்யுமாறு கல்வித் திட்டத்தில் இணைத்தால் ஓரிரு ஆண்டுகளில் பாமர மக்கள் அனைவர்க்கும் புரியும் சக்தியைத் தந்துவிடக்கூடும். அரசோ, தனி நிறுவனமோ, இதைச் சாதிப்பது எளிமை இல்லை. கல்வித் திட்டத்திலேயே ஒவ்வொரு மாணவனும் குறைந்தது இருபது ஆளுக்காவது கல்வியறிவை ஊட்டினால்தான் சான்றிதழ் பெறத்தகுதியுடையவன் எனச் சேர்க்க வேண்டும். எல்லோரும் முதலில் நலங்கேடுகளைப் புரிந்து கொண்டால் தானே

பின்பற்றுதல் இயலும். புரிந்து கொண்டால் மட்டும் போதாது. செயலிலும் தீவிரமாய் இறங்க வேண்டும். நடைமுறைப் படுத்தவில்லையானால் அக்கல்வியால் பயனே கிடையாது.

திருவள்ளுவர் உலகமக்கள் அனைவர்க்கும் பொருந்துமாறு பல மாறாத உண்மைகளைக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று இங்கு எடுத்துப் பேசத்தக்கது. “கற்க கசடு அறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது என்றும் உண்மையாம். கற்றபின் அதற்கேற்றவாறு நடக்கவில்லையானால் கல்வியால் பயன் ஏதும் இல்லை எனக் கூறுவது எல்லோரும் ஒப்பக்கூடிய ஒன்று. படிக்கும் மாணவர்களும் படித்த அறிஞர்களும் தற்போதைய கல்வியைக் கற்கின்றார்களே யல்லாமல் அதனைப் பின்பற்றி நடப்பதில்லை. சுகாதாரத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் புகையிலையின் தீமைகளைப் புரியுமாறு எடுத்துக்கூறி விளக்குகிறார். ஆனால் வகுப்பறையை விட்டு வெளியே வரும் வழியிலேயே சிகரெட்டைப் பற்றவைத்துப் புகைபிடிக்கத் தொடங்குகிறார். இவர் கற்பிப்பதற்கும் இவர் நடத்தைக்கும் எதிர்முரணாக உள்ளது. எவ்வாறு இந்தக் கல்வி பயனுடையதாகும்? சமூகம் இப்பேர்ப்பட்டவர்களை மதிப்பீடு செய்து இத்துறையிலிருந்தே நீக்கிவிட வேண்டும். அதற்கேற்பச் சட்ட திட்டங்களை இயற்றும் அரசையே தெரிந்தெடுக்க வேண்டும். சொல்லுதல் யார்க்கும் எளிது. செய்வது மிகக்கடுமை. உண்மைதான். ஆனால் அறிவது செய்வதற்குத்தான் என்பதை உணர்ந்தே ஆக வேண்டும். பொதுக் கட்டடங்களுக்கு முன் சிறுநீர் கழிப்பது கேடு என அறிவோம். பள்ளி மாணவர்கட்கு இது வகுப்பறையில் கற்பிக்கப்பட்டுத் தேர்வில் வினாவும் அதுபற்றிக் கேட்கப் பெற்று அறிவுரையும் கூறப்படுகிறது. ஆனால் பள்ளியில் மணி அடித்ததும் மாணவர்கள் வெளியே ஓடிவந்து பள்ளிக் கட்டடத்தின் முன்பே கூட்டாகச் சிறுநீர் கழிப்பின் அப்படிப்பினால் பயன் என்ன? இதுபோல பல எடுத்துக்காட்டுக்கள் கூறலாம். மேடைப் பேச்சாளிகளும், அரசியல் தலைவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், ஏன், எல்லாப் பெரியவர்களுமே எவை நல்லவை என்று கூறுகிறார்களோ, எழுதுகிறார்களோ., கற்பிக்கிறார்களோ அவைகளை அவரவர்கள் கடைப்பிடிக்கக் கூடியவாறு கல்வித் திட்டம் அமைய வேண்டும். எல்லோரும் உயர்கல்வி கற்பது என்பது இயலாதது. அதிலும் உயர்ந்த தனிக்கல்வியை மிகச்சிலரே கற்க இயலும். தனித்திறன் கொண்டோர் தம் சிறப்புக்கல்வியால் பிரிந்து வாழாமல் பாமர மக்களுடனும் கலந்து வாழ வேண்டும். ஒருவரையொருவர் ஒதுக்கி வாழ்வது சமூகத்திற்குப் புற்றுநோயாகிவிடும். எல்லோருக்கும் இயற்கையின் கொடையான நுண்ணறிவுத் திறன் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் கடுமையான உழைப்புத் திறனும் நல்நடத்தையும் அவன்பால் அமைவதில்லை. அப்படியே அமைந்தாலும் கற்பதற்கு வேண்டிய பணவசதி இல்லை. இம்மூன்றும் அமைந்தவர்கள் மிகச்சிலரே. அவர்களே உயர்ந்த

சிறப்பு க்கல்வியைப் பெற இயலும். ஆயினும் அவர்கள் பாமர மக்களை விட்டுத் தனித்துப் போகாமல் குடும்பம்போல் வாழ்வதற்கான கல்வியை இருசாரார்க்கும் கற்பிக்க வேண்டும்.

வாழ்க்கையின் உண்மைகளையும் நோக்கத்தையும் தேடிக்கண்டுபிடித்துப் புரிந்து கொள்ள, கல்வி இருந்தாக வேண்டும். சரியான வழியில் வாழ்வதற்கு உரிய நெறிகளையும் முறைகளையும் காட்டுவதாக, பயிற்சி தருவதாக, செயல்படுத்த முடிவதாகக் கல்வி இருத்தல் இன்றியமையாதது. எல்லாரும் ஓர்குலம், எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர்விலை என உணர்ந்து எல்லாரும் ஒன்றுபோல வாழ்வதற்கான மனிதநேயக் கல்விநெறியை வகுத்தாலன்றிச் சமூக மதிப்பீடு உயரவழியில்லை. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் தானே எல்லா நூல்களும் கூறுவது. இதைச் செயல்படுத்துவதற்கான கல்வித்திட்டம் வேண்டும். அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்து வரும் உலகப்போக்கிற்கேற்ப, கல்வியறிவுடன் தொழில் நுட்பத்திறன்களும் செயல்முறைப் பயிற்சியுடன் இணைத்துக் கற்றால்தான் பயன் உண்டு. அவ்வாறு கற்கும் போது ஒவ்வொருவனும் ஒரு சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். தான் கற்ற கல்வியும் திறனும் தன்போன்ற உலக மனிதர்கள் எல்லார்க்கும் உதவுவதற்காகவே என்றும், எக்காரணம் கொண்டும் யாரையும் சுரண்டுவதற்கல்ல என்றும், மனிதர் உணவை மனிதர் பறிக்கவோ மனிதர் நோக மனிதர் பார்க்கவோ செய்வதில்லை என்றும் உறுதிமொழி எடுத்துச் செயல்படுத்த வேண்டும். தன் வாழ்விற்கு முதலிடம் தராமல் தன்பணியும் கல்வியும் மக்கள் சமூகத்திற்காகவே என எண்ணித் தனக்கும் தன் குடும்பத்திற்கும் சிறிதளவே அப்பணியிலிருந்து பெறவேண்டுமேயன்றிச் சமூகத்தைச் சுரண்டித் தன்னலம் மிக்கதாய் அமைவது ஆகாது. உச்சத் தொண்டும் குறைந்த இலாபமுமே உள்ளுணர்வில் பதியத்தக்க கல்விதேவை. தன்னைத் தொழிலில் அர்ப்பணித்துக் கொண்டு சமூகத்திற்குத் தொண்டாற்றும் மனப்பக்குவத்தைக் கல்வி தருதல் இன்றியமையாதது.

கல்வியறிவையும் தொழில் நுட்பத்திறனையும் விட அவற்றின் பயன்பாடே உயர்நிலையானது. தற்கால நவீன சமுதாயத்தில் இரண்டு முக்கியமான கெடுதல் நிறைந்த முடிவுகளைத்தரும் கல்விப்போக்கு காணப்படுகிறது (1) கல்வியை அரசியலுக்கும் பொருளாதாரத்திறகும் கருவியாக்கி உள்ளமை, இதனால் கல்வியின் பெருமதிப்பும் சுதந்திரமும் அவற்றால் திருடப்பெற்றுள்ளன. (2) கல்வி என்பது இக்காலத்தில் சிறப்பு எனக் கருதப்படும் அறிவியலுக்கும் தொழில் நுட்பத்திறனுக்கும் அடிமைப்பட்டு அவற்றிற்கு வேலைக்காரனாக மாறியுள்ளது. இந்த இரண்டு போக்குகளிலும் மனித சமூகத்திற்குரிய மனித மரியாதையை இழக்கத் தொடங்கிப் படிப்படியாய் இழந்து வருகிறது.

ஒவ்வொரு மனிதரும் சிற்சில திறமைகளைக் கொண்டவர்; தகுதிகளையும் குணங்களையும் உடையவர். எனவே தன்பால் உள்ள திறமைகளையும் குணாதிசயங்களையும் வெளிக்கொண்டு வந்து அவைகளைக் கொண்டு அன்றாட வாழ்வில் பயன்படுத்தி நிலைமைகளுக்குத்தக்கவாறு வாழ்க்கையைக் கொண்டு செலுத்தும் ஆற்றலை ஒவ்வொருவர்க்கும் கல்வி நல்க வேண்டும்.

ஒருவனுடைய தற்திறமைகளைப் பள்ளிப் படிப்பைக் கொண்டு கணித்தல் நிறைவாகாது. எல்லா முனைப்பான மாணவர்களும் பயனுடைய குடிமக்களாக அமைய இயலும் எனக் கருத இயலவில்லை. பின்தங்கிய குழந்தை, முனைப்பான இளைஞனாய்., வாலிபத்தில் தோல்வியுற்றவனாய், முதுமையில் வெற்றிவாகை சூடியவனாய், இருப்பதுண்டு. வின்சென்ட் சர்ச்சிலும், தன் எழுபதாவது வயதில் கிறித்தவ சமயத்தைச் சீர்திருத்திய கிரேக்கப் பாதிரி தியோடரும், விவேகானந்தரும், எடுத்துக் காட்டுகளாவர். முனைப்பாய் அமையாத மாணவர்கள் பிற்காலத்தில் சமுதாயத்திற்கு நற்பயன் விளைவிப்பவராய் இருத்தல் உண்டு. பாரதியாரையும், இராமலிங்க சுவாமிகளையும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். பல விஞ்ஞானிகள் இவ்வகையைச் சார்ந்தவர்களே.

அறிவு வளர்ச்சியின் வேகமும் அவற்றிற்குத் தரும் பொருள் விளக்க வேறுபாடுகளும் வளர்ந்து வரும் இக்காலத்தில் நிறுவனங்களில் பெறும் கல்வி மட்டும் போதாது. நிறுவனங்களில் கற்றவை வாழ்க்கை முழுவதற்கும் பயன்படுவதில்லை. சில நேரங்களில் பயனில்லாதனவாகவும் அமையும். நிறுவனங்களில் பெறும் சான்றிதழ்களோ பட்டங்களோ தற்காலிகமானவை. வாழ்க்கை முழுவதும் வளர் நிலைக்கேற்பக் கற்றுக் கொண்டே இருந்தால் தான் சமூக மதிப்பைப் பெற இயலும். ‘சாகும்வரை கற்றுக்கொண்டே இரு’ என்ற வள்ளுவர் மொழி முக்காலத்திலும் உண்மை. 16 வயதோ 22 வயதோ இருக்கும் போது முதல் வகுப்பு என்றும் மூன்றாம் வகுப்பு என்றும் கல்வியில் கூறுவது அந்நேரத்திற்குச் சரி. வாழ்க்கை முழுவதும் அம்மதிப்புக்கு அவன் ஏற்றவனல்லன். எனவே வாழ்க்கை முழுவதும் பகுதி நேரக் கல்வி கற்பதற்குத் திட்டமும் வாய்ப்பும் தரவேண்டியது சமூகத்தின் கடமையாகும்.

பசி, தாகம், காமம், தாய்மை, பயம், வீரம் போன்ற இயல்புணர்ச்சிகளும் வேட்கைகளும் (Instincts and impulses) மக்களின் செயல்களுக்கு அடிப்படை. அவைகளை அடித்து விரட்டி மனத்தின் அடித்தளத்திற் சிறைப்படுத்தினாலும், வழிகளை மூடினாலும், கசிந்துருகும் அன்பும் ஒப்புரவும் ஒத்துழைப்பும் ஏற்படுவதற்குப் பதிலாக, காய்ந்து உலர்ந்து இறுகும் பிரிவுகளும் பிணக்குகளும் போராட்டங்களுமே உண்டாகின்றன. இந்தச் சமூகப் பொதுவுணர்ச்சிகளைப் பயனளிக்கும் வாய்க்காலில் செலுத்தாமல் முற்றிலும் அடைத்து அணைபோடுவது

அழிவையே உண்டுபண்ணும். இவைகளைப் பதப்படுத்துவதற்கான கல்வி நெறியே சமூக மதிப்பீடுகளை உயர்த்தும்.

படிப்பும் கல்வியும் பரவிவிட்டால் பிணக்குகளும் போராட்டங்களும் நீங்கும் என்பது உண்மையன்று. நாடுகளுக்கிடையே பெரும்போர்கள் நிகழ்வதற்குக் காரணமானவர்கள் படித்தவர்களே. கல்வி மட்டும் அறிவையும் மக்கட் பண்பையும் அளித்துவிடும் எனச் சொல்ல இயலாது. சமூகம் அறமெனக்கருதாதையும், ஒழுக்க விதியாகவோ சட்டமாகவோ செய்தாலும், நடைமுறைப்படுத்த இயலவில்லை. அன்பும் அறனும் கூடிய மக்கட்பண்பு வளரவில்லை.

பண்பாடு என்பது மக்களுடைய சிந்தனை, சொல், செயல், கருவிகள் ஆகிய அனைத்தின் முழுமையாகும். மக்கட்பண்பு சமூக நீதியினும் மிக்குயர்ந்து பரந்த ஓர் உறவு நிலையாகும். அவரவர்கள் பெறுமானத்தைத் தீர்மானித்து அதற்கு இடையூறாக நிற்காமல் இருப்பது மட்டுமன்று. அதற்கு மேலாகவும் போய், அவர்களுக்கு நலம் செய்யும் பண்புமாகும். அதைக் கட்டாயப்படுத்தவும் முடியாது. மேலும் கட்டாயப்படுத்துவது சமூக நீதியைக் கொன்று குழி தோண்டிப் புதைப்பதாகும். இதைத்தான் டாயின்பியும், டைசாகு இக்கிடாவும் மானமிகு பெருந்தகைமை வாழ்வு (Dignity of life) என்கின்றனர். கூரிய அறிவு படைத்தாலும் மக்கட் பண்பு இல்லாமல் இருத்தல் கூடும் என்பதை அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர் எனத் திருவள்ளுவர் கூறுகிறார். மதிப்பீடு என்பது ஒன்றைச் சார்ந்து அமைவது. மக்கட்பண்போ அல்லது மானம்மிக்க பெருந்தகைமை வாழ்வோ அப்படி அன்று; முழுமையானது; தனித்து உயர்ந்து இறைமைப் பண்புடையது. மனிதருக்குள் நம்பிக்கையும் கூட்டுறவும் ஏற்படும்போதே பொதுமதிப்பீட்டுக்குரிய அளவுகோல்காண இயலும். ஒருவன் தன் மக்கட்பண்பைப் பணத்திற்கோ பதவிக்கோ தன் வாழ்வைக் காப்பதற்கோ விற்பானானால் அவன் பிறரால் இகழப்படுவதுடன் தன்னைத்தானேயும் இகழ வேண்டியனவாகின்றான். அது உடலுக்கும் உயிருக்கும் கோழைத்தனமுமாகும். தன் வாழுயிரை இழந்து உலகத்தைப் பெற்றாலும் என்ன இலாபம் என இயேசு கிறித்து கேட்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவனை அழித்தோ கையூட்டுக் கொடுத்தோ செய்யும் செயல் பெருந்தகைமையற்ற செயலாவதோடு அவன் பெருந்தகைமையை முழுவதும் இழந்தவனாகின்றான். டாயின்பி (Toynbee) *கூறுவது:* "A human being is dignified in so far as he is disinterested altruistic, compassionate, loving and devoted to offer living beings and to the universe. He is undignified in so far as he is greedy and aggressive". தன்னலமற்றவனாய், பிறர்க்கென வாழும் பெற்றியாளனாய், பிறர் துயரைத் தன் துயரைப்போல் உணர்பவனாய், அன்புடையவனாய் உலகமுழுதுமுள்ள

ஒவ்வொரு உயிரின் மீதும் அருளுடையவனாய் எவன் ஒருவன் இருப்பானோ அவனே மானமிக்க பெருந்தகைமையாளன், மக்கட்பண்புடையவன். அவ்வாறின்றிப் பேராசையும், வலுச்சண்டைக்கு இழுக்கும் முனைப்பும் கொண்டவன் மானமிழந்த பெருந்தகைமையற்றவனாவான். இவ்வாறான நற்பண்புகளையும் தீப்பண்புகளையும் உணர்த்தி மக்கட்பண்புடையவனாக்கும் கல்வித்திட்டம், பயிற்சி நெறிமுறை தேவை. இதனைத் தனி மனிதன், குடும்பம், சமூகம், அரசு ஆகிய நான்கும் இணைந்து செயல்படுத்தும் நாள்தான் நல்நாள். இல்லையானால் பூமி அதிர்ச்சி, புயல், பெருவெள்ளம், வறட்சி, எரிமலை, தொற்றுநோய், கொடிய பூச்சிகள் போன்றவை அழிப்பது போல மனித சமுதாயம் விரைவில் அழியும். எனவே காந்தியடிகளும் வள்ளுவரும் காட்டும் மனித நெறியில் நின்று உலகை உய்விக்க முயல்வோமாக. “The disparity between our technology and our ethics is greater today than it has everbeen. This is not simply humiliating, it is mortally dangerous” என்கிறார்கள் அர்னால்டு டாயின்பியும், டைசாகு இக்கிடாவும். எனவே அறவுணர்வையும், தொழில்நுட்ப அறிவியலையும் இணைக்க முனைய வேண்டாமா?

## 3. தியாகமற்ற வழிபாடு - காந்திய அணுகல்

**-சு. பாண்டியன்**

"பிறவிப் பெருங்கடல் நீந்துவார் - நீந்தார்

இறைவனடி சேராதார்" -திருக்குறள்

தமிழக அரசானது தேர்ந்தெடுக்கப்பட்ட இந்துக் கோயில்களில் அன்னதானம் செய்யவும், ஆன்மீக அறப்போதனைகளை நடத்தவும் திட்டமிட்டுச் செயல்படுத்தி வருவது போற்றுதற்குரியது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையின் வாக்கு.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் நமது முன்னோர் வாக்கு.

மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா ஆகிய மூன்றின் இணைந்த நல்லெண்ணங்களின் செயல்பாட்டு வளர்ச்சிதான் மனித நேயத்தினையும், அமைதியையும் உருவாக்குகின்றது. தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியாவின் பல்வேறு புனித ஸ்தலங்களிலும் அன்னதானம், அறிவுதானம், ஆன்மதானம் ஆகியன பன்னெடுங்காலமாக நடந்தேறி வருகின்றது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்பதே சாலச் சிறந்த அறமாகவும் கருதப்பட்டது. அதனையே, "தனியொரு மனிதனுக்கு உணவில்லை எனில் இந்த உலகினை அழிப்போம்" எனப் புரட்சிக் கவிஞன் பாரதி முழங்கினான்.

இந்து சமயத்தின் தத்துவமான மறுபிறவிக் கொள்கையினை நம்புகின்ற அனைவரும் கடவுளின் அருளைப் பெறவும், மோட்சத்தை அடையவும் பல்வேறு தான, தர்ம காரியங்களில் ஈடுபடுகின்றனர் என்பதை அறிகிறோம். மோட்சம் அடைவதே ஒவ்வொரு இந்துவின் இறுதி இலட்சியமாகக் கருதப்படுகின்றது. அந்த இலட்சியத்தை அடைய நான்குவிதமான மார்க்கங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. அவை, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் மற்றும் இராஜயோகம் என்பனவாகும்.

மகாத்மா காந்தியடிகள், 'அபரிக்கிரகா' என்ற இந்துசமயத்தின் தத்துவத்தினையே 'தர்மகர்த்தா' சிந்தனையாக செயல்படுத்த எண்ணினார். அதனையே, விநோபாஜி அவர்கள் பூமிதான இயக்கமாக (18.4.1951) செயலாக்கம் செய்தார். இதன் பரிணாம வளர்ச்சியாக கிராமதானம். சம்பத்தானம், புத்திதானம், உழைப்புதானம், ஜீவதானம் என்ற பல்வேறு

நிலைகளில் தானதர்மங்களை காந்திய இயக்கத்தினர் செயலாற்றி வந்தனர். மனுதர்ம நூலில், மாபாவங்கள் ஐந்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, பொய், கொலை, மதுவருந்துதல், திருட்டு, குரு மனைவியைக் கூடுதல் இவை தனித்தும், சேர்ந்தும் மாபாவங்கள் ஆகும். மேலும், சிறுபாவங்கள், பாவத்தின் விளைவு, பாவத்தின் கழுவாய், பாவத்திலிருந்து மீள வேள்வி போன்ற அறநெறிகள் மனுநீதி நூலில் காணப்படுகின்றன.

காந்தியடிகள் தன்னை 'எல்லாப் பண்பாடுகளுக்கும் பிரதிநிதி' எனக் கூறினார். சர்வோதய சமுதாய உருவாக்கத்திற்கு ஆதாரமாக தனிமனிதர்களின் ஒழுக்க நெறிகளுக்காக பதினொரு மகாவிரதங்களை மேற்கொள்ள வேண்டும் எனக் கருதினார். மேலும், சமூக - பண்பாட்டு, அரசியல் - கல்வி - சமய - அறிவியல் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏழு சமுதாயப் பாவங்களை அகற்றவும் அறிவுறுத்தினார். இக்கட்டுரையானது, "தியாகமற்ற வழிபாடு" பற்றிய மகாத்மா காந்தியின் கருத்துக்களைத் தொகுத்து அளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கடவுள் வழிபாடு

காந்தியடிகள் தனது பிறப்பு முதலாக பல்சமயச் சூழலில் வளர்ந்துள்ளார். பல்சமய நல்லிணக்கத்திற்காகவும், இந்து - முஸ்லீம் ஒற்றுமைக்காகவும் உறுதுணையாக விளங்கினார். 1929க்குப் பின்னர் "உண்மையே கடவுள்" என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்.

இந்து சமயத்தில், உருவ வழிபாடு சிறப்பான அம்சமாகக் கருதப்படுகிறது. உருவ வழிபாடு என்பது கிருத்துவர்களின் "சிலுவை வழிபாடு" மற்றும் இஸ்லாமியர்களின் "காபா வழிபாடு" இவைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. காந்தியடிகள் ஆலய வழிபாட்டினைப் பற்றிக் கூறியபோது, "கோயில்கள் ஆன்மீக மருத்துவமனைகள்" எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், கடவுளைப் பற்றிக் கூறியதாவது, "கடவுள் உண்டு என்பது பற்றி ஐயப்படுவதற்கு இல்லை. நாம் இருப்பது உண்மையானால் நம் பெற்றோர்களும், அவர்களைப் பெற்றவர்களும் உண்மையானால் பிரபஞ்சத்தைப் படைத்த கடவுளும் உண்மை. அவனில்லாமல் நாமும் இல்லை. இதனாலேயே உலகத்தில் அனைவரும் ஒரு கடவுளைப் பல பெயர்கள் இட்டு வழிபாடு செய்து வருகின்றனர்," (இளைய இந்தியா-21.1.26).

"ஆண்டவனுக்கு நாமங்கள் ஆயிரம் மட்டுமல்ல. உலகத்தில் எத்தனை உயிர்கள் உள்ளனவோ அத்தனை உயிர்களின் பெயர்களும் கடவுளின் பெயர்கள் ஆகும். (இளைய இந்தியா-31.12.31)

"தன்னை ஒரு தூசியாக நினைத்துப் பிரார்த்திக்க வேண்டும். அருள் மார்க்கத்தினால்

*அடக்கம் தானாக வரும். தன்னைத் தூசியாகப் பாவித்துக் கொண்டு பூஜ்யமாக ஆகிவிட்டால்தான் ஆண்டவனை நேருக்குநேர் காண முடியும். இல்லாவிட்டால் ஆண்டவனை ஒருபோதும் காண இயலாது" (இளைய இந்தியா 25.6.25)*

*"எந்தச் சிறந்த கர்மயோகியும் பூஜையையும், பக்தி செலுத்துவதையும் விடுவதில்லை. பிறருக்குச் சேவை செய்வதே பூஜையாகும்" (அரிசன் - 13.10.40)*

*"வழிபாட்டின் சாரமும் உயிரும் பிரார்த்தனை. வழிபாடு இல்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. ஆகவே பிரார்த்தனை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது" (ரகுபதி ராகவ - பக்கம்.72)*

*"ஆண்டவனுக்கு பூஜை செலுத்த எந்த நேரம் எந்தக் காலம் என்று திட்டம் வேண்டியதில்லை. அப்படித் திட்டம். போடவும் முடியாது. அவரவருடைய உள்ளத்தின் இயல்பைப் பொறுத்தது. தினசரித் திட்டத்தில் பிரார்த்தனை நேரம் முக்கியமான பகுதி. உள்ளத்தில் உள்ள அழுக்குகள் நீங்குவதற்கு வேண்டிய காரியக்கிரமமாகும். அடக்கம் தரும் சாதனமாகும்". (இளைய இந்தியா - 10.6.26)*

### *மகாத்மா காந்தியின் சிந்தனைகள்*

*காந்தியடிகள் தனது வாழ்நாளில் கடவுள் வழிபாடு மற்றும் பல்சமய வழிபாடுகள் பற்றித் தனது தெளிவான சிந்தனைகளைப் பல்வேறு சூழல்களில் வெளியிட்டுள்ளார். அதனைத் தொகுப்பது கடினமான பணியாகும். இங்கு அவரது மிகவும் பொருத்தமான சிந்தனைகளை, தியாகமற்ற வழிபாடு பற்றி வகைப்படுத்தியுள்ளோம்.*

*"எனது கொள்கை சம்பந்தப்பட்ட வரையில், என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாகும். அதில் ரகசியம் எதுவும் இல்லை. நான் என்னை எல்லாப் பண்பாடுகளுக்கும் பிரதிநிதி என்று கூறிக்கொள்கிறேன். ஏனெனில், என்னுடையசமயம், அதை எந்தப் பெயரால் குறிப்பிட்டாலும் சரி எல்லாப் பண்பாடுகளும் நிறைந்தவனாக நான் இருக்க வேண்டும் என்றே கோருகிறேன். நான் எங்கே சென்றாலும், என் வீட்டில் இருப்பது போலவே இருக்கிறேன். என் சொந்த சமயத்தைப் போல் எல்லா சமயங்களுக்கும் நான் அதே மரியாதை செலுத்துவதே அதற்குக் காரணமாகும்." (9 தரிசன்-13.4.40)*

*"எனது தத்துவம் என ஏதாவது ஒன்று இருக்குமாயின் அது. ஒருவருடைய லட்சியத்தை வெளியாரால் எத்தகைய அபாயமும் ஏற்படுவது சாத்தியமில்லை என்பதையே வலியுறுத்துகிறது. இலட்சியம் கெட்டதாக இருந்தால் மட்டுமே அதற்கு அபாயம் நேரும்.*

அவ்விதம் நேருவது நியாயமாகவும் இருக்கும். அல்லது அந்த இலட்சியத்தை ஆதரிப்பவர்கள் உண்மையில்லாதவர்களாகவோ கோழைகளாகவோ அல்லது தூய்மையற்றவர்களாகவோ இருந்தாலும் இலட்சியத்திற்கு அபாயம் ஏற்படும்." (அரிசன்.25.7.36)

“தர்ம வாழ்க்கை என்பது இந்த ஜென்மத்தில் முடிவுபெறாத யாத்திரையாகும். ஆனபடியால், சமயங்கள் வேறுபாடுகளும், கொள்கைகள் வேறுபாடுகளும் உலகத்தில் இருந்து வருகின்றன. அனைவருக்கும் ஒரு கொள்கை, அல்லது ஒரு மதம் என்பது முடியாத காரியம்". (இளைய இந்தியா - 22.11.28)

“ஒரு மரத்தில் பல கிளைகள் இருப்பதுபோல் தர்மம் என்பது ஒரே மரம். சமயங்கள் கிளைகளையும், இலைகளையும் போல வேறுபட்டிருந்தாலும் மரம் ஒன்றே. எல்லாச் சமயங்களும் கடவுளின் பிரசாதம்... பிற சமயங்களைச் சகிப்பது கடமையாகும். பிற சமயங்களையும் கௌரவிக்க வேண்டும்." (இளைய இந்தியா-2.10.30)

“இறைவன் ஒருவன் உண்டு. பாவ புண்ணியத்தின் பலனாக மறுஜென்மம் உண்டு. முக்தி உண்டு. இது இந்து சமுதாயத்தைச் சார்ந்த எந்தச் சாதாரண மனிதனும் அறிவான். நான் ஒரு சீர்திருத்தக்காரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், சீர்திருத்த உற்சாகத்தில் இந்து சமயத்தின் அடிப்படையான கொள்கைகள் எதையும் விட்டுவிடமாட்டேன்." (இளைய இந்தியா 6.10.21)

“மனிதனும் அவனுடைய செயல்களும் வெவ்வேறானவை. நற்செயலைப் பாராட்ட வேண்டும்; தீய செயலைக் கண்டிக்க வேண்டும். செயலைச் செய்யும் மனிதர், நல்லவராயிருப்பினும் தீயவராயிருந்தாலும் செயலின் தன்மைக்கு ஏற்றவாறு மரியாதைக்கும் பரிதாபத்திற்கும் உரியவராகிறார். ‘பாவத்தை வெறுப்பாயாக. ஆனால், பாவம் செய்பவரை வெறுக்காதே; என்பது உபதேசம். இது புரிந்து கொள்ள எளிதானதாகவே இருந்தாலும், நடைமுறையில் இதை அனுசரிப்பதுதான் மிக அரிதாக இருக்கிறது. இதனாலேயே பகைமை என்ற நஞ்சு உலகத்தில் பரவுகிறது. ஒருமுறையை எதிர்ப்பதும், அதைத் தாக்குவதும் என்பது தன்னையே எதிர்த்துக் கொள்ளுவதற்கு ஒப்பாகும். ஏனெனில் நாம் அனைவரும் ஒரே மண்ணைக் கொண்டு செய்த பண்டங்கள்; ஒரே கடவுளின் புத்திரர்கள். ஆகவே, நம்முள் இருக்கும் தெய்வீக சக்தியும் மகத்தானது. தனி ஒரு மனிதரை அலட்சியம் செய்வது அந்தத் தெய்வீகச் சக்திகளை அலட்சியம் செய்வதாகும். அல்லது அம்மனிதருக்கு மட்டுமின்றி உலகம் முழுவதற்குமே தீங்கு செய்வதாக ஆகும்." (சத்திய சோதனை: பக்கம்330)

“நன்மை தீமை இரண்டுக்கும் மூலம் ஆவான் இறைவன். கொலை செய்யும் சக்தியும் நோயைத் தீர்க்கும் ரண வைத்தியன் கத்தியும் இரண்டும் அவனுடைய கருவிகளே. நன்மை தீமை

*இரண்டுமே அவனுடைய உபாயங்கள். ஆயினும் நமக்குள் அவ்வாறு இரண்டையும் ஒன்றாக்கிக் கொள்ள முடியாது. மக்களின் காரியங்களில் நன்மைவேறு; தீமை வேறு. ஒன்று மற்றொன்றாய் ஆகிவிடாது. இருளும் ஒளியும் போல் ஒன்றுக்கொன்று எதிரிடையாக நிற்கும்". (அரிசன் 20.2.37).*

*"நான் ஆசைப்படுகிறேன்; பாவம் ஏதும் செய்யாமல் உண்மையை விட்டும் பிறழாமல் எண்ணம், பேச்சு, செயல் மூன்றிலும் பழுதற்ற அகிம்சையைக் கடைப்பிடித்து நடக்க ஆசைப்படுகிறேன்."(இளைய இந்தியா-9.4.25)*

*"குழந்தைப் பருவத்தின் நினைவுகள் வருகின்றன. எங்கள் ஊரில், எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்து ராமர் கோவிலுக்குத் தினமும் சென்று வருவேன். என்னுடைய ராமன் அப்போது அங்கேதான் இருந்தார். என்னுடைய பாவத்தையெல்லாம் அவர் போக்கினார். என்னைப் பாவச் செயல்களில் இறங்காமல் தடுத்தாண்டார். இது மூடநம்பிக்கையில்லை; உண்மையாகும்... இதுவே, இந்து சமுதாயத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களின் உண்மை நிலையுமாகும்." (அரிசன் 18.3.33)*

*"வேலை செய்யக்கூடிய ஆணோ பெண்ணோ யாருக்கேனும் தொழில் செய்ய வசதியில்லாமல் பசியால் வருந்தினால் அது மானக்கேடாகும். அவர்கள் பசியால் வருந்தும் போது, நாம் உண்பது பாவம் ஆகும்" (இளைய இந்தியா--6.10.27)*

*"உணவுக்கென்று உழைக்காமல் சமுகத்தில் வாழ எவனுக்கும் உரிமை கிடையாது. உடல் உழைப்பு என்பது வேள்வியே ஆகும்." (இளைய இந்தியா-10.9.28)*

*"உலகத்தில் ஏன் பாவம் இருந்து வருகிறது? இது எனக்கு விளங்கவில்லை. எவ்வளவு ஆராய்ந்து பார்த்தாலும் இந்தச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆண்டவனுக்குச் சமமாக ஞானம் படைத்திருந்தவர்களே தீர்த்திருக்க முடியும்... என்னால் தீர்க்கக்கூடிய காரியம் என்னால் செய்ய வேண்டிய கடமை, பாவத்தை வெறுப்பது ஒன்றே... பாவத்தோடு போர் செய்ய வேண்டியது என்னுடைய கடமை. உயிரைக் கொடுத்தும் அதர்மத்தோடு போர் புரிய வேண்டும் என்பதை உணர்ந்துள்ளேன்." (இளைய இந்தியா-11.10.28)*

*"உலகத்தில் தீமை இருப்பதற்கு ஆண்டவனே காரணமும் பொறுப்பும் என்று எண்ணும்போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால், சுகத்துக்கும் சந்தோசத்துக்கும் அவன் காரணமாக இருந்தால் துன்பத்துக்கும் தீமைக்கும் அவன்தானே காரணம். அவனே நியதியை அமைப்பவன். அவனே நியதி." (அரிசன்.24.2.46)*

*“தீமையை வெறுக்க வேண்டும். குற்றத்தையும் பாவத்தையும் வெறுத்தாலும் குற்றம் செய்துவிட்டவனை அன்போடு நடத்தப்பயில வேண்டும். பாவம் செய்பவர்களிடம் அன்பு செலுத்துவதினால் பாபத்தின்பேரில்நமக்குள் வெறுப்புக் குறையக் கூடாது." (இளைய இந்தியா-2.10.30)*

*“நாமெல்லாம் திருடர்கள் என்றே சொல்ல வேண்டும். என்னுடைய அவசியத்திற்கு மேல் இந்தச் சமயம் எனக்கு வேண்டாதது ஒன்றை நான் எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்தேனேயானால், அதை நான் திருடியவனே ஆவேன்" (1918). “இந்தியாவில் தற்போது ஒரு வேளை உணவு உண்டு வாழ்வோர் இலட்சக்கணக்கானோர். இந்த இலட்சக்கணக்கான ஏழைகள் பசியாற உண்டு, மானம்காக்க உடையும் அடைந்த பிறகே நீங்களும் நானும் எதையும் நமது என்ற சொல்லி உரிமை பாராட்ட முடியும். நமக்கு அறிவு வேண்டும். நம்முடைய ஆசைகளைக் குறைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஓரளவு மிஞ்சும்படி செய்வது நம்முடைய கடமையாகும்"(1918) (ரகுபதி ராகவ-பக்கம்.47)*

*“பிறர் நன்மைக்காகச் சேவை செய்யும் பக்தனுடைய இதயமே ஆண்டவன் பிரியப்படும் கோயில். அவனே தேடி வருவான். “ஆபூபென் ஆகும்" அத்தகைய ஒரு பக்தன் அவன் ஆடம்பரமின்றி ஏழைகளுக்கும் பணிசெய்து வாழ்ந்தான். அதனால், தேவலோகத்தில் வைத்திருந்த பட்டியலில் முதல் இடம் பெற்றான். ..நீசர்கள் என்று கருதப்படுகிறவர்கள் வாழுகின்ற சேரியே ஆண்டவனுக்குப் பிரியமான சேத்திரம். அத்தகைய குடிசைகளில் வாழ்பவர்களுக்காக நூல் நூற்றோமானால் அதுவே பெரிய பிரார்த்தனையும், பூஜையும், வேள்வியுமாகும்"(இளைய இந்தியா-24.8.25)*

*‘‘குஷ்டரோகி விடுதிகளைப் போல் பல நிறுவனங்களை பாதிரிமார்கள் நிறுவியிருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும்..." ....“மானிட வர்க்கத்திற்குத் தொண்டு செய்யும் பல வழிகளில் குஷ்டரோகி விடுதிகளை ஸ்தாபிப்பதும் ஒன்றாகும்"... “அத்தகைய விடுதிகளில் தன்னலமின்றி ஊழியம் செய்யும் பாதிரியார்களுக்கு நான் மரியாதை செலுத்துகிறேன். உலகத்தில் உள்ள திக்கற்றவர்களும், அனாதைகளும் ஒருபுறம் இருக்கட்டும்; இந்தியாவில் உள்ள இத்தகையோர் விசயத்தில் கூட அக்கறை காட்டப்படாத அளவுக்கு இந்துக்கள் அவ்வளவு இரக்கமற்றவர்களாகி விட்டதை ஒப்புக் கொள்ள நான் வெட்கமடைகிறேன்" (இளைய இந்தியா-26.2.25)*

*1941 ஏப்ரல் மாதம் டாடாபூர் சென்று, மனோகர் திவானின் தொழுநோய் பணிகளைப் பார்வையிட்ட காந்தியடிகள், “எல்லோரும் என்னை மகாத்மா என அழைப்பதை அறிவேன்.*

ஆனால், உண்மையிலேயே மனோகர் திவான்தான் உண்மையான மகாத்மா ஆவார்", எனக் குறிப்பிட்டுள்ளார்.

“இன்று நடைமுறையில் காணும் இந்து சமயத்தின் மோசமான குறைகளை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பல மடங்களும், அவற்றின் நிர்வாகமும் இந்து சமயத்திற்கே அவமானமாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. சில மடங்களுக்குக் கொடுக்கப்படும் பணம். தொண்டின் மூலம் பக்தர்களுக்குத் திரும்பக் கிடைப்பதில்லை. இந்த நிலையை ஒன்று ஒழித்துக்கட்ட வேண்டும். அல்லது சீர்திருத்த வேண்டும்." ...“இந்து சமயத்தில பல குறைகள் இருக்கின்றன என்பதை நானே உணருகின்றேன். அதில் தீய அம்சங்களும் இருக்கின்றன" (அரிசன்.6.3.37)

“பாவம் செய்தவர்களைக் கோவில்களுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று கூறுவது சரியல்ல. கோவில்கள் ஆன்மீக ஆஸ்பத்திரிகள் போன்றவை. ஆன்மீகம் சம்பந்தமான நோயாளிகளை, அதாவது பாவம் செய்தவர்களே கோவில்களில் சிகிச்சை பெற முதல் உரிமை பெற்றவர்களாவர். கோவில்கள் பாவம் செய்தவர்களுக்காகவே ஏற்பட்டவை. முனிவர்களுக்காக ஏற்பட்டவையல்ல... எனவே, பாவமற்றவர்களுக்கு மட்டுமே கோவில்கள் ஏற்பட்டிருக்குமாயின் மானிடவர்க்கம் முழுவதற்குமே தடையாகக் கோயில் கதவுகளைப் பூட்ட வேண்டியதுதான்". (அரிசன்.19.5.1934).

“தீண்டாமை இந்து சமயத்தை அழிக்கவல்ல ஒரு சாபக்கேடு, ஒரு களங்கம், ஒரு பயங்கர சக்தி வாய்ந்த விஷம். இவ்விதம் நான் ஏன் கூறுகிறேன் தெரியுமா? பிறப்புக் காரணமாக ஒரு மனிதரைக்கூடத் தீண்டாதவராகக் கருதுவது நமது ஜீவகாருண்ய உணர்ச்சிக்கு முற்றிலும் விரோதமானது. உலகத்திலுள்ள வேத நூல்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து பாருங்கள். இந்துக்களைத் தவிர மற்ற மக்களின் நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பாருங்கள்; அவற்றில் தீண்டாமைக்கு உவமையாக நீங்கள் எதையும் கண்டுபிடிக்க முடியாது.... “தீண்டாமை என்ற ஓர் அசாதாரண நிலை, இந்து சமயத்தில் மாத்திரமே உள்ள விசித்திரமாகும். அது பகுத்தறிவுக்கு முரணானது. அதற்குச் சாத்திரங்களில் ஆதாரமில்லை. அரிசனங்கள் விசயத்தில்நாம் பாவங்கள் செய்துள்ளோம். மன்னிக்க முடியாதவாறு அவர்களைக் கேவலமாக நடத்தியுள்ளோம். இந்தியாவிலுள்ள அரிசனங்கள் வேறொரு மதத்திற்கு மாற்றப்பட்டு இந்து சமயத்தில் ஒரே ஒரு அரிசன் பாக்கியிருந்தால்கூட அரிசனங்களுக்காகக் கோயில்களைத் திறந்துவிட வேண்டும் என்பதை நான் வற்புறுத்தத்தான் வேண்டும்." (அரிசன்20.6.36)

அரிசன சேவக சங்கம் அமைத்ததன் நோக்கமாக காந்தியடிகள் கூறியதாவது, ‘‘இச்சங்கமானது, முன்னோர் செய்த தீண்டாமைக் கொடுமைகளுக்காக வருந்தி, பிராயச்சித்தமாக பரிகாரம் செய்ய முன்வந்ததோர் அமைப்பு ஆகும்" (அரிசன். 28.7.46)

அரிசன சேவா சங்கத்தில் முழுவதுமாக சாதி இந்துக்கள் மட்டுமே அங்கத்தினர்களாக இருந்து செயல்பட வேண்டுமென அறிவுறுத்தினார். தீண்டாமை என்பது அரிசனங்களின் குறையல்ல; சாதி இந்துக்களின் குறையே ஆகும். (இளைய இந்தியா-26.11.31)

தேவகோட்டைப் பகுதியில், அரிசனங்கள் கிறிஸ்துவ சமயத்திற்கு மாறுவதைக் குறித்து வருந்தி, அரிசன சேவகர் எழுதிய கடிதத்திற்குப் பதிலாக காந்தி அரிசனில் எழுதியது: உடல் சம்பந்தமான வசதிக் குறைவுக்காக மதம் மாறுவது ஆன்மீக மதமாற்றம் அல்ல: எனினும், தங்களுடைய வாழ்க்கை வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்காகவும், கொடுமைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவும் அரிசனங்கள் மதம் மாறுவதைக் குறித்து நாம் முனுமுனுக்கக் கூடாது" “மதமாற்றத்திற்குக் காரணம் சாதி இந்துக்களே என்பதை நாம் உணருவதுடன் அதை ஒத்துக் கொள்ளவும் வேண்டும்" “ஒரு சாரார், அரிசனங்களைத் துன்புறுத்துவதில் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். மற்றொரு சாரார், கவலையின்றி அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விரண்டுமே ஒருவித நோய்கள் தான்....அந்த நோயின் ஒரு சிறு விளைவே மதமாற்றமாகும். காரணத்தை அகற்றிவிட்டால் மதமாற்றம் மாத்திரமல்ல மற்றும் பல மோசமான விளைவுகளும் நின்றுவிடும்."(அரிசன்.22.3.35)

“தீண்டாமை இருந்து வருவதைவிட இந்துமதம் அழிந்து போவதே மேல் என்பேன்... தீண்டாதார் இஸ்லாம் சமயத்திற்கோ, கிறித்துவ சமயத்திற்கோ மதம் மாற்றப்பட்டு விடுவதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. இதனை நான் சகித்துக் கொள்வேன். ஆனால், கிராமங்களில் இரண்டு பிரிவுகள் உண்டாக்கப் படுவதால் இந்து சமயத்திற்கு ஏற்படக்கூடிய சிக்கலை நான் சகித்துக் கொள்ள முடியாது. தீண்டாதார் இராஜ்ய உரிமைகளைப் பற்றிப் பேசுபவர்களுக்கு இந்தியாவைப்பற்றித் தெரியாது. இந்திய சமூகம், இன்று எவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரியாது. இதை எதிர்க்க வேண்டியவன் நான் ஒருவனே என்றால், என் உயிரைக் கொடுத்தும் இதை எதிர்ப்பேன்" (லண்டன் R.T.Cல் மைனாரிட்டி கமிட்டியில் காந்தி பேசியது. (இளைய இந்தியா-26.11.31)

“இந்து சமயம் தூய்மைப்படுத்தப்பட வேண்டுமானால், தீண்டாமையைப் போலவே, தீமையை நிரந்தரமாக்கும் இந்தப் பழக்கம் (தேவதாசிகள்) ஒழிந்தாக வேண்டும்... தேவதாசிகள், சமூகத்தின் தீமைக்கு உட்பட மறுத்துவிட்டால், அந்தப் பழக்கம் உடனே தொலைந்து விடும்.

ஆனால், இது அவ்வளவு எளிதான வழியுமல்ல. பசி பாவத்தை அறியாது... ஆகையால், விபச்சாரத்திற்குப் பதிலாக, குற்றமற்ற ஒரு தொழிலை அவர்களுக்குக் கண்டுபிடித்துக் கொடுக்க வேண்டும்" (அரிசன்.14.9.34)

''திக்கற்றவர்களுக்குத் தொண்டு செய்வதே சமயம். திக்கற்றவர்களின், துன்பத்திற்குள்ளானவர்களின் உருவத்திலேயே கடவுள் நமக்குக் காட்சி தருகிறார். நமது நெற்றியில் நாம், கடவுள் பக்திக்கு அறிகுறியாகத் திலகங்கள் இட்டுக் கொண்டிருந்தாலும் திக்கற்றவர்களையும் துன்பத்திற்குள்ளானவர்களையும் அதாவது கடவுளை நாம் கவனிப்பதில்லை". இன்றைய மதத்தை நன்கு அறிந்து கொண்டுள்ள ஒரு பிராமணர், நிச்சயமாக வேதத்திற்கு இரண்டாவது இடமே கொடுப்பார். இராட்டின சமயத்தையே பிரசாரம் செய்வார். பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான தன் தேச மக்களின் பசியைத் தீர்ப்பார்." (இளைய இந்தியா-14.8.24)

ஸ்ரீ வில்டுராண்ட் கேட்ட கேள்விக்குக் காந்தி கூறியது... "என் சம்பந்தப்பட்ட வரையில் சமயமும், தருமமும் ஒன்றுதான்". "உயிர்வாழும் எல்லாவற்றிற்கும் தொண்டு செய்வதில்தான் நான் ஆறுதலையும் ஆனந்தத்தையும் காண்கின்றேன். ஏனெனில், தெய்வீக அம்சமே எல்லா உயிர்களுடைய இறுதி நிலையாகும். அநீதிகளையும், தீய சக்திகள் யாவற்றையும் எதிர்த்துப் போராடுவதையே நான் பெருமையாகக் கருதுகின்றேன்." (ஸ்ரீ வில்டுராண்ட் எழுதிய வாழ்வின் பொருள் என்ற நூலிலிருந்து எடுத்தது)

## முடிவுரை

இந்தியாவில் சமயச் சடங்குகளுக்கும், வழிபாடுகளுக்கும்தான் அதிகமான பணமும், நேரமும் செலவிடப்படுகின்றன. மக்களின் அன்றாட வாழ்வும் ஆலய வழிபாடுகளைப் பிரதானப்படுத்தியே அமைந்துள்ளது. பல்சமயத்தினர் வாழ்கின்ற இந்தியாவில் கோயில்களைப் பாதுகாக்கவும், புனித ஸ்தலங்களை உரிமை கொண்டாடுவதிலுமே அரசும், அரசியல்வாதிகளும் கவனம் செலுத்துகின்ற போக்குகள் சமயத் தீவிரவாதிகளை ஊக்குவித்து, சமயப் பூசல்களை உருவாக்கி, மனித உயிர்களைப் பலிகடாக்களாக்கும் நிலைமை வளர்ந்து வருகின்றது.

காந்தியடிகள், சிறுவயதில் கோயில்களுக்குச் சென்று வழிபட்டுள்ளார். ஆனால், சமயங்கள், கடவுள் பற்றிய விழிப்புணர்வு பெற்ற பின்னர், கோயில்களுக்குச் சென்று வழிபட்டதேயில்லை. அரிசனங்களை அனுமதிக்காத கோயில்களைத் தாமும்

புறக்கணித்ததாகக் கூறியுள்ளார். அரிசனங்கள் ஆலய நுழைவுப் போராட்டங்களில் கலந்துகொண்டு கோயில்களில் வழிபாடு செய்தார். தனதுவாழ்நாளில் பெரும்பாலும் சர்வ சமய வழிபாடுகள்தான் செய்து வந்தார்.

“மனிதர்வர்க்கம் ஒப்புரவினால் மேம்பாடு அடைந்து வருகின்றது. முன்னேற்றம் பெறச் செய்யும் சக்தி அன்பே ஆகும். அன்பே மனிதனைக் காக்கும் சக்தியும், உயர்த்தும் சக்தியும் ஆகும். நம்மையும் அறியாமல் மனித வர்க்கத்திலுள்ள இந்த ஒப்புரவு வேலை செய்து வருகின்றது. மனித வர்க்கத்துடன் உயிருடன் இருப்பதே பிரிந்து விலக்கும் வேகங்களைக் காட்டிலும், ஒன்று சேர்க்கும் அன்பு வேகமே அதிக சக்தி வாய்ந்தது என்பதற்கு அத்தாட்சியாகும்." (இளைய இந்தியா-12.11.31)

இந்து சமயத்தினர், வருடம் முழுவதிலும் ஆலைய வழிபாடு, உருவ வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர். மகாமகம், திரிவேணி சங்கமம், புனித யாத்திரை போன்றவற்றை மேற்கொள்கின்றனர். கிருத்துவ சமயத்தினர் நற்செய்திக் கூட்டங்கள், ஞாயிறு ஆலய வழிபாடு போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இஸ்லாம் சமயத்தினர் 5 வேளைத் தொழுகை, மெக்கா புனிதப் பயணம் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். பிற சமயத்தினரும் தத்தம் வழிகளில் இறைவழிபாடுகள் செய்கின்றனர்.

ஒரு புறம், பல்சமயத்தினரும் ஆலய வழிபாடுகளில் ஒருவரை ஒருவர் மிஞ்சும் அளவிற்குப் பக்திமான்களாகப் பவனிவருகின்றனர். மறுபுறம், சமயத்தீவிரவாத அமைப்புகளை ஏற்படுத்தி, சமயப் பூசல்களை உருவாக்கி, சமயத்தின் பெயரால் மனித உயிர்களைப் பலிகொள்ளும் இழிவான காரியங்களில் ஈடுபடுகின்றனர். இனிவரும் காலங்களில் சமய ஒற்றுமை, உலக அமைதி இவற்றிற்காக செயலாற்றக்கூடிய சமுதாயம் உருவாக வேண்டும். தியாக உணர்வும், விவேகமும் கொண்ட இளைய சமுதாயம் தேசிய நலன்களுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட முன்வர வேண்டும். “சேவைக்காகவே உணவு உண்பதும், நீர் அருந்துவதும், தூங்குவதும், விழிப்பதுமாகும். இப்பிறவியில் சுகமும், பின்பு மோட்சமும் தரும்" (எரவாடா சிறையிலிருந்து எழுதியது).

## 4. பெரியார் உணர்த்தும் சுயமரியாதையும் சமதர்மமும்

**வே. ஆனைமுத்து**

### பண்டைச் சமூகங்களில் பேதங்கள்

உலகில் முறையான வரலாற்றைத்தொடங்கி வைத்தவர்கள் கிரேக்கர்களே ஆவர் எனக் கருதலாம். சாக்ரடீஸ் (கி.மு. 469 - 399) காலத்திற்குப் பிறகு கிரேக்க நாட்டில் தோன்றிய பிளேட்டோ (கி.மு.428-347) பொதுவுடைமை என்கிற கருத்தைப் பற்றிப் பின்வரும் தன்மையில் அறிவித்துள்ளார்.

ஆளும் வர்க்கத்தாரும், தத்துவ ஞானிகளும் தங்களுக்கென்று தனியாகச் சொத்து வைத்திருக்கக் கூடாது; தங்களுக்கென்று குடும்பம் வைத்திருக்கக்கூடாது. இவையிரண்டும் அவர்களைச் சுயநலவாதிகள் ஆக்கிவிடும் என்பதாக அவர் கருதினார்.

அத்துடன், "திருமணம் என்பது தனிப்பட்டவருடைய விவகாரமாக இருத்தல் கூடாது. அரசு விதிக்கும் கட்டுத் திட்டத்துக்கு உட்பட்டதாக அது இருத்தல் வேண்டும். அதே போல் குழந்தைகள் அரசின் மேற்பார்வையில் வளர்க்கப்பட்டு அரசினாலேயே பராமரிக்கப்பட வேண்டும்" எனவும் அவர் கருத்தறிவித்தார்.

"மக்களின் வாழ்க்கையின் பேரில் பெருமளவு ஆதிக்கத்தை அரசு கொண்டிருக்க வேண்டும்; மக்களின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதில் அரசு மேலாதிக்கம் செலுத்த வேண்டும்" எனவும் பிளேட்டோ கருதினார்.

பிளேட்டோ அறிவித்த இந்தச் சிந்தனைகளைச் சில மாற்றங்களோடு, அவர்தம் மாணவரான அரிஸ்டாட்டில் (கி.மு.384-322) ஏற்றுக் கொண்டார்.

பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் கொண்டிருந்த இப்படிப்பட்ட எண்ணங்கள் தத்துவ விசாரணைக்கு உரியவைகளாகவே கொள்ளப்பட்டன.

ஆயினும் பிளேட்டோவின் சிந்தனையில், "மனித சமுதாயத்தில் பேதம் இருத்தல் கூடாது" என்கிற எண்ணம் முகிழ்த்திருந்ததையும், அந்தப் பேதத்தை அகற்றுவதில் அரசுக்குத்தான் பெரும் பங்கு உண்டு என்கிற முடிவு கொள்ளப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும்.

ஆனால் இந்த எண்ணங்களை அடைவதற்கான வழி முறைகள் யாவை என்பது பற்றி மேற்கண்ட அறிஞர்களால் எதுவும் சொல்லப்படவில்லை.

*மிகப் பழம்பெரும் வரலாற்றைப் பெற்றுள்ள கிரேக்கத்தில் பிரபுக்கள், விவசாயிகள், தொழில் வினைஞர்கள், அடிமைகள் எனப் பல பிரிவினராக மக்கள் பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பெற்றிருந்த உரிமைகள் வெவ்வேறானவை; வித்தியாசம் உள்ளவை. ஆயினும் அங்கு இவை கி.மு. சகாப்தத்திலேயே பலங்குன்றத் தொடங்கிவிட்டன.*

*உரோம் நாட்டில் பேட்ரிஷியன்ஸ் (பிரபுக்கள்), பிளெபியன்ஸ் (அடிமைகள்) என்கிற பெரும் பிரிவுகள் நிலை பெற்றிருந்தன.*

*இவ்வாறு கிரேக்க நாட்டிலும், உரோம் நாட்டிலும் இருந்த பேதங்கள் பொருளாதார அடிப்படையில் சொத்து உடையவன் - இல்லாதவன்; ஆண்டான் - அடிமை என்கிற முறையிலேயே இருந்தன. அரசியல் உரிமைகளை அளிப்பதிலும் இந்தப் பேதம் ஆளுமை பெற்றிருந்தது.*

*தொழில் என்பது வாரிசு முறையில் வருவதும், பெண்கள் விரும்பிய ஒருவரை மணக்க முடியாத நிலையும் உரோம் நாட்டில் நிலை பெறலாயின. இதுவும் அங்கு நிலவிய ஒரு வகையான சாதி அமைப்பு முறையே ஆகும்.*

*மிகப் பழமை வாய்ந்த நாகரிகம் உடைய சுமேரியர்களிடையே அரசன், மத குரு, பிரபு* (Rich) *, வணிகன், கைவினைஞன், ஏழை* (Poor) *என்கிற சமூகப் பிரிவுகள் இருந்தன. இந்த அமைப்பு அங்குக் கி.மு. 2000 வரையில் பலம் பெற்றிருந்தது. மக்களின் வாழ்க்கைத் துறைகள் அனைத்தையும்பற்றிய சட்ட வரையறைகளைச் சுமேரியர் உருவாக்கியிருந்தனர் எனவும் நாம் அறிகிறோம்.*

*பாபிலோனியர்களிடையேயும் முப்பெரும் சமூகப் பிரிவுகள் இருந்தன. பணக்காரர்கள், மத குருமார்கள், அதிகாரிகள் முதல் பிரிவினர்; வணிகர்கள், கைவினைஞர்கள், விவசாயிகள் இரண்டாம் பிரிவினர்; அடிமைகள் மூன்றாம் பிரிவினர். இந்தச் சமூக அமைப்பும் கி.மு.2000லேயே அங்குப் பலமிழந்துவிட்டது.*

*உலக நாடுகளில் மிகப்பரந்த பெரு நாடாக உள்ளது சீனா ஆகும்.*

*சீனத்தில் பிரபுக்கள்* (Nobles)*, ஏழைகள்* (Poor) *என்கிற பெரும் பிரிவுகள் கி.மு. ஆறாம் நூற்றாண்டு வரை செல்வாக்குப் பெற்றிருந்தன. இடைக்காலத்தில் (1) படித்த பிரிவினர், (2) விவசாயிகள், (3) கைவினைஞர்கள், (4) வணிகர்கள், (5) போர் வீரர்கள் எனப் பல பிரிவுகள் தோன்றின. இந்தப் பிரிவுகள் கி.மு.2ஆம் நூற்றாண்டு வரை செல்வாக்குப் பெற்றிருந்தன.*

இத்தகைய உலக நாகரிக வரலாற்று விவரங்களைக் கொண்டும், அங்கெல்லாம் இருந்த சமதாய அமைப்பைக் கொண்டும் அவற்றுடன் இந்திய நாகரிகத்தையும் சமுதாய அமைப்பையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்தியாவின் பழங்கால வரலாறு கி.மு.3000இல் தொடங்குவதாகக் கொள்ளலாம். ஆயினும் இந்தியாவைப் பற்றிய தெளிவான கால வரையறையுடன் கூடிய வரலாறு. அலெக்சாண்டரின் (கி.மு.356-323) இந்தியப் படையெடுப்பிலிருந்தே (கி.மு.327-325) நமக்குப் புலனாகிறது.

வேத காலத் தொடக்கத்திலேயே பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்கிற பேதங்கள் இந்தியாவில் நிலைபெறத் தொடங்கிவிட்டன. அக்காலத்தில் அவ்வளவு கொடுமையான தன்மையில் இந்தப் பேதங்கள் நிலை பெற்றிருக்கவில்லை. ஆயினும் வேத காலத்திற்குப் பின்னால் மேற்கண்ட நால்வருண பேதம் தகர்க்கக்கூடாத ஒன்றாகவும், மீறக்கூடாத (Rigid) ஒன்றாகவும் இங்கு நிலைபெற்றுவிட்டது.

முதல் தோற்றத்தில், இந்த வருண பேதம் என்பது கிரேக்கம், உரோம், சுமேரியா, பாபிலோனியா, சீனம் போன்ற நாடுகளில் நிலவிய மாதிரியில் அரசர், மதகுரு, பிரபு, விவசாயி, கைவினைஞர் என்கிற அதே தன்மையில்தான் இந்தியாவிலும் அமைந்திருந்தது எனத் தென்படக்கூடும்.

ஆனாலும், (1) மேலை நாடுகளில் அவ்வாறு நிலவிய பேதங்கள் கி.மு. சகாப்தத்திலேயே பலமிழந்து விட்டன. (2) அங்கெல்லாம், அந்தப் பேதங்கள், பிறவி அடிப்படையிலானவையாக இல்லை (3) அந்தப் பேதங்கள் அதிகாரம், பொருள், தொழில் என்கிற பேதங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்ததால், ஆங்காங்கு இருந்த சமூகத்தார் ஒரு பிரிவினருடன் இன்னொரு பிரிவினர் கலக்க முடியாது, உறவு கொள்ளக்கூடாது என்கிற நிலைமை அங்கெல்லாம் விரைவில் சரிந்து விட்டது.

ஆனால் இந்தியாவில் அப்படி இல்லை.

இந்த அமைப்பை முதன் முதல் கண்டித்தவர் புத்தரே ஆவார். அவர் தந்த எதிர்ப்பு இரண்டொரு நூற்றாண்டுகளிலேயே இங்குப் பலமிழந்தது.

புத்தருக்குப் பின்னர் பவுத்தமும், சமணமும், இந்தியாவில் சில பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது உண்மை. ஆயினும் இவை இரண்டும் “வேத எதிர்ப்பு மதங்கள்" என

ஆக்கப்பட்டு கி.பி.12ஆம் நூற்றாண்டிலேயே உருத்தெரியாமல் அழிக்கப்பட்டுவிட்டன. எனவே இந்த மதம் எந்த ஆட்சி மாற்றத்தினாலும் நிலைகுலையாத ஒன்றாக இங்கு இடம்பெற்றது.

பவுத்தம், சமணம் ஆகியவற்றுக்கு மிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கிறித்துவம் அய்ரோப்பிய நாடுகளில் மிகப் பெருஞ் செல்வாக்குடன் திகழ்ந்தது. இந்நிலையில் அய்ரோப்பிய நாடுகளில் மத குருவுக்கும் அரசனுக்கும் இடையே நடந்த உரிமைப் போராட்டங்களில் மத குருக்கள் தோல்வியே கண்டனர்.

பின்னர் அரசனுக்கும் மக்களுக்கும் இடையே நடந்த உரிமைப் போராட்டங்களின் விளைவாக மக்கள் நாயகம் என்கிற சனநாயக முறை அங்குத் தலையெடுத்தது.

மேலை நாடுகளில் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் அரசனுக்கும், மக்களுக்கும் இடையே நடந்த உரிமைப் போராட்டங்கள் பாராளுமன்றங்கள் உருவாவதிலும், பாராளுமன்றங்களின் மூலமே சட்டங்கள் உருவாவதிலும் முடிந்தன.

எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வாக்குரிமை என்கிற நிலைமைகள் அங்கெல்லாம் படிப்படியாக வரத்தொடங்கின.

கல்வி வாய்ப்பு அனைவர்க்கும் கிட்டத் தொடங்கியதுடன், கி.பி. 18 19ஆம் நூற்றாண்டுகளில் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புகளும், சாதனங்களும் பொருள் உற்பத்தி ஆதாரங்களிலும் உற்பத்தி முறைகளிலும் மிகப் பெரிய புரட்சி வாய்ந்த மாற்றங்களை விளைவித்தன.

உலக நாடுகள் பெரும்பாலானவற்றில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக இருந்தது. பின், மின் ஆற்றல், நூதனக் கருவிகள் முதலானவை வேளாண்மைத் துறையில் விளைவித்த முன்னேற்றங்கள் நிலப் பிரபுத்துவ முறையின் அடிப்படையையே தகர்த்தன.

ஆயினும் அறிவியல் சாதனங்கள் ஏற்கெனவே நிலப் பிரபுக்களாக இருந்தவர்களின் கைக்கருவிகளாகப் பயன்பட்டு, மேலும் மேலும் அவர்கள் பெருநிலப்பிரபுக்களாக ஆவதில் பேருதவியாக அமைவதில் போய் முடிந்தது.

கைவினை மூலமாக நெசவு மற்றும் உழவுக் கருவிகள், மற்ற பொருள்களைச் செய்யும் நிலைமை மாறி ஆலை நெசவு பெரிய ஆலைகளில் இரும்புக் கருவிகள், எண்ணெய் உற்பத்தி என்கிற நிலை உருவாயிற்று. இத்துறைகளில் புகுத்தப்பட்ட அறிவியல் வளர்ச்சி என்பது தொழில் துறையில் ஒரு சிலரின் ஏக போகப் பொருளாதார வளர்ச்சி உருவாகவும் நிலை பெறவும் பேருதவியாக நின்றது.

எனவே, மேலை நாடுகளில் கி.மு. சகாப்தத்திலேயே பலமிழந்து போன பழைய சமுதாயங்களிடையே அறிவியல் வளர்ச்சி, ஆலைத்தொழில் வளர்ச்சி காரணமாக பணக்காரர் (Rich), ஏழை (Poor), உடையவர் (Haves) , இல்லாதவர் (Have-nots) என்கிற பெயரில் பொருளாதார பேதம் மட்டுமே தொழில் வளர்ச்சிக்குப் பிறகும் நிலைபெற்றது.

அதாவது, உழவர்களுக்குச் சொந்தமான நிலங்களை ஒருவனே வைத்துக் கொண்டு, அறிவியல் கருவி வசதிகளையும் சில உழவர்களையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு அவன் மட்டுமே நிலப்பிரபுவாக உருவாகும் நிலையும் கூடவே தோன்றிற்று.

அதேபோல் பல்லாயிரம் கைத்தறிகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அறிவியல் சாதனங்களையும், சில நெசவாளர்களையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு ஒருவன் மட்டுமே பெரிய நெசவு ஆலை முதலாளியாக ஆகும் நிலையும் உருவாயிற்று.

இந்த நிலை உருவான மேலை நாடுகளில் பழைய சமுதாய அமைப்புகள் பலமிழந்து போய் இருந்த காரணத்தினால், பணக்காரன் ஏழை என்கிற பேதம் உருவானது அனைவர்க்கும் பளிச்செனத் தெரிந்தது.

பழைய சமுதாய பேதம் பலமிழந்திருந்ததாலும், கல்வி வளர்ச்சி ஏற்பட்டிருந்ததாலும் பணக்காரரின் ஆதிக்கத்தை உணர்ந்த ஏழைகளில் சிலரேனும் அந்த ஆதிக்கத்தை எதிர்த்து அங்கெல்லாம் ஒன்று சேரவும், தங்களின் உரிமைகளுக்காகப் போராடவும் முன்வர முடிந்தது.

ஆனால் இந்தியச் சமூகத்தில் நிலை அப்படி இல்லை.

## இந்தியச் சமூகம் பற்றிய பெரியாரின் கருத்து

பெரியார் ஈ.வெ.இரா. இந்தியச் சமூக அமைப்பைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இங்குச் சமதர்ம சமுதாய அமைப்பு வர வேண்டுமானால் என்னென்ன செய்யப்பட வேண்டும் என்பதைக் கூறியுள்ளார். அவர் கூறியுள்ள பின்வரும் கருத்துகள் சிந்திக்கத் தக்கவை.

“இந்தத் தேசத்தில் ஏற்பட்டிருக்கும் ஜனசமூக அமைப்பின் அஸ்திவாரமே சரியாய் இல்லாமல் இருக்கிறது. இந்த அஸ்திவாரத்தின் மீது கட்டக்கூடிய எந்த அமைப்பும் ஜனசமூகத்திற்கு நன்மையளிக்கக் கூடியதல்ல.

ஒரு தகப்பன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளுக்கு எப்படிச் சம அந்தஸ்தும் சம உரிமையும் உண்டோ, அப்படியே ஒரு தேசத்தில் பிறந்தவர்களுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் மக்கள் சுகமாக வாழமுடியும். ஏதோ தான் பிறந்த வேளையின் பலன்

கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியதுதான்; மற்றொருவன் சுகத்தை அனுபவிக்கப் பாத்தியதை உடையவன்தான் என்னும் சோம்பேறி எண்ணமே மக்களை அழித்து வருவதற்கு முக்கிய கருவியாய் இருக்கிறது. இந்த எண்ணம் மாறுபட வேண்டியது அவசியமாகும். இதற்காக எவ்வளவு தியாகம் செய்தாலும் அது வீணாகாது. ஜனங்களின் மனோபாவமும், வாழ்க்கையை நடத்தும் முறையும் மாறினாலொழிய, வேறு ஒரு முறையாலும் நன்மை உண்டாகாதென்பது திண்ணம்.

தற்போதிருக்கும் நிலைமையில் சுயராஜ்யம் வந்தால் குருட்டு நம்பிக்கையும், வைதிகமும்தான் வலுக்கும். தற்போது சுயராஜ்யம் அனுபவிக்கும் தேசங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஏழைகள் நிலைமை அங்கே எப்படி இருக்கிறது? அமெரிக்கா ஜனநாயக ஆட்சியுடையதாகத்தான் இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றார்கள். அமெரிக்கா உலகில் செல்வத்திற்கே இருப்பிடமாயிருந்தும், அங்கே ஏழைகள் நிற்க நிழலின்றி, உறங்க இடமின்றித் தவிக்கிறார்கள். ஜெர்மனியின் நிலைமை இன்று எவ்விதமாக இருக்கிறதென்பது அனைவருக்கும் தெரிந்த விஷயமே. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை உடையதென்று சொல்லும். இங்கிலாந்து சுயராஜ்யதேசமேயாகும். உலகத்தின் பல நாடுகள் இங்கிலாந்தின் ஆளுகைக்குட்பட்டிருக்கின்றன. ஆனால், அங்கு ஏழைகள் படும் துயரம் கொஞ்ச நஞ்சமல்ல.

சுயராஜ்யமுள்ள ஒவ்வொரு தேசமும் இப்படித்தான் இருக்கிறது. சுயராஜ்யமோ, அன்னிய ராஜ்யமோ, குடி அரசோ, முடி அரசோ எந்தவிதமான முறையிலும் மக்கள் சுகம்பெற முடியாத நிலைமையில் உலகம் இன்று இருந்து வருகிறது.

ஆகையால், ஏழைகள் துயரத்தைப் போக்க இந்திய சுயராஜ்யம் இப்போது சிலரால் கருதப்படும் முறையில் யாதொரு நன்மையும் கொடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். சமதர்மத்தையும், பொது உடைமையையும் அஸ்திவாரமாகக் கொண்ட இராஜாங்க அமைப்பொன்றே மக்கள் சுகவாழ்க்கைக்குரிய வழியாகும். இதற்காக ஏன் நாம் தியாகம் செய்யத் தயாராயிருக்கக் கூடாதென்று கேட்கிறேன்" (பகுத்தறிவு 9.9.1934; பெ.சி.பக்.1689)

“பொதுவுடைமை என்பது ஒரு குடும்பத்திலுள்ள சொத்துக்கள், வரும்படிகள், தொழில்கள், இலாப நஷ்டங்கள், இன்ப துன்பங்கள், போக போக்கியங்கள், பொறுப்பு, கவலைகள் முதலாகியவை எல்லாம் எப்படி அக்குடும்ப மக்களுக்குப் பொதுவோ, அதுபோல்தான், ஒரு கிராமத்திலோ, ஒரு பட்டணத்திலோ, ஒரு மாகாணத்திலோ, ஒரு தேசத்திலோ, ஒரு கண்டத்திலோ, ஒரு உலகத்திலோ உள்ள மேற்கண்டவைகள் எல்லாம்

ஆங்காங்குள்ள அவ்வளவு பேருக்கும் பொதுவானது என்பதாகும். சுருக்கமாய்ச் சொல்ல வேண்டுமானால், பொதுவுடைமைக் கொள்கையின் கட்சி இலட்சியம் - உலகம் பூராவும் ஒரு குடும்பம்; உலக மக்கள் எல்லோரும் சகோதரர்கள்; உலகத்திலுள்ள செல்வம், இன்பம், போக போக்கியம் முதலியவை எல்லாம் அக்குடும்பச் சொத்து குடும்ப மக்கள் (உலக மக்கள்) எல்லோருக்கும் அக்குடும்பச் சொத்தில் (உலகச் சொத்தில்) சரிபாகம் என்கின்ற கொள்கையாகும்.

“ஆகவே, இப்படிப்பட்ட கருத்துக்கொண்ட பொதுவுடைமைக் கொள்கையை வெறுக்கவோ, எதிர்க்கவோ நியாயமான முறையில் யாதொரு காரணமும் இருப்பதாய் நமக்குத் தோன்றவில்லை. ஆனால், சகோதரனுடைய பங்கை மோசம் செய்து சகோதர துரோகத்தின் மூலம் அதிகப் பங்குக்கு ஆசைப்படுகிற மனப்பான்மை உள்ளவனும், குடும்ப வேலைகளில் தனக்குள்ள சரிபாகப் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்ளாமல் மற்ற சகோதரர்களையே அதிகமாய் உழைக்கச் செய்து தான் சோம்பேறியாயிருந்து, அதிகப் பங்கையடைந்து, மற்றவர்களுக்குப் போதுமான அளவு கூலி கொடுக்காமல் வஞ்சித்து ஏமாற்ற வேண்டும் என்கின்றதான மனப்பான்மை உள்ளவனும்தான் பொதுவுடைமைக் கொள்கையை வெறுக்கவும் எதிர்க்கவும் கூடும். (குடி அரசு 10.9.1933; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் பக்.1707)

“பொதுவுடைமை வேறு; பொது உரிமை வேறு. பொதுவுடைமை என்பது சமபங்கு என்பதாகும்; பொது உரிமை என்பது சம அனுபவம் என்பதாகும்.

இந்நாட்டில் சாதியால் கீழ்ப்படுத்தப்பட்ட மக்களுக்குச் சம உடைமை இருந்தாலும் சம உரிமை (அனுபவம்) இல்லை என்பது குருடனுக்கும் தெரிந்த சங்கதியாகும். அதனாலேயே அவர்கள் உடைமை கரைந்து கொண்டே போகிறதுடன் உடைமைக்கு ஏற்ற அனுபவமும் இல்லாமல் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் தனி உரிமையை முதலில் ஒழித்துவிட்டோமானால், தனி உடைமையை மாற்ற அதிகப்பாடுபடாமலே இந்த நாட்டில் பொதுவுடைமையும் நிலைத்து நிற்கும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் சாதி காரணமாகத்தான் பலர் மேன்மக்களாய் - பணக்காரர்களாய் இருக்கிறார்கள்; இருக்கவும் வேண்டியிருக்கிறது. இது இன்றையப் பிரத்தியட்சக் காட்சியாகும்.

ஆங்கிலத்தில ‘கேஸ்ட்’ ‘கிளாஸ்’ (Caste, Class) என்ற இரண்டு வார்த்தைகள் உள்ளன. அதாவது தமிழில் சாதி வகுப்பு என்று சொல்லப்படுவனவாகும். சாதி பிறப்பினால் உள்ளது; வகுப்பு தொழில் அல்லது தன்மையினால் ஏற்படுவது.

தொழிலும் தன்மையும் யாருக்கும் ஏற்படலாம். சாதிநிலை, அந்தந்தச் சாதியில் பிறந்தவனுக்குத்தான் உண்டு; பிறக்காதவனுக்குக் கிடையவே கிடையாது.

உலகில் சமதர்ம உணர்ச்சிக்கு விரோதமான தன்மைகளில் மற்ற தேசத்திற்கும் இந்தியாவுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்து வருகிறது. அதென்னவென்றால் மற்ற நாடுகளில் ஒரு விஷயந்தான் முக்கியமாகக் கருதப்படுகிறது. அதாவது, முதலாளி (பணக்காரன்) வேலையாள் ஏழை என்பதுவேயாகும். ஆனால் இந்தியாவிலோ மேல் சாதியார் - கீழ்ச்சாதியார் என்பது ஒன்று அதிகமாகவும் முதன்மையானதாகவும் இருப்பதால் 'அது' பணக்காரன் - ஏழை தத்துவத்திற்கு ஒரு கோட்டையாக இருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறது. ((குடிஅரசு 4.10..9.1931; பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள் பக்.1680)

பெரியாரின் இந்தக் கருத்து இந்தியாவில் சமதர்மம் மலர வேண்டும் என்பதையும் இந்தியச் சமுதாய அமைப்பில் சமதர்மம் வரச் செயற்கையாக உள்ள முதன்மையான தடை எது என்பதையும் தெளிவாகச் சுட்டிக் காட்டுவது ஆகும்.

உலக நாடுகளில் இன்று வரையிலும் உள்ள சமூக அமைப்புகள், அவ்வமைப்புகள் பற்றி அங்கெல்லாம் இயங்குகிற அரசமைப்புகள் வரையறை செய்துள்ள விளக்கங்கள் பற்றி ஓரளவு தெரிந்து கொண்டால் இதனை நாம் மேலும் தெளிவுபட விளங்கிக் கொள்ள முடியும்.

உலகில் பல நாடுகளிலும்இன்று உள்ள சமுதாயங்களில் பேதங்களைப் பாராட்டுவதற்கான கூறுகள் பல உள்ளன.

அமெரிக்க அய்க்கிய நாடுகளில், இனம், நிறம், முற்காலத்திலிருந்த அடிமை நிலை இவற்றுள் எதன் காரணமாகவும் ஒருவர்க்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படவோ குறைக்கப்படவோ கூடாது என அந்நாட்டு அரசியல் சட்டத்தின் விதி (Article XV) கூறுகிறது.

பிரெஞ்சுக் குடி அரசு, அந்நாட்டு அரசியல் சட்டத்தின் முகவுரையில், இனம், மதம் காரணமாக எந்த ஒரு பிரெஞ்சுக் குடிமகனின் மாற்ற முடியாததும், புனிதமானதுமான உரிமைகளை அடிமைப்படுத்தவோ, இழிவுபடுத்தவோ செய்யாது என மீண்டும் பிரகடனப்படுத்துகிறோம் என 1952இல் உறுதிப்படுத்தியது.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடிஅரசு, அரசியல் சட்டம் விதி 3 (Articleï 111) இல்

“பால், வம்சவழி, இனம், மொழி, பிறப்பிடம், பழங்கால் வழி (Origin) மதம், அரசியல் கொள்கை இவற்றுள் எதன் காரணம் கொண்டும் எந்தக் குடிமகனுக்கும் புறக்கணிப்புக் காட்டுவதோ (Prejudiced) சலுகை காட்டுவதோ இல்லை" எனத் தெளிவாகக் கூறுகிறது.

இந்நாடுகள் எல்லாம் அய்ரோப்பாவையும், மேலைத் திசையையும் சார்ந்தவை.

கீழை நாடுகள் அல்லது ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள பேதங்களுக்கான கூறுகள் இத்தன்மைகளை மட்டும் கொண்டவையா? இல்லை. இத்தனித்தன்மையை நாம் கூர்ந்து நோக்க வேண்டும்.

குறிப்பாக, இந்தியாவில் உள்ள பேதம் பாராட்டப்படுவதற்கான கூறுகள் பற்றி, இந்திய அரசியல் சட்டம் விதி 12(5), விதி 16(2), விதி 23(2), விதி 29(2) முதலானவற்றில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த நான்கு விதிகளும் அரசமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிப் பேசுகிற மூன்றாம் பகுதியின் கீழ் (Part III) வைக்கப்பட்டுள்ளன.

இவ்விதிகளின் மூலம் குறிக்கப்பட்டுள்ள பேதத்திற்கான கூறுகள் யாவை?

மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம், கால்வழி (Descent), குடியிருக்குமிடம், மொழி என்பனவே அக்கூறுகளாகும்.

விதி 23(2) இல் மட்டும் (Class or Caste) வகுப்பு அல்லது சாதி என்று கூடுதலாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் மூலம் நாம் உணருவது என்ன?

உலக நாடுகள் பலவற்றிலும் இல்லாததும் நூதனமானதுமாக சாதி என்கிற ஒரு கூறு, அதிகமானதாகவும், பேதத்துக்கு அடிப்படையானதாகவும், பிறப்பை அடிப்படையாகக் கொண்டதாகவும், மிகவும் வலுவானதாகவும் இங்கே இருக்கிறது. இதைத்தான் பெரியார் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

## இந்தியச் சமுதாயம் : அடித்தளமும் மேல் கட்டுமானங்களும்

இந்த நூதனமான ஒரு பேதத்தன்மை இந்தியாவில் மட்டுமின்றி, இந்திய வம்சா வழியினர் குடியேறியுள்ள எல்லா நாடுகளிலும் இன்றும் உள்ளது.

மார்க்சிய சித்தாந்தப்படி, சமூகத்தின் அடித்தளமாக விளங்குகிற உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திக் கருவிகள், உற்பத்தி உறவுகள் என்கிற பொருளியல் அமைப்புக் காரணமாக அந்தந்தக் காலத்தில் தோன்றிய மேல் கட்டுமானங்கள்தாம் மதம், சாதி, அரசியல் கொள்கைகள், நீதி மன்றங்கள், சட்டங்கள், ஒழுக்க விதிகள் மற்றும் இவற்றைச் சார்ந்தே வளர்ந்துவிட்ட

கருத்துகள், தேற்றங்கள் (theories) , சமுதாய உணர்ச்சிகள், இயல்புகள் ஆகிய எல்லாம் ஆகும் என்பது உண்மை.

எனவே சமுதாயத்தின் அடித்தளத்தை அடியோடு மாற்றிடாமல் அந்த அடித்தளத்தின் விளைவுகளாகவும் பிரதிபலிப்புகளாகவும் இருக்கிற மேலே சொல்லப்பட்டவை போன்ற கட்டுமானங்களை அழிக்கவோ, மாற்றவோ, சிதைக்கவோ முயற்சிப்பது மார்க்சிய சித்தாந்தத்துக்கு எதிரானது - கருத்தோடு போராடுவது - நிழலோடு சண்டையிடுவது என்பது இதன் பொருள்.

இயக்கவியல் பொருள் முதல்வாதமும், வரலாற்றியல் பொருள் முதல் வாதமும் நமக்குக் கற்பிப்பது இதுதான். இதுவே உண்மை.

எனவே, பழமையின் எச்சமாக இருக்கிற கூறுகள் தொடர்ந்து நிலைபெற்றிருப்பதை அகற்றிட நாம் முயல வேண்டும்; அத்துடன் கூட, பொதுவுடைமை உணர்வை உண்டாக்கி வளர்த்தெடுக்க ஏற்ற நிலைமைகளையும் உண்டாக்க வேண்டும். இதுவே பழமையின் எச்சங்களை அகற்றுவதற்கான அடிப்படை வழிமுறையாகும். சமதர்மம் மலர்ந்த பிறகும் கூட, தொடர்ந்து செய்யப்பட வேண்டிய பணியாகும் இது. ஏன்?

கி.பி. எட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்தியாவில் சாதி அமைப்பில் ஏற்பட்ட இறுக்கமும், தனித்தனிக் குலங்கள் ஒன்றோடு மற்றொன்று கலந்து உறவாட இயலாதபடி தனித்தனிக் கூடங்களில் பிரித்து (Compartmentalisation) வைக்கப்பட்டதும், ஒரு சாதியார் இன்னோர் சாதியாரோடும், ஓர் உள்சாதியார் இன்னோர் உள்சாதியாரோடும் திருமண உறவு கொள்ளுவது தடுக்கப்பட்டு அகமணமுறை வலியுறுத்தப்பட்டதும், இந்துக் கூட்டுக் குடும்ப முறை வலியுறுத்தி அனுசரிக்கப்பட்டதும், இந்து வாரிசு உரிமை - தந்தை வழிச் சொத்துரிமை முதலானவை நடைமுறைக்கு வந்ததும், சாதி ஆசாரங்களை உடைப்பவர்களைச் சாதியை விட்டு விலக்கி வைத்ததும், இன்னின்ன சாதிக்கு இன்னின்ன தொழில் என நிர்ணயித்துவிட்டதும்., சாதி அமைப்பைக் கட்டிக் காத்து வருகின்றன.

இப்படி எண்ணுவது கூட நிலப்பிரபுத்துவக் கலாச்சாரம் - இந்து மதக்கட்டளைகள் - சாத்திர விதிகள் இப்படிப்பட்ட மேல்கட்டுமானங்கள், அழிக்கப்படுவதால் சாதி ஒழிந்து விடும் என்று கருதுவதற்கே ஒப்பாகும் எனக் கூறலாம்.

இந்தத் தளங்களில் மட்டுமே நின்று கொண்டு பெரியார் ஈ.வெ. இராமசாமி சாதியைச் சாடினார் என்றுதான் இந்தியாவில் உள்ள எல்லாநிலை மார்க்சியவாதிகளும் கருதுகின்றனர்.

ஆனால் பெரியார் அப்படிக் கருதவில்லை என்பதே உண்மை. ஏனெனில் சாதி அமைப்பு என்பது இங்கு ஒரு மேல்கட்டுமானமாக மட்டும் இல்லாமல், அடித்தளமாக விளங்குகிற உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திக் கருவிகள், உற்பத்தி உறவுகள் என்கிற பொருளாதார அமைப்பிலும் பெரிய அளவில் ஊடுருவி இடம்பெற்று விட்டது என்பது உண்மையாகும்.

இந்தக் கணிப்பு கண்கூடாக இன்றும் உள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**உற்பத்திச் சாதனங்கள்**

இந்தியாவில் தலைமையான உற்பத்திச் சாதனமாக இருப்பது வேளாண் நிலமாகும்.

வேளாண்மை செய்யப்படும் நிலப்பரப்பில் ஏறக்குறைய 100க்கு 60 பங்கு வானம் பார்த்த நிலங்கள்; மீதி 40 பங்கு ஆற்றுப் பாசனம், ஏரிப்பாசனம், இறைவைப் பாசன நிலங்கள்.

இப்படி எந்த வகைப்பட்ட நிலமாக இருந்தாலும் பெரிய நில உடைமைக்காரர்களாக இருப்பவர்கள் மக்கள் எண்ணிக்கையில் 100க்கு 15 பேராக உள்ள மேல்சாதிக்காரர்கள்தாம். சமுதாயத்தில் மேல் தட்டுப்பிரிவினர் (Upper Crust) களாக உள்ள இவர்களே பெரிய நில உடைமைக்காரர்கள்.

100க்கு 15 பேராக உள்ள மேல்சாதியினர் அத்துணைப் பேர்களும் பெரிய நில உடைமைக்காரர்களா என்றால், இல்லை ஆனால், பெரிய நில உடைமைக்காரர்களுள் மிகப்பெரும்பான்மையினர் மேல்சாதிக்காரர்கள் என்பது உண்மை.

எனவே, மேல்சாதியினர் என்று சொல்லுவதும் - பெரிய நில உடைமைக்காரர்கள் என்று கூறுவதும் ஏறக்குறைய ஒன்றே ஆகும்.

இசுலாமியராகவும், கிறித்துவராகவும் மதம் மாறியவர்களிடையேயும் கூட, நில உடைமை என்பது, இத்தன்மையிலேயே இன்றும் அமைந்துள்ளது.

கீழ்ச்சாதியினராக உள்ளவர்களில் விபத்துப் போல மிகச்சிலர் பெரிய நில உடைமைக்காரர்களாக இருப்பது உண்மை. இன்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுகிற கீழ்ச்சாதியினருள் பெரும்பாலோர் அரை ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை உள்ள சிறு நில உடைமைக்காரர்களே. இவர்களுள் சிறுபான்மையினர் நிலமற்ற கூலி உழைப்பாளர்களே ஆவார்கள்.

ஆதிதிராவிடர் எனப்படும் தீண்டப்படாத வகுப்பு மக்களுள் இன்றும் பாதிப்பேருக்கு மேல் குறுநில உடைமைக்காரர்களாக (Marginal farmers) வும், குத்தகைக்காரராகவும், மீதிப்பேர் நிலமற்ற உடலுழைப்புக்காரர்களாகவும் கூலி வேலைக்காரர்களாகவும் உள்ளனர்.

எனவே இந்தியாவில் தலைமையான உற்பத்திச் சாதனமாக இருக்கிற வேளாண் நிலத்தைப் பெரிய உடைமைகளாகப் பெற்று, சுரண்டும் வர்க்கமாகவும், சுரண்டும் வகுப்பாகவும் இருக்கிறவர்கள் நேற்றும், இன்றும் மேல்சாதிக்காரர்களே என்று கூறினார் பெரியார்.

இந்தியாவில் சுரண்டுவோர் - சுரண்டப்படுவோர் என்கிற உற்பத்தி உறவுகள் (1) தலைமையான உற்பத்திச் சாதனமாக நிலங்களைப் பெரிய உடைமைகளாகக் கொண்டிருக்கிற மேல் சாதிக்காராார்கள் 2) சிறு குறு நில உடைமைக்காரர்களாகவும் நிலமற்ற கூலி விவசாயத் தொழிலாளர்களாகவும் இருக்கும் கீழ்ச்சாதிக்காரர்கள் என்கிற வடிவத்தில் இருப்பதை நாம் உணர வேண்டும்.

வேளாண்மை இயந்திரமயமாக்கப்பட்டதனால் மேலும் அதிகமான சுரண்டல் வாய்ப்பைப் பெற்றவர்கள் பெரிய நில உடைமைக்காரர்களான மேல்சாதிக்காரர்களே என்பதும் அறியத்தக்கது. மேலும் இவர்களே ஆளும் வர்க்கமாக வகுப்பாக சாதியாக இன்றும் உள்ளனர்.

ஒவ்வொரு நாட்டிலும்ஆளும் வகுப்பு உண்டு. ஆனால் எந்தக் கால கட்டத்திலும், எந்த நாட்டிலும் இந்தியாவில் உள்ளது போன்று இடம் மாறாத அதிகாரப் பதவிகளில் அழுத்தமாக அமர்ந்து கொண்ட ஓர் அதிகார வர்க்கத்தை நாம் கண்டதில்லை. இந்திய ஆளும் வர்க்கத்தின் மூன்று குணாம்சங்கள் இந்த வேறுபாட்டைக் காட்டும். அவையாவன: (1) மேல்சாதிப் பிறப்பு, (2) உயர் ஆங்கிலக்கல்வி உடைமை; (3) சொத்துடைமை. இந்த மூன்று கூறுகளில் எந்த இரண்டு கூறுகள் ஒருவனிடம் சேர்ந்து இணைந்து விட்டாலும் அவனை ஆளும் வர்க்கத்தில் (Ruling Class) அது சேர்த்துவிடும் என டாக்டர் ராம் மனோகர் லோகியா கூறியுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது.

### பெரியார் கூறுகிறார்:

ரொக்கச் சொத்துக்களும், பூமிச்சொத்துக்களும், அநேகமாய் உயர்ந்த சாதிக்காரர்களிடமும், லேவாதேவிக் காரர்களிடமும் போய்ச் சேரக்கூடியதாய் இருப்பதால், உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்களையும் கண் வைத்துக் கொள்ளையடிக்கப் பட்டிருப்பதாகத் தென்படுகிறது.

ஆகவே, இவற்றிலிருந்து, இந்த (சமதர்ம) முறை உயர்ந்த சாதித் தத்துவத்தையும் பணக்காரத் தத்துவத்தையும் அழிப்பதற்கே கையாளப்பட்டதாக நன்றாகத் தெரிய வருகின்றது. உலகத்தில் பொதுவாக யாவருக்கும் ஒரு சமாதானமும் சாந்தி நிலையும் ஏற்பட வேண்டுமானால், இந்த முறை கடைசி முயற்சியாக ஏதாவதொரு காலத்தில் கையாளப்பட்டே தீரும் என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. (குடி அரசு. 4.1.1931, பெரியார் ஈ.வெ. இரா. சிந்தனைகள். பக்.1676)

(1) இந்தியாவில் சொத்தைக் குவியலாக வைத்திருப்பவர்கள் மேல் சாதிக்காரர்கள் என்பதையும் (2) உலகம் முழுவதும் ஏதோ ஒரு கட்டத்தில சமதர்மத்தை அடையும் என்பதையும் இதன் மூலம் பெரியார் 1931இல் அறிவித்தார் எனத் தெளிவாக நாம் அறிகிறோம்.

## சமதர்மம் என்பது என்ன?

1. இது ஒரு சமுதாய அமைப்புத்திட்டம்
2. இது தனிப்பட்ட இனத்திற்கோ, சாதிக்கோ, வகுப்புக்கோ, மாத்திரம் ஏற்பட்டதல்ல.
3. இதைப் புகுத்த வேண்டும் என்றால் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் ஒன்று போல் புகுத்த வேண்டும்.
4. ஒரு சமுதாயத்திற்கு ஒரு வகுப்புக்கு எல்லா சவுகரியமும் அமைப்பது சமதர்மமாகாது.
5. பெரும்பான்மையோர் வாழ்வில் ஒவ்வொரு நிலைகளிலும் குறைபாட்டையும், குறைந்த அளவு தேவையற்றதுமான வாழ்வு வாழ்வதும், சிறு கூட்டத்தினர் தேவைக்கு, தகுதிக்கு அவசியத்திற்கு மேற்பட்டதுமாகிய தன்மை தலைதூக்கி இருக்குமானால் அந்நாட்டை நரகவேதனை மிகுந்த நாடு என்று தான் சொல்ல வேண்டும்.

மனித வகுப்பில் ஒருவன் தன்னைக் கீழான வகுப்பினன் என்று எண்ணிக்கொண்டு வாழ்வதும், நாம் ஏழைகள் நமக்கு இதுதான் தகுதி என்று ஏழ்மை நிலையை ஏற்பதும், மனிதத்தன்மையும், மானமும் இல்லாமைக்கு நல்ல சாதனமேயாகும். இப்படிப்பட்ட இழிவான நிலை ஆறறிவுபடைத்த மனிதனுக்குள் புகுந்ததற்குக்காரணம் மூடநம்பிக்கைகளும் ஆட்சிமுறைகளுமேயாகும்.

ஒரு மனிதன் தன் ஆயுளில் சமதர்மத்துக்காக, நாம் என் செய்தோம்? என்று சிந்தித்து என்ன செய்யவேண்டும் எனக் கருதுவானேயானால் அவன் மூடநம்பிக்கைகளை அழிக்கவேண்டும்.

இக்கருத்துக்களைச் சமதர்ம சாத்திரம், சமதர்மம் என்று சொல்லலாம். ஆனால் சமதர்மத்தைப் பிரத்தியட்ச செயலில் காட்டும் காரியம் எதுவென்றால் மேடுகளைக் குறைக்க வேண்டும்; அதாவது மேட்டைவெட்டிப் பள்ளத்தில் போட வேண்டும். சமநிலை - மட்டம் எந்த அளவிற்கு இருக்கலாம் என்று உத்தேசமாய்த் திட்டம் செய்து, அந்த மட்டத்திற்கு மேட்டைக் கரைக்க வேண்டும். அதற்கேற்ற ஆட்சி முறை வகுக்க வேண்டும்; அதற்கேற்றவர்கள் ஆட்சிபீடத்தை அடையும்படி செய்ய வேண்டும். (விடுதலை, தலையங்கம் 18.1.1965, பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள், பக்.1692-93)

*(வே. ஆனைமுத்து அவர்களின் நூலிலிருந்து (பெரியாரியல்) தொகுக்கப்பட்டது.)*

## 5. தமிழர் பண்பாடு - ஒரு விளக்கம்

டாக்டர் சோ. ந. கந்தசாமி

இந்நூற்றாண்டில் பண்பாடு என்ற சொல் ‘Culture’ என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் ஆக்கமாக இரசிகமணி டி.கே.சி அவர்களால் அறிமுகம் செய்யப்பெற்றது. பண்பாடு என்ற சொல்லிற்குரிய சரியான விளக்கங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலப்படுத்துவதற்கு அறிஞர்கள் முயன்றிருப்பினும் முழுமையான விளக்கம் இதுகாறும் வழங்கப்படவில்லை. பண்பாடு என்ற பொருண்மையைக் குறித்துத் தமிழ் இலக்கியங்களில் பொறிக்கப் பெற்றுள்ள கருத்துக்கள் பற்பல. மாந்தனியலாரும் சமுதாயவியலாரும் பண்பாடு பற்றிப் பல்வேறு விளக்கங்களை வழங்கி உள்ளனர். இச்சான்றோர்களின் நெறியில் பண்பாடு பற்றிய விளக்கத்தை இக்கட்டுரையில் காண்போம்.

நிலத்தை உழுது பண்படுத்தி விளைவதற்கு உரியதாகச் செய்யும் தொழிலை Agriculture என்று கூறுவர். Agri என்ற சொல்லிற்கு நிலம் என்பது பொருள். ஆதலின் நிலப்பண்பாடு என்ற பொருண்மையில் Agriculture என்ற சொல் பயிலப்பெறுகிறது. இச்சொல் உழவுத் தொழிலை உணர்த்துவதாகும். மனிதனின் ஐம்புலன்களையும் மனத்தையும் சீலம், நெறி, ஒழுக்கம் முதலிய உயர்பண்புகளால் உழுது பண்படுத்தி நல்வாழ்க்கைக்கு உரியதாகச் செய்யும் முயற்சியைப் பண்பாடு குறிப்பதாகக் கொள்ளலாம். பண்பாடு என்பது விழுமிய பண்புகள் பலவும் நிரம்பப் பெற்றுக் குடும்பத்தாருடனும் உலகத்தாருடனும் பொருந்தி அன்புற்று வாழும் மனப்பக்குவத்தைக் குறித்தல் காணலாம். பண்பாடு என்ற பொருளில் சால்பு, சான்றாண்மை, குணநலம்முதலிய பல சொற்கள் இலக்கியங்களில் இடம்பெற்று உள்ளன. உலக நடைமுறைக்கு ஏற்றாற்போல் ஒத்து நடப்பதே பண்பாடு என்று சங்கப் புலவர்கள் எண்ணி உள்ளனர். கலித்தொகையில்,

“பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் (133:8)

என இடம்பெறும் பகுதி பண்பாட்டினைப் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவும்.

உலகப்பொதுமறையாகிய திருக்குறள் பண்பாட்டின் பெட்டகமாக அமைந்திருத்தலை ஒரு முறை கற்பாரும் உணர்ந்து கொள்வர். குறிக்கோள் உடைய குடிமக்களுக்குரிய இலக்கணங்களையும் இயல்புகளையும் பொருட்பாலில் உள்ள குடியியலில் உடன்பாட்டு வாசகத்தாலும் எதிர்மறையானும் திருவள்ளுவர் குறைவறக் கூறியுள்ளார். பெருமை என்னும் அதிகாரத்தில் “பணியுமாம் என்றும் பெருமை", “அற்றம் மறைக்கும் பெருமை" என்று

பணிவுடைமையும் பிறர் குற்றம் காணாமையும் சிறந்த பண்பாடாகக் குறிக்கப்பெற்றன. சான்றாண்மை என்ற அதிகாரம் முழுமையும் மாந்தரின் மனப்பண்பாட்டை விரித்துரைப்பது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்தும் பொருந்தியவரே சான்றோர். அவர்களே பண்பாட்டாளர். பண்புடைமை என்ற அதிகாரம் முழுமையும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். ஒரு மனிதனுக்கு அறிவுடைமை தேவைதான். எனினும் பண்பாடு அமையவில்லையேல் அறிவினால் பயனில்லை. அறிவைவிட பண்பாட்டிற்கு திருவள்ளுவர் முதன்மை தந்துள்ளார். படிக்காத பாமரர்கள் கூட பண்பாடு படைத்தவர்களாக விளங்குகின்றனர். தாயுமானவர், கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று அழுத்தம் கொடுத்துப்பாடுதல் அறியத்தக்கது. பண்பாடு இல்லாத கூரிய அறிவினரை மரம் என்றே வள்ளுவர் இடித்துக் கூறுகிறார்.

"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்"

மக்களாக இருந்தும் மக்களுக்குரிய பண்புகளைப் பெறாதவர்களை உயர்திணையாகக் கருதாமல் அஃறிணையாகவே தொல்காப்பியரும் கருதியுள்ளார். பண்பாடு படைத்த மாந்தரையே மக்கட் சுட்டு என்று மதித்துள்ளார். மனப்பக்குவம் பல நிலைகளில் பண்பாடாக வெளிப்படுகிறது. பொறுமை, சால்பு, விட்டுக்கொடுத்தல், பிறர்நலம் பேணுதல், நற்சார்பு, பெருமிதம், அருளுள்ளம் என்ற பல வடிவங்களில் ஒருவரின் பண்பாடு புலப்படுகிறது. இத்தகைய பண்பாடு வாய்ந்த நல்லோர் நட்பினையே நாலடியார் பரிந்துரைக்கிறது. இந்நூலினுள்,

"பண்பாற்றும் நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கட் பெறின்"

எனவரும் பாடற்பகுதி இங்கு எண்ஷணத்தக்கது. சிறந்த பண்பாளர்கள் இருப்பதால்தான் உலகம் நிலைபெற்றுள்ளது என்ற உண்மையினைப் புறநானூறு 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற பாடலில் உணர்த்தியுள்ளது. திருவள்ளுவரும் பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் எனப் புகன்றனர்.

பண்பாடு என்பது பிறப்பினால் அல்லது கல்வியினால் மட்டும் வருவது அன்று; இயல்பாக அமைவது. உவர்மண் நிலத்திலும் நல்ல நீர்தோன்றும்; மலைநிலத்திலும் உப்புநீர் தோன்றும். எனவே, எந்த நிலத்திலும் எந்த நீரும் தோன்றுதல்போல், எவ்வகைப் பிரிவிலும்

எவ்வகை மாந்தரும் தோன்றுவார். எனினும் மக்கள் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறுபவர் மனத்தின் மாண்புடையவரே ஆவர் என்பது நாலடியார் நல்கும் விழுமிய கருத்தாகும்:

"கடல் சார்ந்தும் இன்நீர் பிறக்கும்; மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறக்குமால் தத்தம்
இனத்தனையர் அல்லர் எறிகடல் தண்சேர்ப்ப
மனத்தனையர் மக்கள்என் பார்" (25.5)

இப்பாடல் மனப்பக்குவத்தை மையமாகக் கொண்டுதான் மக்களின் பண்பாடு வெளிப்படும் என்பதை வலியுறுத்துகிறது. நாலடியாரில் பண்பாளர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பது அழகாக விளக்கப்பெற்றுள்ளது. பொதுவாகப் பிறர் பேசும் இரகசியங்களை (மறை பொருளை) ஒற்றுக்கேட்பது மாந்தர் இயல்பு. அத்தகைய நிலைகள் வரும்பொழுது காதினைச் செவிடாக வைத்துக் கொள்வதுதான் சிறந்த பண்பாடு. பிறன் மனைவி அழகும் கவர்ச்சியும் உடையவளாயினும் கண்ணெடுத்துப் பார்க்காமல் இருப்பதுதான் பண்பாடு. ஆயிரம் யானைகளை வென்றவனைவிட, தன் பொறிபுலன்களை வென்றவனே பெருவீரன் என்று சான்றோர் போற்றினர். மற்றவன் மனையாளை நோக்காமையினைப் பேராண்மை என்று திருவள்ளுவர் கூறுதல் காணத்தக்கது. நாலடியார், மாற்றான் மனைவியை நோக்கும் நிலையில் கண்களைக் குருடாக வைத்துக்கொள்ள வேண்டுமெனச் சுட்டுகிறது. இங்ஙனம் கூறும் சொற்களின் அடிப்படைப் பொருள் தீய நோக்கோடு பார்த்தல் கூடாது என்பதே ஆகும். மற்றொரு வகைப் பண்பாட்டினையும் நாலடியார் சுட்டுகிறது. உலகியலில் ஊதியம் கருதி ஒருவன் கூறியதைச் சுமந்து கொண்டுபோய் மற்றவனிடம் புறம்பேசுதல் பொதுவாகக் காணப்படுகிறது. இங்ஙனம் புறங்கூற வேண்டிய தேவைவரினும் தன் வாயினை ஊமையாக வைத்துக் கொள்வதே உயர்ந்த பண்பாடு என்று நாலடிப் புலவர் நவின்றுள்ளார். இங்ஙனம் தன்னை நெறிப்படுத்திக் கொள்ளும் பண்பாளனுக்கு வேறு அறங்கள் கூறத் தேவையில்லை என்கிறார் நாலடிப் புலவர்.

"பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இற்கண் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு" (16.8)

இப்பாடல் மனித குலம் முழுமைக்கும் ஏற்புடைய பண்பாட்டைக் கற்பிக்கிறது இத்தகைய ஒழுக்கமுடையவனே பண்பாடு வாய்ந்தவன்.

சில நிலைகளில் அறிந்தோ அறியாமலோ ஒருவர் புண்படும்படி சிலர் பேசுதல் உண்டு. அதனைக் கேட்டுப் பொறுத்திருத்தலே பண்பாடாகும். ஈடுகட்டும் வகையில் ஒருவர் பேசியவரைக் குறைகூறி இழிசொற்களால் குத்திக் காட்டுதல் பண்பாடு அன்று. இச்செயலினை யாவர்க்கும் நாலடியார் அறிவுறுத்துகிறது. நாய் கவ்வியது என்று நல்லோர் நாயைக் கவ்வுவது இல்லை என்பது எவ்வளவு உயரிய பண்பாட்டைக் காட்டுகிறது. எண்ணிப் பாருங்கள். நாலடியார் பாடலை இங்கே காண்போம்:

"கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு" (7:10)

இப்பாடலில் சான்றோராகிய மேன்மக்களைச் சிறந்த பண்பாளராக நாலடியார் போற்றுகிறது. இதுகாறும் பண்பாடு என்பது விழுமிய பண்புநலங்களைப் பெற்றிருத்தலைச் சுட்டுவதாகத் தமிழ் இலக்கியங்களின்வழி அறிந்துகொண்டோம். இப்பண்புகள் யாவும் அகப்பண்பாடாகவே (Internal culture) கொள்ளத்தகுவன. இவற்றின் முதிர்ச்சியால் விளைவது புறப்பண்பாடு (External Culture). இசை, ஆடல், சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலிய படைப்புக்கள் யாவும் அகப்பண்பாட்டின் அடிப்படையில் புறப்பண்பாட்டின் விளக்கங்களாக அமைவன. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் கலைவளம், இலக்கிய வளம், அறவுணர்வுகள், சமய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பனவெல்லாம் சிறந்த பண்பாட்டின் படைப்புக்களாக மதிக்கத்தக்கன. இவ்வகையிலும் தமிழர்கள் சிறந்த கலைச்செல்வங்களையும் இலக்கியச் செல்வங்களையும் மெய்ப்பொருட் கொள்கைகளையும் நனிசிறந்த பண்பு நலங்களையும் ஒருங்கே படைத்த வரலாற்று நாயகர்கள் என்பது அறிஞர் பலரின் ஒருமித்த கருத்தாகும்.

ஆங்கில நூல்களில் பண்பாடு குறித்து அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து எழுதியுள்ளனர். அவர்களில் இ.பி., டெய்லர் என்பார் கருத்தினை மட்டும் இங்கு ஒப்புமை கருதிச் சுட்டுதல் தகும்: "சமுதாயத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் மனிதரால் ஈட்டப்பெறும் அறிவு, நம்பிக்கை, கலை, நீதிகள், விதிமுறை, வழக்கம் என்பனவும்; ஏனைய ஆற்றல்களும் பழக்கங்களும் ஆகிய ஒட்டுமொத்தமான முழுமையினைப் பண்பாடு சுட்டுகின்றது. பண்பாடு என்பது கல்வியறிவோடு பொருந்திய எல்லா ஒழுங்குமுறை, நடத்தை முறை வகைமைகளையும் உள்ளடக்கியதாகும்."

மேற்குறிப்பிடப்பெற்ற பண்பாடு பற்றிய வரைவிலக்கணத்திற்குத் தமிழர் பண்பாட்டு விளக்கம் முற்றிலும் பொருந்தியிருத்தல் அறிந்து இன்புறத்தக்கது.

# 6. புதிர் எதிர் காலம்

**டாக்டர் சிற்பி பாலசுப்பிரமணியம்**

மனித குல வரலாற்றின் முன் எப்பொழுதும் இராத அளவுக்கு மலைப்பூட்டும் வேகத்தில் திகைப்பூட்டும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலம் என கி.பி. 1950 முதல் 2025 வரையிலான எழுபத்தைந்தாண்டுகளை மதிப்பிடுகிறார் ஆல்வின் டாஃப்ளர்.

பத்துப் பத்தாண்டு இடைவெளிவிட்டு 1970, 1980, 1990 ஆகிய ஆண்டுகளில் Future Shock, Third Wave, power Shift என்னும் மூன்று அதிர்வூட்டும் நூல்களை வெடிகுண்டுகளாகத் தந்திருக்கிறார் அவர். ஆல்வின் டாஃப்ளர் Fortune இதழின் இணை ஆசிரியராகவும், கார்னெல் பல்கலைக்கழகத்தில் வருகை தரும் பேராசிரியராகவும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் சிலருக்கு ஆலோசகராகவும், இருந்திருக்கிறார். அவர் கூறும் கருத்துக்களை முழுமையாக ஏற்காதவர்களும் கூட, தீர்க்கமாக ஆய்வு செய்து தெளிவாக விடுக்கப்பட்ட காலக்குரல் அவருடைய நூல்கள் என்பதை மறுக்க முடியாது.

அவருடைய எச்சரிக்கைகளின் பின்புலத்தில் எழுந்த சிந்தனைகளே இக்கட்டுரையின் பொருள்.

## மூன்று புரட்சிகள்

உலகம் பல வரலாற்று நிகழ்வுகளைப் புரட்சி என்று பேசியிருக்கிறது. அக்டோபர் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, சீனப்புரட்சி, இந்திய சுதந்திரப் புரட்சி என்றெல்லாம் எடுத்துக் காட்டப்படும் புரட்சிகள் மனித குலத்தின் மீது சில சிலிர்ப்புகளை ஏற்படுத்தியவைதான். ஆயினும் நிரந்தரமான மாற்றங்களை ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் நிகழ்த்தி, வரலாற்றின் போக்கைத் தலைகீழாக மாற்றி, இயற்கையின் மீதும்., உயிரினங்களின் மீதும் ஒட்டு மொத்தமாகத் தாக்கங்களை ஏற்படுத்திப் பழைய நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் தகர்த்துப் புதிய வாழ்வியலை அனைத்துலக மக்களுக்கும் தந்த புரட்சிகளாக வேறுசில நிகழ்வுகளை அறிஞர்கள் அடையாளம் காட்டுகின்றனர்.

ஏறத்தாழ 10,000 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வேளாண்மைப் புரட்சி, கிபி.1650க்கும் 1750க்கும் இடையில் உருவாகி 1950 வரை நீடித்த தொழில் புரட்சி. அதன்பின் இன்று கருவாகி வடிவெடுத்து வளர்ந்து கொண்டிருக்கும் பெயரிடப்படாத புதிய புரட்சி என மூன்று பேரலைகளைத்தான் மகத்தான புரட்சிகள் என்று தெரிவிக்கின்றனர்.

## முதற்புரட்சி

விலங்குகளை வேட்டையாடி, காய்கனிகளை உண்டு, நாடோடிகளாய் இடம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த காட்டுமிராண்டிச் சமூகத்தை, கலப்பை என்ற கண்டுபிடிப்பும், பருவ காலங்களை அறிந்து பயிரிடும் தொழில் நுட்பமும், முற்றிலுமாக மாற்றி அமைத்தன.

ஓடிக்கொண்டிருந்த மனிதர்களை ஓரிடத்தில் நில் என்றது நிலம். யாருக்கு யார் என்ன உறவு என்று அறிய முடியாத குழுக்களாய் அலைந்து திரிந்த மானுடத்தை, கணவன், மனைவி, குடும்பம் என்ற கட்டுக்குள் கொண்டு வந்தது வேளாண்மை. கட்டியாய்க் கிடந்த பூமியைக் குடைந்து கலைப்பை ஏற்படுத்திய கலப்பை மண்ணைக் கிளறியது - மனிதர்களை ஒன்றுபடுத்தியது. உழுவது, விதைப்பது, களையெடுப்பது, நீர் பாய்ச்சுவது, அறுவடை செய்வது எனப் பல செயல்களைச் செய்ய நேர்ந்ததால் கூட்டுக் குடும்பம் உருவாயிற்று. உழவர்களுக்கு உறுதுணையாக உப தொழில்களாகத் தச்சரும், கொல்லரும், பிறருமான சமுதாயமும், தொழில் அடிப்படையால் சாதிகளும் பிறந்தன.

வேளாண்மை நாகரிகம் உழவுத் தொழிலைக் கேடின்றிக் காக்க, விலங்கும் பகையும் இன்றிக் காக்க அரசன் என்ற காவலனைக் கண்டுபிடித்தது.

உழவனின் கைக்கோலின் குறியீடே அரசனின் செங்கோல். நெல்லடித்துப் போர் குவிக்கும் களத்தின் மறு பிம்பமே பகையழித்து உயிர்குடிக்கும் அரசனின் போர்க்களம்.

பத்தாயிரம் ஆண்டுகள் தங்கு தடையின்றி நீடித்த வேளாண்மை நாகரிகம் காடன், மாடன், வேடனிலிருந்து தன் மன்னனைப் போன்று தெய்வத்தை வடிவமைத்துக் கொண்டது. அரசன் வாழுமிடம் போலவே ஆண்டவன் வாழுமிடம் (கோ + இல்)கோயில் என்று பெயர் பெற்றது.

கலை இலக்கியங்கள் அனைத்தும் வேளாண்மை செய்பவனின் புகழைப் பேசின.

“பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"

என்று பேசும் புறநானூறு முதல், உழு தொழில் பெருமையை நாட்டுப் படலங்கள் மூலம் சொல்லும் காப்பியங்கள், பள்ளுப் பிரபந்தங்கள் வரை வேளாண்மை நாகரிகம் செல்வாக்குச் செலுத்திற்று. ‘உழவே தலை’ என்றும், மற்றவரெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர் என்றும் வேளாண்மை நாகரிகத்தின் விளைவினைத் திருக்குறள் பேசியது.

வேளாண்மை சார்ந்த வணிகம் பெருகியபோதும், சில பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதும், தலைமைச் சிறப்புமிக்க தொழிலாக வேளாண்மையே நீடித்தது.

ஏர் கடின உழைப்பையும், எரு வாழ்வுக்குத் தேவையான பக்குவத்தையும், நீர் தெளிவையும், அறுவடை பகிர்ந்துண்ணும் பண்பாட்டையும் வேளாண்மை வழியாக உலகுக்குக் கற்றுக் கொடுத்தது. வேலிகள் போடும் சுயநலமும், ஆண்டான் அடிமைச் சீர்கேடும், சாதிகளின் இறுக்கமும் மெல்ல வளர்வதற்கு வேறு சூழல்களும் காரணமாயின.

எனினும் பத்தாயிரம் ஆண்டுகளாக அரசியல்,சமூக அமைப்பு, பொருளாதாரம் என்ற அடித்தளங்கள் வேளாண்மை நாகரிகம் காட்டிய நெறியிலேயே நீடித்தன. விதையும், வேரும், விழுதுமாய் மொழி, கலை, வாழ்வு, வழிபாடு, வாகனம், வாள் என அனைத்தையும் ஆட்கொண்ட வேளாண்மை நாகரிகம் 17, 18ஆம் நூற்றாண்டில் தலைதூக்கிய கண்டுபிடிப்புகளும், நீராவி இயந்திரங்களாலும் மின்சாரத்தாலும், வாகனப் புதுமைகளாலும் சுக்குநூறாய் உடைந்து சிதறிப் போயிற்று. தொழிற்புரட்சி சூறாவளியாய்ச் சுழன்று, பேரலையாய்ப் பொங்கி அதுகாறும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட அனைத்தின் மீதும் சீறிப் பாய்ந்தது.

வேளாண்மை யுகம் மனித உடல் வலிமையையும், துணைபுரிகிற விலங்குகளின் வலிமையையும் தான், தன் காலத்தின் ஆற்றல் அல்லது சக்தியாக வளர்த்திருந்தது. ஏற்றமும், காற்றாலையும் தண்ணீர் இறைத்தன. விலங்குகள் வண்டிகளையும் கலப்பையையும் இழுத்தன. சூரியன், காற்று, நீர் ஆகியவற்றை நம்பியது வேளாண்மை. ஐரோப்பாவில் ஒரு கணக்கின்படி (பிரெஞ்சுப் புரட்சிக் காலகட்டத்தில்) 149 லட்சம் குதிரைகளும், 250 லட்சம் எருதுகளும் ஆற்றல் தந்து உதவின என அறிகிறோம்.

## தொழில் புரட்சி யுகம்

சென்ற யுகத்தில் விறகுக்குக் காடுகளும், கலம் செலுத்தக் காற்றும், பாசனத்துக்கு நீரும் சக்திகளாகப் பயன்பட்டன. இவை மீண்டும் மீண்டும் பயன்படுத்தத்தக்க - குறையாத சக்தி வளமாக இருந்தன. ஆனால், தொழிற் புரட்சி யுகம் பிறந்தபோது நிலக்கரியும், எரிவாயுவும், என்ணெயும் பூமியின் கர்ப்பத்திலிருந்து எடுக்கப்படும் ஆற்றல், கருவிகளாக மாறின. தொழில் யுகம், மீண்டும் புனர்ஜன்மம் எடுக்க முடியாத பொருள்களைப் பயன்படுத்தி, பூமியின் சேமிப்பைச் சூறையாடத் தொடங்கியது.

முன் எப்போதும் கண்டிராத ராட்சத யந்திரங்கள் வேளாண்மை நாகரிகத்தின் மனித + விலங்கு சக்தியை எள்ளி நகையாடின. அறுவடை செய்ய, விதைக்க, புடைக்க, பிரித்தெடுக்க, நூல் நூற்க, துணி நெசவு செய்ய, சட்டை தைக்க, மலைகளை உடைக்க, மாமிகு பாதைகள் வகுக்க இயந்திர யுகம் கம்பீரமாகப் பவனி வரலாயிற்று. ரயில்கள், மோட்டார்கள், கப்பல்கள், விமானங்கள் நேரத்தையும் தூரத்தையும் வெல்லத் தொடங்கின. சுருங்கச் சொன்னால், இயந்திரங்களைப் பிரசவிக்கும் கருப்பைகளாக இயந்திரங்களே (Technological womb) மாறின.

புதிய தொழில் நகரங்கள் பிறந்தன. மான்செஸ்டர், டெட்ராய்ட், பிலாய் போன்ற முற்றிலும் தொழில் சார்ந்த இயந்திர நகரங்கள் உருவாக்கப்பட்டன. ஒரே மாதிரியான சட்டைகள்,காலணிகள், கார்கள், கடிகாரங்கள், பொம்மைகள், சோப்புகள், துப்பாக்கிகள், அழகுப் பொருட்கள், மலைமலையாய்ச் செய்து குவிக்கப்பட்டன. தொழில் போட்டிகளும் பொருளாதாரப் போர்களும் உலகைக் குலுக்கத் தொடங்கின.

இரண்டாவதாக ஓங்கி எழுந்த தொழில் யுகத்தில் வேளாண்மை நாகரிகம் கண்ட குடும்ப முறை - 10,000 ஆண்டுகள் பாதுகாத்து வளர்க்கப்பட்ட கூட்டுக் குடும்பம் - சின்னாபின்னமாயிற்று. விளைநிலங்களிலிருந்து தொழிலகங்களை நோக்கி மக்கள் பயணம் (from fields to factories) ஆரம்பமாயிற்று. கிராமங்களிலிருந்து தொழில் நகரங்களை அடைய யாத்திரைகள் ஆரம்பமானபோது கூட்டுக் குடும்பம் - தாத்தா, பாட்டி, தந்தை, தாய், உற்றார், உறவினர் அடங்கிய கூட்டுக்குடும்பம் - உடைந்து Nuclear Family எனப்படும் தனிக்குடும்பம் (தந்தை, தாய், குழந்தைகள் அடங்கியது) நடைமுறைக்கு வந்தது. வேர்களோடு விடைபெற்றுப் போகிற சூழல் உருவாயிற்று.

பாட்டனார் (காரணவர்) அதிகாரம் பஞ்சாய்ப் பறந்தது. குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உள்ள உறவுகளில் விரிசல் விழுந்தது. பிள்ளைகள், பள்ளிக்கூடத்தின் குடிமக்களாக மாறினர். பெரியவர்கள், முதியோர் இல்லங்களின் பிரஜைகளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தொழில் பணியாளர்கள் ஒரே இடத்தில் வசிக்க முடியாமல் மாறுதல்களுக்கு உள்ளாக நேரிட்டதால் எங்கள் ஊர், எங்கள் இல்லம் என்ற பற்றுக்கோடுகள் மெலிந்து போயின. நிலையற்ற வாழ்வியல் காரணமாக எல்லாக் கோட்பாடுகளிலும் நிலைத்து நிற்பது சாத்தியமில்லாது போயிற்று. உறவுகள் இயந்திரமயமாயிற்று இயந்திர யுகத்தில்.

பல்பேருற்பத்தி (Mass Production) பண்டைய வேளாண்மை யுகத்தின் தன்னளவு தன்னிறைவு உற்பத்தியை உதறி எறிந்தது. அதன் காரணமாகக் கல்வியில் மாறுதல் ஏற்பட்டது. அனைவருக்கும் கல்வி (Mass Education) என்ற கருத்துருவாக்கம் செயல்படலாயிற்று. தொழிற்சாலைகள் போன்றே கல்விக் கூடங்கள் அமைக்கப்பட்டன. நேரம் மணியொலியால் கட்டுப்படுத்தப்பட்டது. அதிகாரிகள் போல் ஆசிரியர்கள் அமைந்தனர். எழுதவும், படிக்கவும், கணக்குப் போடவும் சொல்லிக் கொடுப்பது நேரடிக் கல்வி முறையாக இருந்தாலும், தொழிற்சாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் தேவைப்படும் நேரம்தவறாமை, அடங்கி நடத்தல், திரும்பத் திரும்ப வேலை செய்தல் என்பது மறைமுகப் பாடத்திட்டமாக அமைந்தது.

நகரங்கள் அசுர வளர்ச்சி அடையக் கிராமங்கள் தளர்ந்தன. 1850ஆம் ஆண்டில் பத்து லட்சம் மக்கள் தொகை கொண்ட நகரங்கள் உலகில் நான்கு தான் இருந்தன. 1900ம் ஆண்டில் அது 19 ஆயிற்று. 1960ல் 141 நகரங்கள் அந்த எல்லையைத் தொட்டன. இன்று இருநூறுக்கு மேற்பட்ட நகரங்கள் இந்த எண்ணிக்கையோடு வளர்ந்துவிட்டன.

வேகம், எல்லைகளை மீறி வருகின்றது. கி.மு.6000ல் ஒட்டகம் வேகமான வாகனமாகக் கருதப்பட்டது. ஒரு மணிக்கு பதின்மூன்று கிலோமீட்டர் செல்லும் வேகம் அது. கி.மு.1600 வாக்கில் தேர்கள் உருவாகும் வரை ஒட்டக வேகம் தான் அதிவேகமாக இருந்தது. தேர்கள் மணிக்கு இருபது மைல் வேகத்தில் பயணம் செய்தன. ஏறக்குறைய 3500 ஆண்டுகளுக்குப் பின் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு 1825ல் பயன்பாட்டுக்கு வந்தபோது மணிக்கு 13 மைல் வேகம் அமைந்தது. இன்னும் விரைவான நீராவி ரயில் 1880ல் ஓடத் தொடங்கியபோதுதான் மனிதன் தேர்களை வெல்ல முடிந்தது. இந்த வேகத்தை அடையப் பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்தது.

ஆனால், அதன்பின் 58 ஆண்டுகளில் விமானம் பயன்படத்தொடங்கியபோது மணிக்கு 400 மைல் என்று நான்கு மடங்கு வேகம் கூடியது. இந்த வேகம் மேலும் இரண்டு மடங்கு அதிகரித்தது. அடுத்து இருபது ஆண்டுகளுக்குள்ளாக இருபதாம் நூற்றாண்டின் அறுபதுகளில் ராக்கெட் தொழில் நுட்பம் வளர்ந்தபோது வேகம் மணிக்கு 4000 மைல் எனத் தீவிரம் கொண்டது. பூமியைச் சுற்றி விண்வெளிக் கலங்கள் ஏவப்பட்டபோது அவை மணிக்கு 18000 மைல் வேகத்தில் பயணம் செய்தது.

வேகத்துக்கு ஒரு வரைபடம் தீட்டுவோமானால் இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வளைகோடு இருக்காது. செங்குத்தான கோடுதான் காட்சி தரும். தொழில் யுகம்

அடைந்த இந்த வேகம், உணவில், உடையில், நம்பிக்கையில், உறவுகளில் அமைப்புகளில் பிரம்மாண்டமான மாறுதல்களுக்கு வழிவகுத்தது.

சற்றுக்காலம் பயன்படுத்தித் தூக்கி எறியும் பால்பாய்ண்ட் பேனா நம் காலமனிதர்களின் உறவுகளுக்குச் சரியான உருவகம் ஆகும். நிரந்தரங்கள் ஏதுமின்றி தற்காலிகம் உறவுகளின் பண்பாயிற்று. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான நட்பு எப்படியோ அப்படித்தான் அரசியல் கூட்டணிகளின் உறவுக்கும் நிரந்தரம் இல்லை. மனிதனுக்கும் பொருள்களுக்கும், இடையே உள்ள உறவும் மாறி வருகிறது. பிளாக் பேர்டு (Black bird) பேனா இடம் பெயர்ந்து ரெய்னால்ட்ஸ் வந்துவிட்டது. அம்மிக்கல் இடம் பெயர்ந்து மிக்ஸி வந்துவிட்டது. நேற்றைய மருந்துகளைத் தேடினால் இன்று அவை காணக்கிடைக்கவில்லை. அங்கவஸ்திரங்கள் போய் பெர்முடா கால்சட்டைகள் வந்துவிட்டன.

மனிதனுக்கும் இடத்துக்கும் நெருக்கம் இல்லாமல் போனது இடப்பெயர்வுகளால். மனிதனுக்கும் அமைப்புகளுக்கும் உறவுகள் தெறித்துப் போய்விட்டன - மாறுதல்களால், புதிய வேலை வாய்ப்புகளால். மனிதனுக்கும் கொள்கைகளுக்கும் உள்ள உறவுகளும் மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆத்திகன் நாத்திகன் ஆவதும் நாத்திகன் அய்யப்பசாமி ஆவதும் வெகு சாதாரணமாகிவிட்டன. முன்னைய பொதுவுடைமைவாதி இன்று முதலாளித்துவ நியாயம் பேசுகிறான். இடமும், காலமும், நிலையும் மாறிவிட்டதால் நினைப்பும் மாறிவிட்டது. சமூகத் தளத்திலும், உளவியல் தளத்திலும்அன்னியமாதல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு வகையில் சொன்னால் மனித உறவுகள் குத்துண்ட கண்ணாடி கொண்ட பல கீறல்கள் போல் சிதறு தேங்காய்ச் சில்லுகளாய் உடைபடுகின்றன. தற்காலிகம் வாழ்வின் இயல்பாகிப் போனதால், நிரந்தரம் உறவுகளில் இல்லாது போயிற்று. இருக்கின்ற உறவுகளிலும் நிஜக்கூறு குறைந்து போயிற்று.

மனித விருப்பங்கள் வசதிகள் சார்ந்தவை ஆகிவிட்டன. எடுத்துக்காட்டாக ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்விக்கும்போது மணமகனின் பண்புகள், குடும்பப் பாரம்பரியம் ஆகியவற்றைப் பெற்றோர் நாட, அவன் அழகை நேசிப்பாள் பெண் என்பது பண்டைக்கால மரபு. ஆனால் இன்று மணமகளின் கண்ணோட்டம் முற்றிலும் மாறிவிட்டது. அமெரிக்காவில் நடந்த ஓர் ஆய்வில் மணமகனிடம் எதை விரும்புகிறாய் என்று கேட்ட போது, 67 சதவிகித இளம்பெண்கள் அவனிடம் கார் இருக்க வேண்டும் என்றே குறிப்பிட்டார்களாம். நம் நாட்டு நிலையும் அந்த அளவுக்கு மாறுதல் அடைந்துவிட்டது.

பல லட்சியங்கள் காற்றோடு போய்விட்டன. காந்தியும், நேருவும் இப்போது வீர நாயகர்களாக இல்லை. இளைஞர்களுக்கு நிரந்தரமான திரைப்பட நாயக, நாயகி ரசிப்பும்கூட இல்லை. மற்றொரு வகையில் சொன்னால் பலருடைய ஹீரோக்கள் அற்பாயுளில் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

முந்தைய சொற்கள் கூட மொழிகளில் மரணத்தைத் தழுவிவிட்டன மாற்றங்களால். வேளாண்மை யுகக் கமலை, சால்,பரி காணாமல் போய் மோட்டார் பம்ப் செட் வந்துவிட்டது. அமெரிக்காவில் நீக்ரோ இனத்தவரைக் கறுப்பர் (Black) என்று அழைப்பது முன்பு இழிவாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று (Black Power) என்பது கறுப்பின மக்களின் சக்தி என்று பெருமைப்படுத்தப்படுகிறது. பறையர், சக்கிலியர் என்ற தாழ்த்தப்பட்ட மக்களின் பெயர்கள் அரிசனங்கள் என்று மாறி இன்று தலித் என்ற வேற்றுருவம் கொண்டுவிட்டன. தொழில் யுகம் சமுதாயக் களத்தில் ஏற்படுத்திய மாற்றங்களால் அகராதிகள் புதுப்பிக்கப்படுகின்றன.

விளம்பரங்களில் கூட இந்த மாற்றம் நேர்ந்துவிட்டதை மௌன யுத்தம் என்ற தலைப்பிட்டுக் கவிஞர் பாலா எழுதிய கவிதை பேசுகின்றது.

“முகம் மழிக்கும் பிளேடுகளுக்குப் பெயர்
இளவரசன் அல்ல காட்டுமிராண்டி"

(Prince -> Savage)

‘வீடு’ என்ற சொல் கவலைகளிலிருந்து விடுபடுகிற இடம் என்று பொருள்படுவது. (கவலை துறந்து இங்கு வாழ்வது வீடு - பாரதி) அதனால் புற வாழ்வின் துயரங்கள், வேதனைகளை மறக்கிற நல்ல இல்லத்தை Home என்று ஆங்கிலத்திலும் குறித்தனர். இன்று வாடகை வீடுகளில் பெரிதும் வாழும் மனிதர்கள் சொந்த வீடு கட்டினாலும் அது உண்மையான வீடு ஆவதில்லை என்ற அனுபவத்தை பஞ்சாங்கம் என்ற கவிஞர் பேசுகின்றார்.

“மாவு அரைக்கும் ஒன்று
கலவை செய்ய மற்றொன்று
சூடாக்க ஒன்று
குளிராக்க மற்றொன்று
சமையலறை இப்படி
தொழிற்சாலை ஆயிற்று.
குமுதம் விகடன் கூடவே தொலைபேசி

தொலைக்காட்சி

வரவேற்பறை இப்படி

அலுவலகமாயிற்று.

கட்டில் கண்ணாடி மெத்தை

தண்ணீர் கழிப்பறை

படுக்கையறை நவீன ஓட்டலாயிற்று

வீடுபேறு அடைந்தாயிற்று"

என்று கவிஞர் பேசும்போது தனிக்குடும்பம் வாழும் வீடு இயந்திரமயமாய், அலுவலகத்தின் மற்றொரு பிரதியாய் மாறிவிட்ட அவலம் பிடிபடுகிறது.

வேளாண்மை யுகம் கற்றுக் கொடுத்த பண்புகள் புரட்டி எறியப்பட்டு, வேர்கள் பறித்தெறியப்பட்டு, அடையாளங்கள் குலைத்தழிக்கப்பட்டு, உறவுகள் செயற்கை முலாம் பூசப்பட்டு, பழக்க வழக்கங்கள் தகர்க்கப்பட்டது தொழில் புரட்சி யுகத்தில்.

மாதக் கணக்கில் தூதுவர்களை அனுப்பிக் காத்திருந்த வேளாண்மைக் காலத் தகவல் தொடர்பு - அஞ்சலகங்கள் வந்தபோது தலைகீழாய் மாறியது. புதிய நாகரிகத்தின் வலது கரம் என்றும், கிறித்தவ சமயத்துக்கு அடுத்த உன்னதம் என்றும் தபால் அலுவலகங்கள் கருதப்பட்டன. தந்தியும், தொலைபேசியும் உலகத்தைச் சிறியதாக்கின.

சந்தைப் பொருளாதாரம் வந்ததால் உற்பத்தி செய்யும் உழவனும், தொழிலாளியும் கூடத் தங்கள் பொருள்களை அனுபவிக்கும் வாய்ப்பை இழந்தனர். கலை, முன்பு வள்ளல்களை நம்பி வளர்ந்தது. இப்போது சந்தைகளை மையமாக்கி வளர்கிறது. காட்டுமிராண்டிகளின் காலத்தில் ஓவியம் சொந்த மகிழ்ச்சியை மையமாக்கியது என்றால், வேளாண்மைக் காலத்தில் பிரபுக்களை நோக்கி வளர்ந்தது. இயந்திர யுகத்தில் கலை அது பெறும் விலையை நோக்கி நகர்ந்துவிட்டது. சேவல் கூவி விடிந்தபொழுது, இயந்திர யுகத்தில் ஆலைச் சங்கின் ஊதலை எதிர்பார்த்து விடிகிறது.

### புத்தம் புது யுகம்

மகத்தான மாற்றங்களை உருவாக்கிய வேளாண்மை யுகம் 10,000 ஆண்டுகள் நீடித்தது அதனை முறியடித்த தொழில் யுகம் முந்நூறு ஆண்டுகளுக்குள் மாற்றத்துக்குள்ளாகிவிட்டது. இப்போது மனித குலத்தைப் பேரதிர்வுகளுக்கு உள்ளாக்கும் மூன்றாவது யுகம் அக்கினிச் சிறகுகளோடு நெட்டுக்குத்தலாகப் பாய்கிறது. இதற்கு இன்னும் பெயர் வைக்க முடியவில்லை.

ஏனெனில் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் நான்கு எரிமலைகள் வெடித்திருக்கின்றன. ஒன்று கணிப்பொறி - மின்னணுவெடிப்பு, இரண்டாவது விண்வெளி ஆய்வு, மூன்றாவது ஆழ்கடல் உலகம், நான்காவது உயிரியல் தொழில் நுட்ப அதிர்வு, எது முன்னால் ஓடிச் சாதனை புரிகிறதோ, காலம் பதில் சொல்ல வேண்டும்.

| | |
|---|---|
| "ஒரு மணல்துளியில் பெரும்பேர் உலகம் | "To see a world in a grain of sand |
| காட்டுப் பூவில் கவினார் சொர்க்கம் | And Heaven in a wild flower |
| உள்ளங்கைக்குள் எல்லையொன்றின்மை | Infinity in the palm of your hand |
| ஒரு மணிப்பொழுதில் அமரத்வ நிரந்தரம்" | And eternity in an hour |

(W.Blake)

என்று வில்லியம் பிளேக் சொன்ன அனுபவம் கணிப்பொறிப் பிரளயமாக இப்போது பிறந்திருக்கிறது. மணல் துகள் தானே கணிப்பொறியின் ஆற்றல் மையம். இந்த யுகத்தின் அகல, நீள, ஆழ, விசாலங்களை அளக்க இப்போது முடியாது.

இந்தப் புதுயுகத்தில் கடந்து போய்க் கொண்டிருக்கும் இயந்திர யுகத்தின் சக்தி மூலங்கள் (Source of Energy) மாறிவிடும். நிலக்கரியும், பெட்ரோலும், எரிவாயுவும் திரும்பப் பெறமுடியாமல் அழியும் ஆற்றல்கள். அவற்றின் பயன்பாட்டால் பூமி மலடாகிப் பேசாமல், மாசுபடாமல் காப்பாற்றும் யுகம், வரும் புதுயுகம். அணுசக்தி கூடப் பிரச்சினைகளை வளர்க்கிறது. அதன் மாசுக் கூறுகளை எப்படி அகற்றுவது என்று உலகம் தடுமாறுகிறது.

எனவே புதிய சக்தி மையங்களில் கவனம் பாய்கிறது. அளப்பரும் ஆற்றல்களைக் கொண்ட சூரியசக்தி பயன்பாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது. காற்றாலைகள் வழியாகவும், கடல் அலைகள் வழியாகவும் மின்சாரம் உற்பத்தியாகத் தொடங்கி இருக்கிறது. குப்பையிலிருந்தும், கழிவுகளிலிருந்தும் மின்சார சக்தி எடுக்கப்பட இருக்கிறது. நியூசிலாந்து நாட்டில் பூமியின் வெப்பத்திலிருந்து மின்சாரம் எடுக்கும் முயற்சி (Geo-Thermal Source ) மேற்கொள்ளப்படுகிறது. சுருங்கச் சொன்னால் வற்றாத வளம் தரும் ஐம்பூதங்களிலிருந்து/ சுற்றுச்சூழல் மாசுபடாத சக்தியை எடுத்தாளப் போகிறது புதுயுகம்.

மனித மூளைக்கு நிகரான அற்புதம் கணிப்பொறி. கடவுள் இல்லாத இடம் இருக்குமோ என்னவோ, இனி கணிப்பொறி இல்லாத இடம் இருக்காது. ஒவ்வொரு வீட்டிலும் கணிப்பொறி இடம்பெறும் காலம் விரைந்து கொண்டிருக்கிறது. அது போன்றே அதனோடு இணைந்த மின்னணுவியலும் பொங்கி வழிகிறது. வேளாண்மை முதல் விண்வெளி வரை இவ்விரு துறைகளாலும் அளக்க முடியாத எதுவும் இல்லை என்ற நிலை உருவாகி வருகிறது.

கணிப்பொறியால் உற்பத்திப் பொருள்களின் செலவு பல மடங்கு குறைகிறது. நுண்மை பெருகுகிறது. துல்லியம் துலங்குகிறது. கையாளும் திறனுடையோரால் புதிய புதிய கருவிகள் உருவாகின்றன. உலோகமும், கண்ணாடியும்கலந்த ஒருபொருள் Metglass மின் கருவிகளில் பயன்படும்படி உருவாக்கித் தந்திருக்கிறது. கணிப்பொறி. ஒருசட்டையை அணிந்து கொண்டால் அதன் இழைகளை இணைத்த சிறுகருவி இரத்த அழுத்தம், சர்க்கரை, உப்புச்சத்து எல்லாவற்றையும் உடனே தெரிவிக்கும் என்று அமெரிக்காவில் இருக்கும் தமிழ் விஞ்ஞானி கண்டு பிடித்திருப்பதை நாம் அறிவோம். நுட்பம், திட்பம், ஒட்பம் என்ற தமிழ்ச் சொற்களின் முழுப் பொருளாக மாறிவிட்டது கணிப்பொறி. சொல்லப் போனால் கற்பனைகளுக்கு எட்டாத கதாநாயகன் கணிப்பொறி.

விண்வெளி புதுயுகத்தின் இன்னொரு பரிமாணம். பூமியில் செய்ய முடியாத பல பரிசோதனைகள் அந்தர உலகத்தில் சாத்தியமாகுமாம். அதனால் விண்வெளித் தொழிற்சாலைகள் ஏராளமாக நிறுவப்படும் வாய்ப்புள்ளது. மனிதனின் மூலக் கூறுகளிலிருந்து சில Enzymes எனப்படும் கூறுகளை விண்வெளி ஆய்வகங்களில் பிரித்தெடுப்பது எளிதாக இருக்குமாம். கண்ணாடி இழைகளை (Fibre Optics) லேசர்களை சிறப்பாகச் செய்ய விண்வெளி வசதியாகஇருக்குமாம். பல அரிய மருந்துகளை விண்வெளியில் செய்தால் செலவு குறையுமாம்.

விண்வெளி, மனிதர்களுக்கு வீடுகளை - மிதக்கும் இல்லங்களை - அமைக்கவும் வாய்ப்பான இடம். இனி விண்வெளித் தீவுகள் நம் உறவினர் இல்லங்களாக அமையக் கூடும்.

ஆழ்கடல், புதுயுகத்தின் மற்றொரு ஆய்வுக்கூடம். உணவுப் பிரச்சனையைக் கடல் தாவரங்களும், பிராணிகளும் தீர்த்து வைக்கும். கடலடியிலிருந்து எண்ணெய் வளத்தை இனங்கண்டறிந்திருப்பது போல் கனிமப் பொருள்கள் - தங்கம், வெள்ளி, துத்தநாகம், செம்பு, பிளாட்டினம் - கொட்டிக் கிடப்பதாகக் கண்டறிந்திருக்கிறார்கள். செங்கடலில் இந்த வளங்கள் மிகுதியாய் இருப்பதால் உலக நாடுகளின் பார்வை அங்கு திரும்பியிருப்பதாய் அறிகிறோம்.

கடலுக்குள் அபூர்வ மருந்துப் பொருள்களைக் கண்டறிய முடியுமென நம்பப்படுகிறது. கடலுக்கடியில் நகரங்களை அமைக்கவும், கடல்மீது மிதக்கும் ஊர்களைப் படைக்கவும் நீண்டகாலத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

எல்லாவற்றையும் வெல்லும் புது உலகம் உயிரியல் தொழில் நுட்ப உலகம். பிளாஸ்டிக்கிலும் உலோகத்திலும் பொருள்களைச் செய்வது போல் உயிரிகளைச் செய்யப் போகிறோம் என்று ரிட்சி கால்டர் என்ற அறிஞர் கூறியிருப்பது நம்மைத் திடுக்கிட வைக்கிறது.

‘குளோனிங்’ என்ற படியாக்க முறையில் ஆடுகளும், பசுங்கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டது போல் மனிதர்களும் உற்பத்தி செய்யப்படலாம். ஒருவரைப் போலப் பல பிரதிகள் எடுக்கப்படலாம். உடல் உறுப்புகளை ஒருவருக்கு ஏற்றபடி அவர் ஜீன் களிலிருந்தே தயாரித்து மருத்துவமனை லாக்கர்களில் பாதுகாத்து வைக்கலாம். உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வண்ணம் சில புதிய கண்டுபிடிப்புகள் உருவாகலாம். புல்லையும் வைக்கோலையும் சாப்பிட்டுச் சீரணிக்கும்படி பசுவயிறு உள்ள மனிதர்களை உற்பத்தி செய்யலாம். பசுவுக்குத் தீவனம் போட்டுப் பால் பெறச் செலவு பிடிக்குமே அதனால் நம் வீட்டுக் கொல்லையில் உள்ள மாமரத்திலிருந்து பசும்பால் பெற்றுக் கொள்ளும் வகையில் பசுவின் மரபணுக்களை மரத்தின் திசுக்களோடு இணைத்து வைக்கலாம்.

மலடி மலடி என்று வையகத்தார் ஏசாமல் ஒரு பெண் தாய்மை அடையலாம். ஒரு கட்டத்தில் கருப்பை இல்லாமல் பிள்ளைகள் உருவாகலம். இப்படி ஆயிரமாயிரம் விந்தைகளை உயிரியல் தொழில் நுட்பம் நாம் அதிர்ச்சியுறும்படி காட்சிக்கு வைக்கக் காத்திருக்கிறது.

உலோகப் பசிகொண்ட சிற்றுயிர் இனங்கள் இருப்பதாக அறிந்திருக்கிறார்கள். இவற்றைப் பயன்படுத்திக் கடலுக்கடியில் இருக்கும் கனிம வளங்களைக் கண்டறிய முடியும் என்று கருதப்படுகிறது.

நிறவெறி இன்றும் இருக்கிறது. வருங்காலத்தில் மனிதர்களை நீல, மஞ்சள், பச்சை எனப் பல வண்ணங்களில் சமைக்க முடியுமாம். அப்போது நிறவெறி எப்படி இருக்குமோ?

இப்போது அணுமின் சக்தி உற்பத்தியால் கதிரியக்கக் கழிவு என்னும் கொடிய ஆபத்துத் தலைக்கு மேல் காத்திருக்கிறது. வருங்காலத்தில் சூரிய ஒளியை மின் வேதி சக்தியாக மாற்றும் நுண்ணுயிரிகளைப் பயன்கொள்ள முடியும் என்ற கருத்து நிலவுகிறது. மின்மினிப் பூச்சிகளிடம் ஒரு வெளிச்ச வீச்சு இருக்கிறதே., அதன் நுட்பத்தைக் கொண்டு இயற்கை விளக்குகள் கூடச் சுடர்விடத் தொடங்கலாம்.

அசுர இனத்தையும் தேவரினத்தையும்கூட அமைப்பது சாத்தியமாகலாம். ஐன்ஸ்டீன்களோட அடால்ஃப் இட்லர்களைப் படைப்பதும் கைகூடலாம்.

பசுமைப் புரட்சியில் இரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டு நிலங்கள் பாழடையும் நிலை ஏற்பட்டது. வேளாண் துறையில் மண் வளத்துக்கு நட்பான உயிரிகளைப் பெருக்கி நில நலத்தை மீட்டுக் கொள்ள சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

மகத்தான மாற்றங்கள் - மானுட வாழ்வைத் திக்குத்திசை தெரியாத அளவுக்கு மாற்றும் கற்பனைக்கெட்டாத மாற்றங்கள் - மடைதிறந்த வெள்ளம் போல் வந்து கொண்டிருக்கின்றன.

## மூன்றாம் புரட்சியின் விளைவுகள்

இந்தப் பேரலை வீச்சில் விளைவுகள் எப்படி இருக்கும்?

உலகை விழுங்கும் தொழில் நிறுவனங்கள் எல்லா நாடுகளிலும்கிளை பரப்பும். அவர்களுக்கு யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கோட்பாடு புதிய பொருளில் பயன்படும். அவர்களுக்கென்று தனி நாடுகள் இருக்கா. நாடுகள் அவர்கள் வசமாக இருக்கும்.

தொழிற்சாலைகளில் பாட்டாளி வர்க்கம் என்ற இனம் இருக்காது. அனைத்தும் இயந்திரமயமாகி விடுவதால் தொழிலாளர் பட்டாளம் இராது. இதனை de-massified factory என்று குறிப்பிட்டுக் கூறுகிறார்கள்.

செய்தி ஊடகங்களில் நாளிதழ்கள், வார இதழ்களின் வாசகர்கள் திடீரென எண்ணிக்கையில் குறைந்து போவார்கள். புத்தகங்கள் காட்சி ஊடகங்கள் வழியாகவே பயிலப்படும். தொலைக்காட்சிகளுக்குக் கூடப் பார்வையாளர்கள் வகை மாதிரிக்கேற்பப் பங்கிடப்பட்டு விடுவார்கள். சன், ஸ்டார், சி.என்.என். என அதனதன் பார்வையாளர்களாக இனம் பிரிந்துபோய், அதனதன் தகவல்களையே சத்தியமாகக் கருதத் தொடங்குவார்கள்.

கல்வி நிறுவனங்கள்கூடத் தொலைக்காட்சி நிறுவனங்களாகி அவையே பல்கலைக்கழகங்களாகிப் பாடம் கற்றுத் தரவும் வாய்ப்புகள் பெருகிவிட்டன.

தொழிற்சாலைகள் கூடத் தனிமனித விருப்பங்களுக்கேற்ப பொருள்களைத் தயாரித்துத் தரக் கூடும். எடுத்துக்காட்டாக., முன்பு சட்டைக்குப் பொருத்தமான துணி வாங்குவது, தையல்காரரிடம் அளவு கொடுத்துச் சட்டை தைப்பது என்ற நிலை இருந்தது. இப்போது மேலை நாடுகளில் சிறப்பாகவும், நம் நாட்டில் ஓரளவாகவும் ஆயத்த உடைகள் வந்துவிட்டன. தையல்காரர் - வாடிக்கையாளர் உறவு பின்தள்ளப்பட்டு விட்டது. இந்நிலையில் புதிய ஒரு முறை உருவாகிறது. தொலைபேசியில் தொழிற்சாலையுடன் தொடர்பு கொண்டால் வீடியோ காமிரா வாடிக்கையாளர் அளவுகளைப் பதிவு செய்ய, கணிப்பொறி அவர் விருப்பங்களைப் பதிவுசெய்து சட்டையைச் சில நிமிடங்களில் தயாரித்துக் கொடுத்துவிடும்.

மனித மூளையின் நுண்மைகளைக் கணினி இன்னும் கூர்மையாக உள்வாங்கிக் கொள்ள அனைத்துத் துறைகளிலும் மனித அறிவுக்குப் பதிலியாக இயந்திர அறிவு (Machine intelligence) தொழிற்படும். இது எந்த அளவுக்குக் கட்டுக்குள் அடங்கியிருக்கும் என்று கணிப்பது கடினம்.

ஆலன் பி ஹேஸ்டு என்ற கணினித் தொழில் துறையாளர் Fredï the house என்ற வேடிக்கைக் கதை ஒன்று கூறுவார். வருங்காலக் கணினித் தொழில் நுட்ப வளர்ச்சியால் வீடு பேசவும், பிரச்சினைகளைக் கையாளவும் கற்றுக் கொள்ளக் கூடுமாம். வீட்டு உடைமையாளருக்குத் தொலைபேசி வருகிறது. பேசுவது அவர் வீடுதான். பருவகால நிலை அறிவிப்பைத் தொலைக்காட்சியில் கேட்டதாம். உடனே கூரையில் உள்ள சில பலவீனங்களை எப்படிச் சரி செய்வதென்று நகரின் பெரிய கட்டடத்தோடு விசாரித்ததாம். சரியான தொழிலகத்தைத் தெரிந்து தொடர்பு கொண்டு கூரையைப் பழுதுபார்த்து விட்டதாம். இந்தமகிழ்ச்சியை வீட்டு உடைமையாளரிடம் பகிர்ந்து கொள்ளவே தொலைபேசியதாம். இயந்திர அறிவின் சாகசம்.

### அச்சம் - அபாயம்

அறிவியல் வெடிப்பு நிகழ்த்தும் சிந்தனைக் கெட்டாத மாற்றங்களால் நேரவிருக்கும் அபாயங்கள் பல என ஆல்வின் டாஃப்ளர் குறிப்பிடுகிறார்.

பொருளாதார உலகமயமாதலும், ஊடக உலகமயமாதலும் நிகழ்கிற போது மதவெறியையும் உலகமயமாக்க மதம் சார்ந்த மனங்களை நச்சு மயமாக்க ஒசாமா பின்லேடன்கள் உருவாவது இயற்கை என்கிறார். கிறித்தவ ஐரோப்பா என்ற போப்பாண்டவரின் கருத்தோட்டம் மதச்சார்பின்மையை அழிக்கும் கருவியாவதற்கு ஊடகப் புரட்சி வழிவகுக்கிறது. இதே அடிப்படையில் இந்தியாவில் மத அடிப்படை வாதம் வெடிகுண்டுத் தீவிரவாதமாக உருமாறவும் செய்திப் பரவல் இயக்கம் துணைபோகிறது. இரத்தக் களரிகளுக்குப் புதுயுகக் தகவலியல் உந்துசக்தியாகும் கொடூரம் நமக்கு இப்போதே தெரிகிறது. செப்டம்பர் 11ஐ யாரால் மறக்க முடியும்?

மத தீவிரவாதத்துக்கு நிகராக ஓங்கி வளர்ந்திருக்கும் ஓர் உலக அரசாங்கம் போதைப் பொருள் விற்பனை விடிவளையம். எல்லா நாடுகளிலும் இரகசியத் தலைமறைவு போதைப்பொருள் வியாபார அரசுகள் சங்கிலித் தொடர் உறவுகள் வைத்துக் கொண்டு செயல்படுகின்றன. நவீன அறிவியல் கருவிகளின் வசதிகளும், வாய்ப்புக்களும் இந்த மயக்க வணிகர்களின் கண்ணுக்குத் தெரியாத சாம்ராஜ்யத்தை அசைக்க முடியாதபடி வலிமைப்படுத்தியுள்ளன.

துணைக் கோள்கள், கணினிகள், குறித்த இடத்தில தாக்கும் ஆயுதங்கள், மனிதர்களையும் கணினிகளையும் அழிக்கும் நோய்க் கிருமிகள் இத்தனையும் போதை வியாபாரிகளை

ஏனென்று கேட்க முடியவில்லை. ஏனெனில் இவை அவர்களிடமும் இருக்கிறது.

இன்னொரு புறம் சிறுபான்மைச் சமயங்களும், மொழியாளர்களும் இனத்தாரும் சமரசத்துக்கு இடமில்லாத உரிமைப் பிரகடனங்களைச் செய்கின்றனர்.

உருவாகிக் கொண்டிருக்கும் உலகம்நம் பழைய அனுபவங்களுக்கு முற்றிலும் எட்டாத வடிவும், வகைமையும், வேகமும், மாற்றங்களும் கொண்டதாகத் திகைப்பூட்ட இருக்கிறது. மனித உறவுகள் உடைந்து தகர்ந்து போகிற சூழல் புலனாகிறது. உள்ளும் புறமும், உற்பத்தியும் விநியோகமும், அரசியலும் ஆன்மிகமும் தலைகீழான ஏற்ற இறக்கங்களுக்கு மதிகெட்ட வேகத்தில் இரையாகப் போகின்றன.

பண்பாடுகூடத் துணுக்குப் பார்வைகளாக அல்லது சிதறல்களின் தொகுப்பாக மாறிவிடக்கூடும். இப்போதே தொலைக்காட்சிகளில் ஒரு கதையைத் தொடர்ச்சியாகப் பார்க்க முடிவதில்லை. நடுவில் சோப்பு, சீயக்காய், மசாலா, மாம்பழ ஜூஸ், பட்டுப்புடவை , சவர ரேசர் என்று விளம்பரத் துணுக்குகளுக்கு நடுவே கதையும் இடம் பெறுகிறது. இன்றைய பார்வையாளனுக்கு இந்த வெட்டி ஒட்டும் கலாசாரம் பழக்கமாகி வருகிறது. அவன் மூளை கதை, விளம்பரம், பாட்டு, விளம்பரம் என்று துணுக்குகளின் பதிவு இல்லாமல் எதையும் ஏற்காது என்ற நிலைக்கு வந்துவிட்டது.

## காத்துக் கொள்வது எப்படி?

அதிர்வுகளால் தகர்ந்து போகாமல் நம்மையும்சமுதாயத்தையும் காப்பது எப்படி என்று சிந்தனையாளர்கள் பெருங்கவலை பூண்டுள்ளனர்.

புதுமுறைக் கல்விக்கு நம்மை ஆட்படுத்திக் கொள்வது முக்கியமான தீர்வுகளில் ஒன்று. கணினிகளால் இயந்திரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு (நொடியில் நூறு கோடியில் ஒரு பங்கு வேகத்தில்) செயல்படப் போகும் காலத்தில் மனிதன் உதிரியாய் அறிவுத் தளத்தில் இயங்குவான். அவனைத் திரட்டிக் கொள்ளக் கல்விதான் - மகத்தான மாற்றங்களை ஏற்றுக் கொள்கிற கல்வி தான் - துணையாக முடியும். நேற்று, இன்று என்ற நிகழ்வுகளையும் செய்திகளையும் விடப் புத்தம்புதிய நாளையை எதிர்கொள்ளும் தெம்பும், திராணியும் தரும் கல்வி தரப்பட வேண்டும். சி.பி. சுநோ என்ற பிரிட்டிஷ் அறிஞர் கூறிச்சென்றது போல எதிர்காலத்தைத் தன் எலும்புகளுக்குள் செறித்துக் கொண்ட மனிதர்களைக் கல்வி தயாரித்துத் தர வேண்டும்.

எதிர்காலக் கருதுகோள்களை முன்வைத்து, ஐம்பது அல்லது நூறாண்டுகளில் நேர உள்ள மாபெரும் மாறுதல்களை ஊகித்தறியும் கல்வியே புதிய புரட்சிப் பாடத்திட்டமாக அமைய

வேண்டும். மனித உறவுகள், குடும்பம், தொழில், ஒழுக்கப் பிரச்சினைகள் ஆகியவை குப்புறக் கவிழ்ந்து விழும் சூழல்களைத் துணிவுடன் சந்திக்கும் கல்வியே வருங்காலத்தின் தேவை.

ஆனால் அத்தகைய கல்வி பற்றி நம் அறிவு ஜீவிகள் இன்னமும் எண்ணிப் பார்க்கவே இல்லை. பழைய, அழிந்து கொண்டிருக்கும் தொழிற்சமூகம் உருவாக்கிய ஆசிரியர் வழி நடத்தும் வகுப்புகள் கொண்ட கல்வி ஓர் இரும்புச் சட்டகக் கல்வி பயனற்றுப் போவதை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வாறு கூறுவதால் பழமையை மறுக்கும் எதிர்க்கலாச்சாரம் இது என்று கருதலாகாது.

ஆங்கிலம், பொருளாதாரம், கணிதம் என்று வரையறுக்கப்பட்ட பாடங்களுக்கு அப்பால் வாழ்வின் சாரம், மரணத்தின் பொருள், அழியும் தொழில் நுட்பம், எழுச்சி பெறும் புதிய தொழில் நுட்ப வாயில்கள் என எல்லைகள் தாண்டும், மாறிக் கொண்டே இருக்கும் புதிய பொருள்கள் இளைஞர்களிடம் அறிமுகமாக வேண்டும்.

கல்வி ஏட்டுச் சுரைக்காயாக இராமல் கடலுக்கடியில் வாழும் பயிற்சி, நீர் சூழ் இல்லங்களில் இருந்தபடி மின் தயாரிப்பு. வீட்டு வசதி, உணவு எனப் பல்துறைச் சிந்தனைகளுக்கு அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும். இவ்வாறே விண்வெளிப் பயிற்சியும் தரப்பட வேண்டும்.

மாணவர்களுக்குக் கற்பது, கற்று மறப்பது, புதியவை கற்பது என்ற புதிய பரிமாணங்களில் கல்வி புகட்டப்படவேண்டும். அதாவது கல்வி புதிய உடைகளைப் போல் மாற்றி அணியத்தக்க சுதந்திரம் உடையதாக அமைய வேண்டும். பருமையிலிருந்து நுண்மைக்கும், சிக்கல்களிலிருந்து புதிய மாற்றுத் திசைகளுக்கும், செய்திகளிலிருந்து மதிப்பீடுகளுக்கும், மறு மதிப்பீடுகளுக்கும் தானியங்கியாக இளைஞன் செயல்படக் கல்வி தூண்ட வேண்டும.

சிந்தனை என்பது செயலின் ஒத்திகை என்று பிராய்டு சொன்னதாக நினைவு. இனிவரும் கல்வி முன் எச்சரிக்கிற, ஆயுதம் பூண்டு தயார் நிலையில் காத்திருக்கச் செய்கிற (forewarned and forearmed) கருவியாகச் செயல்பட வேண்டும்.

பழைய வரலாறுகள் வேண்டும் தான். ஆனால் எதிர்காலச் சிந்தனைகளே மிகமிக இன்றியமையாதவை. இந்த வகையில் வரவிருக்கும் தொழில்நுட்ப, கலையிய, தத்துவ அறைகூவல்களை எதிர்கொள்ளத் தக்க கல்வி வேண்டும்.

அறிவியல் புனைகதைகளை இலக்கியத்தில் கீழ்மட்டப் படைப்புகளாகக் கருதும் பிற்போக்குத்தனம் ஒழிக்கப்பட்டு, அவைகளை உருவாக்கித் தந்த உன்னதச் சிகரங்களான

ஹெச். ஜி. வெல்ஸ் தொடங்கி ஆசிமோவ், ஆர்தர், சி.கிளார்க், ரே. பிராட்பரி முதலியவர்களின் படைப்புகள் பாடங்களாக வேண்டும். வருங்காலவியல் தரிசனங்களாக இவை விளங்கும்.

இருபது, முப்பதாண்டுகளுக்கு அப்பால் உலகம், வாழ்க்கை, அறிவியல் என்பன குறித்து மாணவர்களின் சுயசிந்தனைகளுக்கும் கற்பனைகளுக்கும் வாசல் திறந்து வைக்கப்பட்டு, அவர்களைக் கட்டற்ற வானில் வலையின்றிச் சிறகடித்து வந்து எழுதும்படி கேட்டுக் கொள்ள வேண்டும.

சுருங்கச் சொன்னால் கல்வி காலம் கடந்து சிந்திக்கும் தூண்டுகோல் ஆக வேண்டும்.

வருங்கால இலக்கியக் கல்வி கதை சொல்லிக் கல்வியாக, போதனையாக இருத்தலாகாது. ஒரு குறிப்பிட்ட சூழலில் எழுந்த பாத்திர தர்மங்களை (இராமனானாலும், கண்ணனானாலும், சீதையானாலும், பாஞ்சாலியானாலும், பிற்காலப் படைப்புகளின் பாத்திரங்களானாலும்) விவாதிக்கும் களமாக இலக்கிய வகுப்புகள் அமைய வேண்டும். நேற்றைய ஞாபகங்களாக அல்ல, மனிதச்சிக்கல்களின் கட்டவிழ்ப்புக் கலையாக இலக்கியங்களைப் பயிலும் சூழல் வளர வேண்டும்.

தொழில் நுட்பப் புயலைத் தடுத்து நிறுத்த முடியாது. அதனால் ஏற்படும் மாசும் கழிவும் மானிட வாழ்வுக்கு உலை வைக்கும் அபாயம் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. கருத்தடைச் சாதனங்கள் ஒழுக்க எல்லைகளைத் தகர்த்துவிட்டன. ஒரு காலத்தில் ஜப்பானிய டிரான்சிஸ்டர் கருவிகள் தாம் மத்திய கிழக்கில் அரபுத் தேசியத்தை உரம்போட்டு வளர்த்ததாகக் கருதப்படுகிறது. வாகனப் புரட்சி உலோகக் கழிவுகளைப் பூமியின் புற்றுநோயாக மாற்றிவிட்டது. இயற்கைச் சூழலில் தொழில் நுட்பம் குறுக்கிட்டதால்தான் பருவ மழை அடிக்கடி தவறிப் போகிறது.

எனவே சமுதாய விழுமியங்களில் இன்றியமையாத அனைத்தையும் சுட்டுச் சாம்பலாக்கிய சுடுகாடாகத் தொழில் நுட்பம் மாற்றியமைப்பதை என்ன விலை கொடுத்தேனும் தடுத்தாக வேண்டும். அதனால் உலகளாவிய தொழில் நுட்ப நீதிமன்றம் ஒன்று அமைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பூமியின் காற்று, நீர் ஆகியவற்றைக் காத்துத் தீரவேண்டிய அவசியத்தை இவ் அனைத்துலக நீதிமன்றம் உணர்ந்து சர்வதேசச் சட்டங்களை உருவாக்க வேண்டும். இது ஒரு கருதுகோள்தான். ஆனால் உயிர் காக்கும் கருதுகோள்.

வாழ்வின் நம்பிக்கை ஆதாரங்களைப் பூண்டோடு தகர்க்கப் புதிய உயிரியல் தொழில் நுட்ப - கணினி- மின்னணு யுகம் கங்கணம் பூண்டு நிற்பதால் புதிய விளைவுகளும்

ஏற்பட்டுள்ளன. அறிவியல் எழுச்சியின் ஆரம்ப நாட்களில் தயங்கி நின்ற ஆன்மிக தத்துவங்கள் இப்போது ஆறுதலின் உறைவிடமாக உயிர்ப்பெடுத்துள்ளன. யென் (Zen) தத்துவம், அதை விளக்கும் ஓஷோ நூல்கள், யோகப் பயிற்சிகள் மக்களை அமைதிப்படுத்தும் கருவிகளாகப் புத்துயிர் பூண்டுள்ளன. உடல் சீராக , உள்ளம் அமைதிப் பூக்களின் பள்ளத்தாக்காக இக்கலைகளின் தேவை அதிகரித்துள்ளது. இப்போக்கு வளமும் நலமும் தரும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் அதே சமயம் மனிதர் அமைதி நாடி மந்திர தந்திரங்கள், சாமியாட்டங்கள், இறந்தாரோடு உரையாடல், சூனியம் வைத்தல் என்ற மூட நம்பிக்கைககளில் முடிந்து போகிற அவலமும் பெருகியுள்ளது.

பொருளாதாரப் போராட்டங்களால் இனவெறி, தலைமுறை இடைவெளி, குற்றமிழைக்கும் கொலை, கொள்ளை, கலாசாரத்தனிமையாக்கம் ஆகியவையும் வளர்ந்து வர வாய்ப்புள்ளது.

எனவே, சமூக உணர்வுமிக்க எதிர்காலச் சிந்தனையை வளர்க்கவும், வளப்படுத்தவும் தேவை ஏற்பட்டுள்ளது. இப்போதே உலகின் பல பகுதிகளில் எதிர்காலவியல் மையங்கள் உருவாகி வருகின்றன. எதிர்காலவியல் இதழ்கள் முளைத்திருக்கின்றன. Futuribles, ஐரோப்பா 2050, உலக எதிர்காலவியல் கழகம் போன்ற அமைப்புகள் அரும்பியுள்ளன.

ஒவ்வொரு சமுதாயமும் வரக்கூடிய எதிர்காலம் (Probable Future) சாத்தியமாகும் எதிர்காலம் (Possible Future) விரும்பத்தக்க எதிர்காலம் (Preferable Future) என்ற மூன்று நிலைகளில் முரண்பட்டு நிற்கின்றன. இவற்றில் விரும்பத்தக்க எதிர்காலத்தைக் கணித்துத் திட்டமிடப் பொறியாளர்கள் (Engineers) வேண்டும்தான். ஆனால் அவர்களைவிட ஆல்வின் டாப்ஃளர் குறிப்பிடுவது போலக் கற்பனையாளர்களின் தேவை முக்கியத்துவம்பெற்றுள்ளது.

முன்பு Brave New World, 1984 ஆகிய எதிர்காலவியல் கற்பனைகள் எழுந்தன. ஆனால் இன்று தேவைப்படும் ஆக்கக் கற்பனையோடு ஒப்பிட்டால் அவையெல்லாம் பிள்ளை விளையாட்டாய்த் தெரிகின்றன. இன்று எதிர்காலக் கற்பிதங்களின் தொழிற்சாலைகள் அவசியமாகிவிட்டன. (Utopia factories)

தீவிர ஆய்வுகள் வளர வளர, எதிர்காலவியல், புனைகதை நிலையை எட்டும் நாவல் ஆசிரியர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், அறிவியல் புனைகதையாளர்கள், உளவியல் அறிஞர்கள் அனைவரும் செயல்பட்டுக் கற்பனைச் சமுதாயங்களைப் படைத்துத்தந்தால்,

அவற்றின் மீதுவாழ்வியலைக் கட்டமைக்கும் முயற்சிகள் மேற்கொள்வது எளிதாகும்.

எவ்வாறாயினும் இந்தக் கற்பனையாளர்களை மனிதப்படுத்துவது முக்கியம். இல்லையெனில் யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும் கொடுமை மனித சமுதாயத்துக்கு இழைக்கப்பட்டுவிடும். அசுரத் தொழில் நுட்பம் பெற்றெடுத்த உலகமயவியல் (Globalisation) நமக்கு வாய்ப்பு என்று சிலர் கூறுவதுண்டு. ஆம், வல்லாண்மைச் சமுதாயங்கள் வளரும் சமுதாயங்களின் இரத்தத்தை உறிஞ்சும் வாய்ப்பு அது என்று இன்று உணரத் தொடங்கி இருக்கிறோம்.

தொழில் நுட்பர்கள் மனிதாயவாதிகளாக மாறினாலன்றி (Technocrats to Democrats) கொந்தளித்து எழும் மாற்றங்கள் பேராபத்தின் விதைகளாக மாறிப் போகும். மாமலையின் பனிச் சரிவுக்குள் ஒரு பட்டாம்பூச்சி அகப்பட்டுக் கொண்டு ஒரு துளி கண்ணீருக்கும் வாய்ப்பின்றிக் காணாமல் போவதுபோல் மனித குலம் அழிந்து விடுமோ? பிரளயமாய் எழும் தொழில் நுட்ப மாற்றங்களுக்கு மனிதக் கடிவாளம் போட முடியுமா? தீவிரமாக, அவசரமாகச் சிந்தியுங்கள் நண்பர்களே!

### கட்டுரை உருவாகக் காரணமான நூல்கள்


1. Alvin Toffler’s Future Shock, Third Wave and Power shift.
2. Works of Asimov and Arthur C. Clarke

## 7. 'இணைச் சிந்தனை' பற்றி அறிவோம்

**- கி. வீரமணி**

வாக்குவாதம் செய்தல் (Argument) என்பது, கடந்த 2400 ஆண்டுகளுக்கு மேலாக மனிதர்களிடையே நிலவும் பழக்கமாகும். இந்த முறை (அதாவது வாதப் பிரதிவாதம் செய்யும் முறை என்பது),

சாக்ரட்டீஸ்

பிளாட்டோ

அரிஸ்டாட்டில் ஆகிய அறிஞர்களால்தான் விளம்பரப்படுத்தப்பட்ட முறையானது.

இந்த முறை - கேள்வி கேட்டுப் பதிலளித்து, வாக்குவாதம் செய்யும் முறை சிறந்த முறைதான்; ஆனால், இதில் உள்ள குறை ஒரு வகையான தன் முனைப்புடன் கூடிய பிடிவாதம் கலந்தே இருக்கும்.

ஒவ்வொருவரும் தாம் சொல்வது சரி; மற்றவர் சொல்வது தவறு என்று நிரூபிக்கவே தங்களது மூளை உழைப்பைப் பெரிதும் பயன்படுத்துகின்றனர்! 'நான் செய்வது சரி; நீங்கள் செய்வது தவறு' என்பதே அந்த வாக்குவாதம் செய்திடும் முறையின் தத்துவமாகும்!

வாக்குவாதம் செய்யும் நிலையில் ஊக்கப்படுத்துவது (Motivation) என்பது உள்ளடக்கமாக உள்ளது என்ற போதிலும், அது மற்றவர்கள் மீது ஆக்ரோஷமாகப் பாயும் பாய்ச்சல் முறையுமாகும்.

எப்போதும் வாக்கு வாதம் செய்யும் எவரும், தனது நிலைதான் சரி, தான் தான் வெல்லவேண்டும் என்ற ஆசையில் நியாயமான சில தகவல்களைக்கூட மறைத்து விட்டு, தத்தம் கட்சி பற்றியே பேசுவர்.

எடுத்துக்காட்டாக, ஒரு வழக்கை நடத்தும் அரசு வழக்கறிஞர் - பிராசிகியூட்டர் - அது கொலை போன்ற முக்கிய வழக்கு - தண்டனையோ உயிருக்கு ஆபத்து விளைவிக்கு வழக்கு என்ற போதிலும் கூட, எதிர்த்தரப்புக்குச் (டிஃபென்ஸ் தரப்புக்கு) செய்திகளைத் தெரிந்தே மறைத்து வருவது வாடிக்கை.

இதே உண்மை அடுத்த தரப்புக்கும் சமமாகவே பொருந்தக் கூடியதுதான். இந்த மாதிரி ஒரு குறையைத் தான் தன்னுள் கொண்டிருந்தும் கூட, இதற்கு மாற்று முறை வேறு ஒன்றும் இதுவரை பலரால் கண்டறிய முடியாததால், எவ்வாறாயினும் இம்முறையே நடைமுறையாக இருந்து வருகிறது!

நமது கல்வி முறையில் தேர்வு என்பது பலவகைக் குறைபாடுகளைக் கொண்ட ஒரு

முறையாகும். இது தேர்வில் வினாத்தாள் திருத்துபவர்களுக்கும், ஏன் கேள்வித்தாள் குறிப்பவர்க்கும் கூடத் தெரியும். இந்த முறை ஒரு சூதாட்டம் போன்றதே!

மாணவர்களின் பொது அறிவுத்திறன், சிந்தனைச் சிறப்பு, இவற்றை அறிந்து கொள்வதை விட அவர்களது உருப்போடும் பயிற்சி அல்லது ஏதாவது குதிரை மீது பந்தயம் கட்டியவனுக்கு அந்தக் குதிரையே வென்று 'ஜாக்பாட்' அடிப்பது மாதிரி ஒருவகை சூதாட்டம் தானே!

மாற்று முறையைச் சரியாகக் கல்வி அறிஞர்கள் கண்டறியாத வரை, இம்முறை தான் செயல் முறையாக இருந்து வருகிறது - அது போலத்தான் இந்த விவாத முறையும்!

ஆனால், ஆங்கில அறிஞர் எட்வர்டு இபோனோ (Edward de Bono) என்பவர் 1985 ஆம் ஆண்டில் அனைவரும் ஏற்கக் கூடிய வகையில், வாக்கு வாத முறைக்குப் பதிலாக, இணைச் சிந்தனை (Parallel thinking) என்பதைக் கண்டறிந்தார்; அது கல்வித் துறையிலும், வர்த்தகத் துறையிலும் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது என்று கூறி விளக்கியுள்ளார். இவர் எழுதிய 'அழகான உள்ளம்' (Beautiful mind) என்ற நூலில் இதனை நன்கு விளக்கியுள்ளார்.

'இணைச் சிந்தனை' என்ற ஒன்றை உருவாக்கினார் அல்லவா? அதன் தன்மை, வாதப் பிரதிவாதங்களை உந்தும் தன்முனைப்பு (Ego - driver) அறவே இருக்காது. ஒருவருக்கொருவர் வாதம் புரிகிறோம் என்ற சாக்கில் சண்டை போட்டு கொள்ளும் நிலைக்கும் அது கொண்டு சேர்க்கும் ஆதி காலத்தின் பக்குவமற்ற நிலைக்குக் (Primitive) கூட வாதங்களில் ஈடுபட்டு, பிடிவாதத்தைக் கெட்டியாகப் பிடிப்போரைத் தள்ளிடும் விபரீதமும் உண்டு.

ஒரு பள்ளிக் கூடத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் தங்களது போதனா முறை பற்றி ஆய்வு செய்கையில் இந்தப் புதிய 'இணைச் சிந்தனை' முறையினைக் கையாண்டார்கள், புதிதாக அங்கே வந்த பார்வையாளர்களுக்கு இம்முறை புதிராகவும், புரியாததாகவும் இருந்தமையால் பழைய முறை விவாதத்திற்குத் திரும்பினர்.

விளைவு? அதிருப்தியிலும் பரிபக்குவமற்ற தன்மையிலும்தான் அது முடிந்தது.

இந்த 'இணைச் சிந்தனை' (Parallel thinking) எப்படி முந்தைய முறையிலிருந்து - அதாவது விவாத முறையிலிருந்து வேறுபடுகிறது என்பதை விளக்குவோம்.

சதுரமான ஒரு கட்டடத்தினையொட்டி நான்கு பேர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள், ஒவ்வொருவரும் அவரவர் நிற்கும் எதிர்த் திசையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்படி நின்று கொண்டிருக்கும் நால்வரும் அதுதான் கட்டடத்தின் சரியான தோற்றம் என்றே வாதிட்டனர். 'வாக்கி - டாக்கி' என்ற கருவியைக் கையில் வைத்துக்கொண்டு இப்படிப் பேசிக் கொண்டே இருந்தனர்.

ஆனால் இதே நான்குபேர் 'இணைச் சிந்தனை' முறையில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

*அதன்படி, கட்டடத்தினை ஒவ்வொருவரும் சுற்றி ஒருபுறத்தில் நிறுத்தப்பட்டனர். இப்போது அவர்கள் ஒவ்வொருவரும் எதைப் பார்த்தார்களோ அதைப்பற்றிய சரியான தகவல்களைத் தந்தார்கள். பிறகு அவர்கள் மற்றொரு புறம் நடந்து சென்று அப்பகுதியில் என்ன பார்த்தார்கள் என்பதை விவரித்தார்கள். மூன்றாவது, நான்காவது, நபர்களும் இந்த முறைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.*

*இதன்படி, அந்த நால்வரும் ஒரே கண்ணோட்டத்தின் அடிப்படையில் கட்டடத்தைச் சுற்றி வந்து அவரவர்கள் பார்த்ததை விளக்கினார்கள். முடிவு ...? அந்தக் கட்டடம் பற்றிய தகவல்கள் அனைத்தும் இந்த நால்வரால் ( 'இணைச் சிந்தனை' இதுதான்!) தரப்பட்டு முழுமையான ஒரு படம் கிடைத்துவிட்டது.*

*இந்த முறையில் முக்கியமானது எதுவென்றால், எந்த நேரத்திலும் இக்கட்டடத்தை நோக்கிய கருத்து இணையாக அதே திசை நோக்கியே ஒட்டுமொத்தமாக அமைவதால், ஒரு கருத்திணக்கம் தானே உருவாகி, அடுத்து அதில் செய்யப்போகும் பணிக்கு ஆக்கரீதியான தீர்வை உருவாக்கி விடுகிறது.*

*இதை விளக்கிய பேராசிரியர் எட்வர்டு டி போனோ இதை நன்கு விளக்கிட (இது ஓர் ஆழ்ந்த புதிய முறை என்பதால்) ஓர் அற்புதமான உவமை மூலம் விளக்கினார். ஆறு வண்ணங்களில் - வெள்ளை, சிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை, நீலம் ஆகிய ஆறு வண்ணங்கள் கொண்ட தொப்பிகளை அணியச் செய்து ஒரு சோதனை செய்து காட்டினார்.*

*1. வெள்ளைத் தொப்பி என்பது - கணினியிலிருந்து காப்பி எடுக்கும் படிவங்களும் காகிதங்களும்*

*இதுதான் தகவல் தொகுப்புகள். ஒருவர் சொல்லி மற்றொருவர் மறுக்கும் பழைய முறைக்குப் பதிலாக எல்லோரும் ஒரே மையத்தை - திரட்டப்பட்ட தகவல்களை அறிகிறார்கள்.*

*(அ) இது பற்றி நமக்கென்ன தெரியும்?*

*(ஆ) இது பற்றி நமக்கென்ன தெரியவேண்டும்?*

*(இ) எது இதில் விடுபட்டிருக்கிறது?*

*(ஈ) எந்த எந்த கேள்விகளை நாம் கேட்கவேண்டும்?*

*(உ) நமக்குத் தேவையான தகவல்களை எப்படியெல்லாம் பெறக்கூடும்?*

*ஒரு தகவல் பெறப்படுகிறது. டில்லிக்குக் கடைசி விமானம் எட்டு மணிக்குச் செல்லும்; மற்றொரு தகவல் டில்லிக்குக் கடைசி விமானம் 9.30 மணிக்கு இந்த முரண்பட்ட தகவல்களில் எது சரியானது என்பதை எல்லோரும் கண்டறிய முற்பட்டு, உண்மைத் தகவலை உறுதி செய்யக்கூடும் இம்முறையில்,*

அடுத்து,

2. சிவப்புத் தொப்பி - இது கொஞ்சம் சூடான நெருப்பு போன்றது - இது உளவெழுச்சிகளையும் (Emotion) உணர்ச்சிகளையும் (Feelings), உள் உணர்வுகளையும் (Intution) மையப்படுத்துவதாகும்.

இந்தத் தொப்பி மிக முக்கியமான ஒன்றாகும். இப்படி வெளிவருபவர்களைப் பல நேரங்களில் நம்மில் பலரும் தர்க்கம் என்று கூறி மறைத்துக் கொள்கிறோம்! எனவே, உணர்ச்சிகளுக்கு இடம் தராமல் உளவெழுச்சியும், உள் உணர்வும் நம் சிந்தனையை வண்ணம் பூசி விடாமல் பெருமளவு காத்துக்கொள்கிறோம் - அல்லது கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியவர்களாகிறோம்!

(அ) இந்தக் கருத்து எனக்குப் பிடிக்கவில்லை.

(ஆ) இது சரியாக வேலை செய்யாது என்று எனக்கு தோன்றுகிறது.

(இ) எனது உள் உணர்வு இந்த (விலை உயர்வு என்று வைத்துக் கொள்ளுங்கள்) விலை உயர்வு, மார்க்கெட்டை அழித்துவிடக் கூடும்!

(ஈ) இது மிகவும் அபாயகரமாக ஆகிவிடுமோ என்ற அச்ச உணர்வு எனக்குள் ஏற்படுகிறது.

(உ) இது வெறும் நேரக்கேடு என்றே நான் எண்ணுகிறேன்.

- இப்படி பல வகையான கருத்தோட்டங்கள் - உணர்வுகள் ஓடும் - இவைகளுக்குக் காரண காரியங்களைத் தேடாமலே இந்த உணர்வுகள் ஏற்படுகின்றன. அவை நமக்குள் இருப்பதால், அவற்றை நாம் தயங்காமல் வெளிப்படுத்துகிறோம். காரணங்கள் ஒருவருக்குத் தெரிந்தால் கூட அவர் கூறவேண்டும் என்ற அவசியம் இல்லையே!

எடுத்துக்காட்டாக, உள்ளுணர்வு (Intution) என்பது பற்பல நேரங்களில் அத்துறையில் கிடைத்த அனுபவங்களில் விளைவாக இருக்கக்கூடும்.

இது சிக்கலான விடயம் - எளிதானதல்ல. எப்பிரச்சினையாலும் நமக்குத் திடீரென்று தோன்றும் உள்ளுணர்வு - பெரும்பாலும் சரியாகவே அமைந்துவிடும்; ஆனால், எல்லா நேரங்களிலும் எல்லாப் பிரச்சினைகளிலும் அது சரியாகவே இருக்கும் என்று சொல்ல முடியாது! இந்த உள்ளுணர்வுக்கு அடித்தளம் அனுபவமும் சொந்த சிந்தனையுமாகும்!

இந்த உள்ளுணர்வை வைத்துக் கருத்துக் கூறிய அய்ன்ஸ்டீன் போன்ற அறிஞர்கள் கருத்துக்கூட, பிறகு தவறானது என்று தள்ளப்பட்டதும் உண்டு.

என்றாலும், சிந்தனையில் இதன் பங்கும் பாகமும் பயனுள்ள ஓர் அங்கமாகும்!

எதையும் வேறுவகையில் சரிபார்க்க - ஆராய முடியாதபோது, இந்த உள்ளுணர்வை (Intution) நம்பிச் செயல்படுவது தவிர்க்க இயலாத ஒன்றாகும்!

*(3) கறுப்புத் தொப்பி - அடுத்து வரும் தொப்பி. அதிகமாக மக்கள் பயன்படுத்தும் வண்ணத் தொப்பி இது. அலசி ஆராய்தல் (*Critical Thinking*) என்பதற்கான உருவகம் இந்தக் கறுப்புத் தொப்பி.* 'Critical' *என்ற சொல் ஆங்கிலம் சொல் அல்ல. அது ஒரு சிரேக்க மொழிச் சொல்* 'Kritikos' *என்ற சொல்லிலிருந்து ஆங்கில மொழிக்கு வந்தது என்பதையும் ஆராய்ந்து தீர்ப்பளிக்கும் தீர்ப்பு முறையாகும். "இது சரியானதா? தவறானதா?" இப்படி ஆராய்ந்தறிவது.*

*கறுப்புத் தொப்பி, தவறுகளையோ, சட்ட விரோத செயல்களையோ அபாயகரமான செயல்களையோ செய்ய விடுவதே இல்லை! அவற்றினின்றும் பாதுகாக்கிறது! எனவே, கெட்ட தொப்பி இல்லையல்லவா?*

*(4) அடுத்த தொப்பி - மஞ்சள் தொப்பி.*

*மஞ்சள் தொப்பி என்பது, நாம் செய்யும் மதிப்பீடுகள், பயன்கள்; எப்படி நல்லவையாகச் செயல்படுவது எனக் கண்டறிவது என்கிறார் பேராசிரியர் எட்வர்டு டிபோனோ.*

*ஒவ்வொருவரும் இது பற்றி மதிப்பீடு எப்படி இருக்கும் என்ற சிந்தனை (*Value sensitivity*) உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதே இதன் தத்துவம்! இதன் மூலம் ஆழ்ந்த பார்வை (*Major insights*) ஏற்பட வாய்ப்பு உண்டு. சிந்திக்கக்கூடிய ஒவ்வொருவரும் ஆராய்ந்து கண்டு பிடியுங்கள் என்ற அறைகூவல் இதில் அடக்கம்; மூளை சக்தி இதனால் அதிகம் வளரும்.*

*மூளை என்பது விலையுயர்ந்த கார் போன்றது; அதனை ஓட்டும்போது எவராவது தரம் குறைந்த எரிபொருளை போட முயற்சிப்பார்களா? போட்டால் என்னவாகும்?*

*(5) அடுத்து பச்சைத் தொப்பி.*

*பச்சை பசுமையைக் காட்டும் வண்ணம் அல்லவா? பச்சைப் பசேல் என்ற பயிர் விளைச்சலில் தானே பசுமை அடங்கியுள்ளது?*

*அதுபோல, இந்தப் பச்சைத்தொப்பி, பசுமையான சிந்தனையும் நம்முன் அமைந்து வெளியே வரும், வரவேண்டிய வாய்ப்பு ஏற்படும்போது!*

*ஆக்கச் சிந்தனையின் மறுபுறம் இது! இப்படி அமையாவிட்டால் மாற்றுவழி என்ன? நாம் எண்ணும்படி நடவாமல் வேறுவகையாக நடந்து விட்டால் அதற்கடுத்த கட்டம் என்னவென்பதை பச்சைத் தொப்பி (மனம்) வளமாகத் தரும். வளமான சிந்தனைக் களம் இது.*

*(6) ஆறாவது நீலத்தொப்பி "நீலவான ஆடைக்குள் நிலாவென முகம் மறைத்து - உன் கோலமுழுதும் காட்டி விட்டால் காதற்கொள்கையிலே சாமோ இவ்வுலம்" என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகள் நினைவுக்கு வருகின்றன!*

*இந்த நீலவண்ணத் தொப்பிக்கு என்ன வேலை தெரியுமா? எல்லாவற்றையும்*

ஒருங்கிணைத்து அமைக்கும் பணி - இசைக் குழுவினை இயக்குபவர் போல (Controller of an orchestra). இலக்கை நிர்ணயிப்பது இது! கூட்டு உரையாடல் - கலந்துரையாடலிஉளல் இந்த அம்சம், இந்த வண்ணத் தொப்பிக்குள் உள்ள தலைப்பகுதி (மூளை) என்பதைப் போல் எண்ணிச் செயல்பட்டால் எதுவும் வெற்றியே (இந்த ஆறு தொப்பிகள் பற்றி அவர் ஒரு தனி நூலே எழுதியுள்ளார்.)

'வாழ்வியல் சிந்தனைகள் பாகம் 3' - கி. வீரமணி என்ற நூலிலிருந்து தெரிவு செய்யப்பட்டது.

## பாரதியார் பல்கலைக்கழகம் : கோவை

### பகுதி 1 - தமிழ்

### வினாத்தாள் அமைப்பு - இரண்டாம் பருவத்திற்குரியது

**நேரம் : 3 மணி** | **மதிப்பெண்கள் : 100**

**பிரிவு அ : ஒரு சொல் / தொடரில் விடை எழுதுக ( 10 x 1 = 10 )**

ஒவ்வொரு அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்

**பிரிவு ஆ : இரண்டு பக்க அளவில் விடை எழுதுக ( 5 x 6 = 30 )**

ஒவ்வொரு அலகிலிருந்தும் ஒவ்வொரு வினா “ இது அல்லது அது” என்ற வகையில் அமைய வேண்டும்

**பிரிவு இ : கட்டுரை அளவில் விடை எழுதுக ( 5 x 12 = 60 )**

ஒவ்வொரு அலகிலிருந்தும் ஒவ்வொரு வினா “ இது அல்லது அது” என்ற வகையில் அமைய வேண்டும்